கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர் – 17, இதழ் – 10	புரட்டாசித் திங்கள்	விலை ரூ. 25/–	ஆண்டு சந்தா ரூ. 300/–	தமிழ் மாத இதழ்
Volume - 17, Issue - 10	September 2026	Price Rs. 25/-	Annual Subscription Rs. 300/-	Tamil Monthly



"Delivered by India Post"

www.indiapost.gov.in



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

108 Rooms & Suites | 03 Banquet Halls

[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com

Thiruvasantham
PURE VEG

A Traditional South Indian Pure Vegetarian Restaurant

Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)

DAC™
DREAM ASCEND CONQUER
RHYTHM
BY DAC
MADAMBAKKAM
17 Exclusive Lake Front Villas
3 & 4 BHK Villas
With Clubhouse
₹1.55 Cr
Onwards
250 ACRES OF LAKE
Live
The Resort Life
EVERY DAY WITH DAC
Member
CREDAI
93003 93003
dacdevelopers.com
NEXT TO
ANNAI ARUL SCHOOL
TNRERA/35/LO/2352/2026
DATED 12.06.2026
www.rera.tn.gov.in

hotel saradharam
chidambaram
STAY IN THE HEART OF CHIDAMBARAM!
UNMATCHED LOCATION ADVANTAGE!
Hotel Saradharam
OPPOSITE CHIDAMBARAM BUS STAND
Just Cross the Street!
WALKABLE TO RAILWAY STATION
Less than 1 km Away
WALKABLE TO LORD NATARAJA TEMPLE
Quick & Hassle-free Access
OUR ROOM CATEGORIES
Economy Non-A/C
Deluxe A/C
Premium A/C
Executive A/C
PERFECT FOR EVERY GROUP
Marriage & Family Groups
Pilgrimage Tour Groups
Self-Kitchen Tour Groups
Corporate Delegations
THE SARADHARAM ADVANTAGE
Complimentary Breakfast
Free High-Speed Wi-Fi
Huge Secure Parking
24x7 Hot & Cold Water
GST
Seamless GST Billing
BOOK YOUR GROUP STAY TODAY!
+91 94425 91475
+91 94425 91466
Call directly to check availability and get special group discounts!
#HotelSaradharam #StayinteartofChidambaram
www.hotelsaradharam.com

RK HAPPY NEST
WAY TO YOUR HAPPINESS
PREMIUM
VILLA PLOTS
BUILD YOUR DREAM HOME
IN A PREMIUM GATED COMMUNITY
Gateway to Happiness
APPROVED DTCP APPROVED
DTCP APPROVED
No. 24/2023
APPROVED RERA APPROVED
RERA REGISTERED
No. TN/23/Layout/0256/2024
Book Your Plot Now!
www.rkhappynest.in
EXISTING ROAD
33 FEET ROAD
30 FEET ROAD
33 FEET ROAD
N
W
E
S
PREMIUM GATED COMMUNITY PLOTS
Premium Gated Community Plots
Experience secure & peaceful living in a well-planned community.
North & South Facing Vastu-Compliant Plots Available
Designed for prosperity, positivity and perfect living.
24x7 CCTV Surveillance with Compound Wall on All Sides
Your safety is our priority.
Legally Approved with Clear Land Documents
DTCP & RERA approved layout for your peace of mind.
Ideal for Both Investment & End-Use
High appreciation potential and perfect for your dream home.
Located in a Rapidly Developing Area
Surrounded by growth and great infrastructure.
Easy Bank Loan Assistance Available
Hassle-free loan support for eligible buyers.
Each Plot is Handpicked with Fruit Trees
(Mango, Guava, Lemon, Jackfruit, Coconut, Sapota, Sathukudi, Orange)
Enjoy fresh fruits right at your doorstep.
Beautifully Planted Flowering Trees Along Roads
(Magilam, Kadambam, Panneer, Iruvatchi, Shenbagam, Gulmohar, Cherry Blossom, Sara kkondrai)
A refreshing and colorful environment every day.
PROXIMITY HIGHLIGHTS
PANJAPPUR BUS STAND 8 MINS
NEAR INTERNATIONAL AIRPORT 10 MINS
RAILWAY STATION 15 MINS
NEARBY SCHOOLS & HOSPITALS 10 MINS
RK HAPPY NEST
RK HAPPY NEST
Gift your family a piece of Happiness
NEAR KK NAGAR,
OLAIYUR RING ROAD,
TRICHY – 620 021
A Perfect Place to Live,
A Perfect Place to Grow...
FOR ENQUIRIES CALL
KKR DIGITAL MARKETING
93633 92681 | 63630 92681
www.rkhappynest.in

பதவி உயர்வு வாழ்த்துமடல்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் நான்கு மண்டலங்களில் ஒன்றான கிழக்கு மண்டல அலுவலகத்தில் தலைமை வரைவு அலுவலராக (Head Draughting Officer) (HDO) 29-07-2026 அன்று திருமதி. திருமதி.R.**சிவசங்கரி** அவர்களிடம் பதவி உயர்வு ஆணையை கிழக்கு மண்டல தலைமை பொறியாளர் Er.N.ஜெயக்குமார் M.E., அவர்கள் வழங்கினார்கள்.

திருமதி. R.**சிவசங்கரி** அவர்கள் மறைந்த காட்டுமன்னார் கோவில், தெய்வத்திரு. R. இராமலிங்கம் (முன்னாள் வாரிய அலுவலர்) நலமுடன் R.மணிவாசுகி அவர்களின் அன்புமகள், மயிலாடுதுறை தெய்வத்திரு. G.வைத்தியநாதன்-உஷா தம்பதிகளின் மருமகளும், G.V.கவாஸ்கர் அவர்களின் துணைவியார் ஆவார். திருமதி R.சிவசங்கரி அவர்கள் பொறுப்பேற்றுள்ள அலுவலகத்தில் தொழில் நுட்ப பிரிவில் மிக உயர்ந்த பதவி அதுமட்டுமல்ல தமிழ்நாடு முழுவதுமாக ஆறு பதவிகளில் ஒன்று. சிறுவயதில் மிக உயர்ந்த பதவி பெற்றுள்ள திருமதி.R.சிவசங்கரி அவர்களின் பணி சிறக்க வாழ்த்திட விரும்பும்

தங்கள்,

R. **மணிவாசுகி**
R. **இரத்தினசபாபதி** B.E.,M.B.A.,
Founder & CEO, Rugas Technologies, Bangalore
R. **அருணா இரத்தினசபாபதி** B.E.,
R. **சௌந்தரராஜன்** B.Pharm.,M.S., (UK)Camp : Dubai
B. **திவ்யா சௌந்தரராஜன்** M.Tech.,

G. **ஷிவாலி கவாஸ்கர்**
G.V. **கவாஸ்கர்** B.E., M.Tech.,
Lecturer, AVC Polytechnic College, Mannampandal.
G.V. **ரமேஷ்** B.E.,
Senior Piping Engineer Nesmakent Energy Company KSA
R. **ரதி ரமேஷ்** B.E., M.B.A.,

ரக்ஷிதா இரமேஷ் **சம்ருத் இராமலிங்கம்**
ரித்திஷா இரமேஷ் **ஸ்ரேயாஸ்ரீ சௌந்தரராஜன்**

ADYAR

PADMANABHA NAGAR

2 BHK - 960 sqft
3 BHK-1920 sqft
(Only 2 Flats Available)

- Prime Location
- Stilt + 3 Floors
- Premium Finish with Interior
- Solar Panel with Net Metering

Possession - Oct 2026

Nearing Completion

RAM NAGAR (Madipakkam)

(Near Ramar Temple & Near
Puzhuthivakkam Railway Station

2BHK - 1050 Sqft - Rs.96 L

- CALM RESIDENTIAL AREA
- STILT + 3 FLOORS
- TOTAL 6 FLATS - ALL 2 BHK

- *We undertake* **CONSTRUCTION OF CONTRACT ON TURN-KEY BASIS** *right from Design & Approval.*
- *For profitable* **JOINT VENTURE** *Land owners are invited.*

MALAR FOUNDATIONS

94440 70108 / 70109 41135 / 93637 01080

என்பதாம் ஆண்டு நிறைவு விழா

கயிலை திரு. தி.மா.வைத்தியநாதன்,
கயிலை திருமதி. மைதிலி வைத்தியநாதன்

இவர்களுடைய சதாபிஷேக விழா, 2026ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 9ஆம் தேதி கும்பகோணத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பங்கேற்று ஆசி வழங்கிய ஆன்மீக பெருமக்களுக்கும், மற்றும் மூத்தோர்களுக்கும், ஆசி பெற்ற இளையோர்களுக்கும் எங்கள் அனைவரின் மனமார்ந்த வணக்கங்களும், நன்றிகளும்!

திருமதி அனிதா
திரு ரவிச்சந்திரன்
திருமதி கவிதா
திரு ராஜேஷ் கண்ணன்
திரு விஜய ஆனந்த்
திருமதி சுகன்யா

ஷாஷ்வத், சதேஜஸ், அக்க்ஷரா, அந்தரா & விஷ்வ கைலாக்ஷ்

மணமகன்/மணமகள் தேவை

பெயர்	செல்வன் அவினாஷ் .கு
படிப்பு	B.E., MBA
வேலை	Business (Founder MetXR Studios Pvt. Ltd.) Rs. 7 Lakhs / PA
பிறந்த தேதி	03.06.1997
உயரம்	164 cms
நட்சத்திரம்	பரணி
கோத்திரம்	கானுட
பூர்வீகம்	பழையார்
தகப்பனார்	குமார் .L (Milk Agency)
தாயார்	அகிலா .K Teacher (Pvt.)
முகவரி	13, மெயின் ரோடு செருமாவிளங்கை நெடுங்காடு - 609603 காரைக்கால். 7708468454

பெயர்	செல்வி சௌமியா சபேசன்
படிப்பு	B.Sc. (Agri), M.B.A. (HR)
வேலை	Assistant Manager, ICICI Bank Rs. 3,60,000 Lakhs / PA
பிறந்த தேதி	15.08.2001
உயரம்	166 cms
நட்சத்திரம்	திருவாதிரை
கோத்திரம்	வங்காரமூட
பூர்வீகம்	தர்மநல்லூர் - விருத்தாசலம்
தகப்பனார்	சபேசன் .வா Exchange Manager, Mahindra
தாயார்	தனலட்சுமி .ச இல்லத்தரசி
முகவரி	132/40, கிழக்கு தெரு, தர்மநல்லூர் (அஞ்சல்), கம்மாபுரம் (வழி), விருத்தாசலம் (வ) கடலூர் மாவட்டம் - 606 103 9486432890, 8012226557
விருப்பம்	படித்த பணியில் உள்ள வரன்
குறிப்பு	ராகு கேது தோஷம் உள்ள வரன்

பெயர்	செல்வன் S. RAVEEN KUMAR
படிப்பு	M. Tech., VLSI.,
வேலை	Senior Engineer MNC @ Chennai Rs. 48 lakhs per Annum
பிறந்த தேதி	21.11.1993
உயரம்	175 cm
நட்சத்திரம்	Sathayam
கோத்திரம்	Kanagarayar
பூர்வீகம்	Madurai
தகப்பனார்	A. Sankar Retd Director of School Education
தாயார்	P. Vasanthi Retd Head Mistress Govt HSS School
முகவரி	Plot No. 28 & 29, VGN Highness, Srinivasapuram, Iyyappanthangal, Chennai-600056. Cell : 7845914635/ 9488094635
விருப்பம்	Employed or Employable Good looking girl belongs to respectable family

'கார்காத்தார் ஒப்புரவு' கட்டண விபரம்

ஆண்டு சந்தா	300
ஆயுள் சந்தா (12 ஆண்டுகள் மட்டும்)	2000
மணமகள், மணமகன் தேவை	
கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு)	500
கருப்பு வெள்ளை ¼ பக்கம்	750
கருப்பு வெள்ளை ½ பக்கம்	1500
கருப்பு வெள்ளை முழு பக்கம்	3000
கலர் ¼ பக்கம்	2000
கலர் ½ பக்கம்	4000
கலர் முழு பக்கம்	7000
முன் அட்டை உட்புறம்	8000
பின் அட்டை உட்புறம்	8000
பின் அட்டை வெளிப்புறம்	10000

CHIDAMBARAM SPIRITUAL STAY

146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.

9790292444, 9790215833, 9884004550

முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்

Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available

---

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சிறப்பம்சங்கள் :

- ❖ தனி நபர் கட்டணம் ரூ. 200/– மட்டும்
- ❖ Locker Facility உள்ளது.
- ❖ காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- ❖ காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- ❖ தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- ❖ குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- ❖ 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

இதழின் உள்ளே....

சங்க நிகழ்வுகள்..14 – 24

சிறுவர் பகுதி 25–28

சிங்கார சென்னை வரலாறு............................38–39

மணமகன் / மணமகள் தேவை.......................46–48

கார்காத்தார் ஒப்புரவு

கார்காத்தார் சங்கம் (சென்னை)

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

ஆயுள் சந்தா ரூ. 2000/-

ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **முனைவர் கைலை. சண்முகம்**

ஆசிரியர் : **வனஜா இளங்கோவன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 72/88 காமராஜ் காலனி 8வது தெரு,
(பாளையகாரன் தெரு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

இனிய உறவுகளுக்கு கார்காத்தார் ஒப்புரவின் வணக்கங்களும்! புரட்டாசி மாத வாழ்த்துக்களும்!

ஆகஸ்ட் 15ஆம் நாள் நம் தாய்நாடாம் இந்தியாவின் 80ஆவது சுதந்திர தினம் கோலாகலமாக நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகங்களை நினைவு கூர்ந்து நாடு முழுவதும் அரசு அலுவலகங்கள், கல்விக் கூடங்கள், தனியார் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளிலும் கொடியேற்றி, இனிப்பு கொடுத்து, கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தில்லியில் முகலாயப் பேரரசர் ஷாஜகானால் கட்டப்பட்ட செங்கோட்டையில் இந்தியாவின் பிரதமர் உயர்திரு நரேந்திர மோடி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இது அவரது 13ஆவது சுதந்திர தின உரையாகும்.

சென்னையில் முதல்வர் விஜய் அவர்கள், தலைமைச் செயலக வாயிலில் உள்ள கோட்டை கொத்தளத்தில், அணிவகுப்பு மரியாதையை ஏற்ற பின், தேசியக் கொடியேற்றி, கொடி வணக்கம் செலுத்தி தனது முதல் சுதந்திர தின உரையை நிகழ்த்தினார். பின் சாதனையாளர்களுக்கு விருது வழங்கி சிறப்பித்தார். தமிழக அரசின் தகைசால் தமிழர் விருதினை, தமிழக காங்கிரஸின் முன்னாள் தலைவர் கிருஷ்ணசாமி அவர்களுக்கு வழங்க, பா.ம.க. சட்டசபை குழு தலைவரான அவரது மகள் சவுமியா அன்புமணி எழுந்து நின்று, மகிழ்ச்சியுடன் ரசித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 22ஆம் நாள் சென்னை தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளில் பாரம்பரிய நடைப்பயணம், கண்காட்சிகள் மற்றும் பண்பாட்டு கலைநிகழ்ச்சிகள் மூலம் சென்னையின் தொன்மை வரலாறு சிறப்பிக்கப்படுவதுடன், மக்களுக்கும் எடுத்துரைக்கப்படுகிறது.

குழந்தை பிறப்பின் விகிதம் குறைந்து வருவதால், ஆந்திரா, தமிழ்நாடு அரசுகள் மூன்றாவது குழந்தைக்கு சலுகைகள் அறிவித்துள்ளன. தமிழக அரசு மூன்றாவது குழந்தை பெற்ற பெண் ஊழியர்களுக்கு 12 வாரங்களாக இருந்த மகப்பேறு விடுப்பை ஓராண்டாக உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

2026 ஸ்காட்லாந்து, கிளாஸ்கோவில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டியில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா நாடுகளை அடுத்து நம் பாரதம் 39 பதக்கங்களை

வென்று நான்காவது இடத்தில் உள்ளது என்பது பாராட்டுக்குரியது. 2030ல், 24ஆவது காமன்வெல்த் திருவிழா, நமது நாட்டின் ஆமதாபாத்தில் நடைபெற உள்ளது. நிறைவு விழாவில், இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸிற்குப் பதிலாக பங்கேற்ற எடின்பர்க் இளவரசர் எட்வர்ட் கிளாஸ்கோ காமன்வெல்த் போட்டி நிறைவு பெற்றதாக அறிவித்ததுடன், 24ஆவது காமன்வெல்த் போட்டியைக் கொண்டாட வரும்படி அனைத்து தடகள நட்சத்திரங்களுக்கும் அழைப்பு விடுத்தார். விழாவில் காமன்வெல்த் போட்டிகளின் கொடியை, இந்தியன் ஒலிம்பிக் குழுவின் தலைவி P.T. உஷா மற்றும் குஜராத் மாநிலத்தின் துணை முதல் மந்திரி சாங்க்வி அவர்களும் நமது இந்திய வீரர் நீரஜ்சோப்ராவிடம் அளித்தனர். விளையாட்டின் இறுதி நிகழ்ச்சியில் ஸ்காட்லாந்து தேசத்தின் இசையும், நம் தேசத்தின் கலாச்சார நிகழ்ச்சியும் அனைவராலும் கண்டுரசிக்கப்பட்டது. நிகழ்ச்சி ஒற்றுமை, நட்பு, உபசரிப்பு போன்ற உயர்ந்த பண்புகளுக்கோர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

பழம்பெரும் நடிகை திருமதி. சௌகார் ஜானகி அவர்கள் தனது 94ஆவது வயதில் காலமானார். நடிப்புக்கோர் களஞ்சியமாக விளங்கியவர். முதலில் குடும்பப் பாங்கான பாத்திரங்களிலேயே நடித்து வந்தவர், புதிய பறவை படத்திலிருந்து பலவிதமான படங்களிலும், தனது சிறந்த நடிப்புத் திறமையால் மக்களின் மனதைக் கவர்ந்தவர். அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

நன்றி! வணக்கம்!

* முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பப்பட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பப்பட வேண்டும்.**

Online fund Transfer Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு"** Whatsapp No. 8248449204**க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள்** update **செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் ***கார்காத்தார் ஒப்புரவு,***
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

தி கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்)

(சென்னை கார்காத்தார் சங்கம்)

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு, சூளைமேடு,
சென்னை – 600 094

பொதுக்குழு கூட்ட அறிவிப்பு

அன்புடையீர் வணக்கம்.

நமது சங்கத்தின் 104வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் 26.09.2026, சனிக்கிழமை காலை 10.30 மணியளவில், ஊர்வசி அரங்கம், பாம்குரோவ் ஹோட்டல், எண். 13, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034ல் நடைபெறவுள்ளது. சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாது விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

18.08.2026 **முனைவர் கைலை.சண்முகம்**
சென்னை – 600 094 செயலாளர்

வேலை வாய்ப்பு அறிவிப்பு

சென்னை சூளைமேடு கார்காத்தார் இல்ல வளாகத்தில் செயல்பட்டு வரும் கார்காத்தார் ஒப்புரவு அலுவலகத்தில் பணியிடம் நிரப்பப்பட உள்ளது. கணினியில் பயிற்சி பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஓய்வு பெற்ற அலுவலர்களும் விருப்பமிருப்பின் விண்ணப்பிக்கலாம். வெளியூரிலிருந்து வரும் மகளிர்க்கு தங்குமிட வசதி செய்து தரப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட நமது சங்க முகவரிக்கு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

- கைலை. சண்முகம்
செயலாளர்,
சென்னை கார்காத்தார் சங்கம்.

முகவரி: **கார்காத்தார் இல்லம்**, 64, சௌராஷ்டிரா நகர்,
10–வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி: 044–24724882 அலைபேசி: 82484 49204

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

பாராட்டுகிறோம்

கார்குல இளம் பயிற்சி மருத்துவர் டாக்டர் ஆகாஷ் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்து பாராட்டி மகிழ்கிறோம்.

கார்குலத்தை சேர்ந்த கருவாழக்கரை மேலையூர் காலம் சென்ற திரு சிவனேசன் – நலமுடன் திருமதி சரோஜா தம்பதியரின் இளைய மகன் மற்றும் சென்னை தாம்பரம் திரு. கிருஷ்ணமூர்த்தி – திருமதி பார்வதி தம்பதியரின் மருமகன் – மகள், திரு. பாபு – திருமதி கவிதா (மதுரையில் Sunshine Group of Companies என்ற நிறுவனத்தை நிறுவி அதில் Lava மொபைல்ஸ், HP Laptops, எழுதுபொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் முன்னணி நிறுவனங்களின் விநியோகஸ்தராக தொழில் புரிந்து வருபவரும் (கார்குல தொழில் முனைவோர் சங்க உறுப்பினரும்) தம்பதியரின் மகன்கள் டாக்டர் ஆகாஷ் மற்றும் செல்வன் ஆதர்ஷ், சென்ற ஜூலை மாதம் லாவா மொபைல் நிறுவனத்தின் தென்னிந்திய அளவில் வியட்நாமில் 100க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்களுடன் நடைபெற்ற மாநாடு மற்றும் சுற்றுலாவில் கலந்துகொண்டனர். இந்த செய்தி தினசரி மற்றும் ஊடகங்கள் மூலம் நமக்கு தெரியவந்தது.

இந்த மாநாட்டின் நான்காம் நாள் Phq Quoc என்ற தீவில் இவர்கள் சென்ற படகிற்கு முன்னால் சென்ற படகு விபத்துக்குள்ளாகி நடுக்கடலில் மூழ்கியது. அப்படகில் பயணம் செய்த தமிழகம், கர்நாடகா மற்றும் ஆந்திரபிரதேசத்தை சார்ந்த 32 பயணிகள் கடலில் மூழ்கி மிக ஆபத்தான சூழ்நிலையில் குற்றுயிருடன் மீட்கப்பட்டு கரையில் கிடத்தப்பட்டனர். அச்சமயம் நமது கார்குல இளம் மருத்துவர் டாக்டர் ஆகாஷ் (தற்பொழுது பாண்டிச்சேரி வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரியில் House Surgeon ஆக பணி புரிகிறார்.) உடனடியாக துரிதமாக செயல்பட்டு, விபத்தில் கடலில் மூழ்கிய பயணிகளுக்கு CPR எனும் முதலுதவியை அளித்தும், உடனிருந்தோருக்கும் பயிற்சி அளித்து அவர்களையும் முதலுதவி செய்ய ஈடுபடுத்தி, பெரும்பாலானவர்களின் உயிர் மீட்க போராடிய நிகழ்வு மிகப் பாராட்டத்தக்கது. விபத்தில் 15 பேர் உயிரிழந்த நிலையில் இரண்டு பயணிகள் இப்பயிற்சி மருத்துவரின் முதலுதவியால் மீட்கப்பட்டு, பின்னர் உரிய மருத்துவ சிகிச்சைக்குப் பின்னர் நலமுடன் தாயகம் திரும்பியது குறிப்பிடத்தக்கது. இம்மிகப்பெரிய விபத்து நடந்த இடத்தில் மனம் தளராமல் தனது முயற்சியை இறுதிவரை கைவிடாமல் உயிர் காக்க போராடிய நம் கார்குல இளம் மருத்துவர் Dr. ஆகாஷ் அவர்களது செயல் அளப்பரியது. KKR மற்றும் கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் சார்பில் அம்மருத்துவரையும் அவரது குடும்பத்தாரையும் வாழ்த்தி பாராட்டி மகிழ்கிறோம்.

முனைவர் K. ராஜசுந்தரம் பிள்ளை @
KKR K சுரேஷ், தலைவர்

✣ ✦ ✣

நங்கநல்லூர்:

சங்கத்தின் செயற்குழு மற்றும் மகளிரணி கூட்டம் 26.07.2026 அன்று தலைவர் திரு. கோ. தியாகராஜன் அவர்கள் தலைமையில் சங்க கட்டிட அலுவலகத்தில் நடைபெற்றது. ஆலோசகர் திரு. வெ. சண்முகசுந்தரம் அவர்களின் பெரியபுராண வரிகளுடன் கூட்டம் இனிதே துவங்கியது. சென்ற மாத அறிக்கை செயலாளர் திரு. வே. கண்ணன் அவர்களால் வாசிக்கப்பட்டது. வாணுவம்பேட்டையில் வசித்து வந்த நமது சங்க உறுப்பினர் திரு. S. ஆறுமுகம்பிள்ளை (பூர்வீகம் சிதம்பரம்) அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. சங்கத்தின் சார்பில் ஏற்பாடு

செய்யப்பட்ட காந்தலூர் (கேரளா) சுற்றுலாவை திறம்பட நடத்திக்கொடுத்தமைக்கு திரு. K.R. கார்த்திகேயன் மற்றும்தலைவர்திரு.கோ.தியாகராஜன்அவர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. 19.07.2026 அன்று மூத்த உறுப்பினர் திரு. சிவகுமாரன் – சாவித்திரி ஆகியோரது பெயர்த்தி குமாரி. வர்ஷா சுந்தரராஜன் அவர்களது பரதநாட்டிய அரங்கேற்றத்தில் (சென்னை ராணி சீதை ஹால்) திரளாக பங்குபெற்ற சங்க உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. நமது குலத்தை சேர்ந்த திருநெல்வேலி மேயர் திரு. கிட்டு அவர்கள் தாக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. நமது சங்க முகவரி கையேட்டை புதுப்பித்து புதிய முகவரி கையேடு வெளியிட முடிவு செய்யப்பட்டது. செயற்குழு உறுப்பினர் திரு. தில்லை கோவிந்தன் அவர்களது புதல்வன் திரு. தீபக் அவர்களின் பிறந்தநாள் மற்றும் திருமண நாளை முன்னிட்டு மாலை சிற்றுண்டி வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. அனைவருக்கும் இரவு உணவு வழங்கிய பொறியாளர் (ஓய்வு) திரு. கோ. இளங்கோவன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. BM சொர்ணமூர்த்தி அவர்களின் நன்றியுரையை தொடர்ந்து இரவு உணவிற்குபின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

வே. கண்ணன், செயலாளர்

அண்ணாநகர்:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் அண்ணா நகரில் உள்ள ஆடிட்டர் திரு. முத்தையா அவர்கள் அலுவலகத்தில் 16.8.26 அன்று தலைவர் ஜெ.கோபால கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுக்குழு கூட்டம் அக்டோபர் மாதம் 2ஆம் தேதி காந்திஜெயந்தி அன்று நடத்த தீர்மானிக்கப் பட்டது.

சிறப்பு விருந்தினராக டாக்டர் J. பழனி, M.S. Ortho அவர்களையும் மற்றும் மனிதநேயம் T.N. முத்துக்குமாரசாமி ஆகியோரை அழைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

பொதுக்குழு முடிந்தபின் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் நம் சங்கத்தில் உள்ள இளைய தலைமுறைக்கு ''செயற்கை நுண்ணறிவு'' [A.I.] பற்றி ஓர் வகுப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டது. இணைச் செயலாளர் திரு. V. இராஜசேகர் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

J. கோபாலகிருஷ்ணன், தலைவர்

குரோம்பேட்டை:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 09.08.2026 அன்று தலைவர் திரு. தியாகராஜன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த ஆண்டு மங்கல சந்திப்பு நிகழ்ச்சி மற்றும் ஆண்டு விழாவை சிறப்பாக நடத்துவது பற்றி விவாதிக்கப்பட்டு, டிசம்பர் மாதம் கடைசி ஞாயிறு 27.12.2026 அன்று மங்கல சந்திப்பு நிகழ்ச்சி காலை 8.30 மணி முதல் பிற்பகல் 12.30 வரை அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணி முதல் ஆண்டு விழா நடத்தவது என முடிவு செய்யப்பட்டது.

மங்கல சந்திப்புக்கான விவரம் அடுத்த மாத ஒப்புரவு இதழில் வெளியிடப்பட உள்ளது.

கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் இனிப்பு காரம் தேநீர் தலைவர் குடும்பத்தினரால் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

நிறைவாக செயலர் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

I. தீபன், செயலாளர்

போரூர்

சங்க செயற்குழு கூட்டம் 19.8.2026 அன்று திரு. இளங்கோ அவர்கள் அலுவலகத்தில் நடைபெற்றது. அவ்வமயம் 20.9.2026 அன்று நடைபெறும் போரூர் கார்காத்தார் சங்க 11ஆம் ஆண்டு விழாவையும், மங்கல சந்திப்பு நிகழ்ச்சியையும், சிறப்பாக நடத்துவது என்றும், திரு. ஜோதிடர் ராமநாதன் அவர்களை மங்கல சந்திப்பு நிகழ்ச்சிக்கு அழைப்பது என்றும், சங்க ஆண்டு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக திரு. Dr. S.R. சுபஸ்ரீ அவர்களை அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும் சங்க செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் முன்னரே வந்திருந்து மங்கல சந்திப்பு நிகழ்ச்சியையும், ஆண்டு விழாவையும், சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் சங்க உறுப்பினர்கள் அனைவரும் குடும்பத்துடன் வந்திருந்து விழாவை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம். நன்றி!

S. சந்திரமோகன், செயலாளர்

பெருங்களத்தூர்:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 22.08.2026 அன்று தமிழ்த்தாய் வாழ்த்துடன் தலைவர் ஆர். கார்த்திகேயன் தலைமையில் துவங்கியது. சங்கத்தின் பொதுகுழு மற்றும் எட்டாவது ஆண்டுவிழா 02.01.2027 அன்று நடத்தவும், விளையாட்டு போட்டிகளை 25.12.26 அன்று நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது. சங்கத்தின் துணைதலைவர் திரு. எஸ். சீனிவாசன் 2027 காலண்டர் அச்சிடுவதற்கு ஏற்ப விளம்பரங் களை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டார்கள். மேலும் CREW அறக்கட்டளைக்கு இதுவரை ஒன்பது விண்ணப்பங்கள் கல்வி உதவித்தொகை பெறுவதற் காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதை தெரிவித்தார்கள். அதனை ஏற்று உதவித்தொகை வழங்க CREW அறக்கட்டளை நிர்வாகத்தை கேட்டுக்கொள்ளப் பட்டது. 01.04.2026 முதல் 20.08.2026 வரையிலான வரவு செலவு இருப்பு கணக்குகள் படிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. செயற்குழு உறுப்பினர்கள் திருமதிகள் ஆர். சுமதி மற்றும் கே. சங்கரி ஆகியோர் சென்னை ஆதம்பாக்கத்தில் நடைபெற்ற மகளிர் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்ததை பாராட்டி பதிவு செய்யப்பட்டது. திருமதி ஆர். சுமதி விழா நிகழ்ச்சிகளை விவரித்துக் கூறி குறிப்பாக நமது கார்குல மகளிர் தொழில் முனைவோர்களாகவும் பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு நமது கலாச்சாரத்தை கடைப்பிடிக்க வலியுறுத்த முன்வர வேண்டும் என்று கூறப்பட்டதை எடுத்துக்கூறினார்கள். இன்றைய கூட்டத்தில் இரண்டு புதிய கார்குல குடும்பங்கள் உறுப்பினர்களாக சங்கத்தில் இணைந்தனர். செயற்குழு உறுப்பினர் திரு. எஸ். ரவீந்திரன் நன்றி நவில அனைவரும் இணைந்து தேசிய கீதம் பாட கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கோ. ராஜகோபாலன், செயலாளர்

✤ ✦ ✤

புதுச்சேரி:

21.7.26 அன்று நம் கார்குலத்திற்கே உரிய, பாரம்பரிய மகளிர் மட்டுமே இரவில் வழிபாடு செய்யும், செவ்வாய் பிள்ளையார் வழிபாடு, புதுச்சேரி நகரத்தில் உள்ள நம் கார்குல மகளிர் அணி ஏற்பாட்டில் சுமார் 15 மகளிர், திருமதி மலர்க்கொடி தமிழ்ச்செல்வன் வீட்டில் இரவு வழிபாடு நடத்தினர்.

03.08.26 அன்று ஆடி 18ஆம் பெருக்கு விழா, புதுவை மகளிர் அணி சார்பில் மிக சிறப்பாக கொண்டாப்பட்டது. புதுவை பக்கத்தில் உள்ள திருகாஞ்சி, கீழ் அக்ரஹாரத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்காவராக நந்தீஸ்வரர் ஆலய வளாகத்தில் உள்ள, சங்கராபரணி ஆற்றுப் படித்துறையில், படையல் செய்து வழிபட்டனர். மஞ்சள் கயிறு கட்டி கொண்டனர். பின்னர், அவர்கள் தனித்தனியாக எடுத்து வந்த கலந்த சாதம் (Variety rice) ஆற்று மண்டபத்தில் வைத்து, வந்திருந்த சொந்தங்களுக்கு பரிமாறி, அனைவரும் சாப்பிட்டு மகிழ்ந்தனர்.

03.08.26 அன்று மாத கூட்டம், ஆற்று மண்ட பத்தில் தலைவர் திரு. J. ராஜன்பாபு தலைமையில் நடைபெற்றது. வந்திருந்த அனைவரையும் திருமதி C. ஜெயலட்சுமி, மகளிர் அணி செயலாளர் அவர்கள் வரவேற்றார்கள். 20.09.26 அன்று நடக்கும் ஆண்டு விழாவிற்கான (Return Gift) வழங்குவது பற்றி கலந்து முடிவு எடுக்கப்பட்டது. முடிவில் திருமதி T. மலர்க்கொடி நன்றி உரையுடன் கூட்டம் இனிதே முடிந்தது. நன்றி.

P.S. தமிழ்ச்செல்வன், செயலாளர்

✤ ✦ ✤

செந்துறை:

சங்கக் கூட்டம் 02.08.2026 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் மண்டலத் தலைவர் திரு. R. ரவீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்கச் செயலாளர் திரு. S. ஜெயராமன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

மண்டலத் தலைவர் திரு. R. ரவீஸ்வரன், இந்த ஆண்டு கல்லூரியில் புதிதாக சேர்ந்தவர்களும், ஏற்கனவே CREW மூலம் கல்வி உதவித்தொகை பெறுபவர்களும், உடனடியாக உதவித்தொகை வேண்டி CREW அறக்கட்டளைக்கு Application அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செந்துறை வ.உ.சி. இளைஞர் அணியைச் சேர்ந்தவரும், “சிவமணி Ro சிஸ்டம் & கெமிக்கல்ஸ்”ன் உரிமையாளருமான திரு. ம. சுவாமிநாதன் அவர்கள் செந்துறை ரோட்டரி சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார். அவரது பணி சிறக்க செந்துறை கார்காத்தார் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

இறுதியாக திரு. ப. சுரேஷ் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது. நன்றி!

சா. ஜெயராமன், செயலாளர்

✤ ✦ ✤

கடலூர்

சங்கத்தின் 45ஆம் ஆண்டு விழா 16.08.2026 நாள் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. முன்னதாக மகளிரணி சார்பில் தலைவி, செயலாளர், விளையாட்டு போட்டிகளை நடத்தினர். வெற்றி பெற்ற 9 பேர் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆண்டு விழாவின் துவக்கமாக மகளிரணி யினர் இறைவணக்கம் பாடினர். அடுத்து மகளிர் குத்து விளக்கு ஏற்றிய பின் திரு. தங்க சிவப்பிரகாசம் சுவாமிகள் பூஜை செய்து ஆன்மீக உரையாற்றினார்.

ஆண்டு விழாவிற்கு சங்கத் தலைவர் திரு. T. விவேகானந்தன் தலைமை ஏற்றார். சங்க கட்டிடக் குழுத் தலைவர் திரு. Rtn. Er. S. பிறையோன் மற்றும் சங்க கௌரவத் தலைவர் திரு. Rtn. Dr. T.S. விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திரு. S. சபாநாயகம் அனைவரையும் வரவேற்றார். தலைமை உரையில் சந்தா தொகையினை உயர்த்தவும் பெருமளவில் சங்க இளைஞர்கள் விழாவில் கலந்து கொள்ளவும் கேட்டுக்கொண்டார்.

திரு. B. சிவமணி, திருமதி. R. பானுமதி ஆண்டறிக்கைகளைப் படித்தனர். திரு. G. பாலமுருகன் நிதிநிலை அறிக்கைகளை வாசித்து ஏற்பளிப்பு பெற்றார். மருத்துவர் திரு. Dr. ப. அருண்பிரசாத் (இதய நோய் நிபுணர்) சிறப்புரை ஆற்றினார்.

கட்டிடக் குழுத் தலைவர், கௌரவத் தலைவர் சேமிப்பு திட்டங்களில் புதியவர்கள் சேர்ந்து சங்க நிதியை வலுப்படுத்த கேட்டுக்கொண்டார். சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து உள்ளவர்களுக்கு ரூ. 32,000/– மதிப்பில் ஊக்க பரிசுகள் வழங்கப்பட்டது. விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. திரு. T. முருகானந்தம் விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியுரை ஆற்றினார். மதிய அறுசுவை உணவுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

T. விவேகானந்தன், தலைவர்

காட்டுமன்னார்கோயில் ஒன்றியம்:

சங்க 44ஆம் ஆண்டு கூடிமகிழ்தல் விழா 02.08.2026 அன்று லலிதா மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இறைவணக்கம் தொடங்கி மகளிரால் திருவிளக்கு ஒளியூட்டப்பட்டு சிதம்பரம் மண்டலத் தலைவர் திரு. R. பத்மநாபன் அவர்கள் தலைமையிலும், திருமதி. S. லலிதா அம்மையார், திரு. S. ஜெயசீலன், திரு. T.S. பாலசுந்தரம் ஆகியோர் முன்னிலையில் துவங்கியது.

மகளிரணி செயலர் திருமதி. S. விஜயலட்சுமி அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தார். செயலர் திரு. R. ஞானம் அவர்கள் ஆண்டறிக்கையையும் பொருளாளர் திரு. V. இராமகிருஷ்ணன் அவர்கள் வரவு செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர்.

விழாத்தலைவர் திரு. R. பத்மநாபன் கார்குல வள்ளல் அவர்களின் நற்செயல்களை வெகுவாக பாராட்டி பேசினார். துணைத்தலைவர் திரு. S. ஜெயசீலன் வாரிசுகளின் எதிர்கால கல்வி, சிறந்த துறைகள், பெற்றோர் கடமை பற்றி உரையாற்றினார்.

மண்டலச் செயலாளர் திரு. R. துரைப்பிள்ளை சிதம்பரம் சங்க கௌரவ தலைவர் பேராசிரியர் திரு. S. நடனசபாபதி, பொருளாளர் Dr. திரு. V.R. பாஸ்கரன், செயலர் திரு. M.G. ரவிச்சந்திரன், துணைத்தலைவர் திரு. S. பூங்குன்றன், குமராட்சி ஒன்றிய சங்க தலைவர் திரு. A.G. சிவராமன், செயலர் திரு. S. இராமச்சந்திரன், திருமதி. R. திலகம் ஆகியோர்கள் கார்குல வள்ளல், விவசாயம் நமது பாரம்பரியம் ஆகியவை பற்றி விளக்கினார்கள். சிதம்பரம் மகளிரணி தலைவி திருமதி. S. சாந்தி சிவக்குமார் மகளிரணி குறித்தும் பேராசிரியர் திரு. Dr. N. சண்முகம் ஆன்மிகம் குறித்தும் உரையாற்றினார்கள்.

செயற்குழு உறுப்பினர் திரு. M. கலியமூர்த்தி மகளிரணி தலைவி திருமதி B. திரிபுரசுந்தரி, இளைஞர் அணித் தலைவர் திரு. S. மோகன்குமார் ஆகியோரின் பாராட்டு உரைக்கு பின் விருந்தினர்கள் அனைவரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். இவ்வாண்டு பணி ஓய்வு பெற்ற திரு. S. செந்தில்வேலன் திரு. R. இரமேஷ் அவர்களும் பாராட்டப்பட்டனர்.

80 வயது பூர்த்தி அடைந்து 1000 பிறை கண்ட திரு. M. கலியமூர்த்தி திரு. R. பஞ்சாட்சரம் அவர்களையும் கௌரவித்து ஆசி பெற்றோம். 10 மற்றும் 12ஆம் வகுப்பில் முதல் இரண்டு இடம் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பொற்கிழி வழங்கி ஊக்குவித்தோம்.

ஒன்றியத்தில் இறைவனடி சேர்ந்த நம்குல மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இணைச்செயலர் திரு. K. இராஜீ அனைவருக்கும் நன்றி கூறினார். இளைஞர் அணி மற்றும் மகளிரணி முயற்சியால் அரங்கமும் அனைவர் உள்ளமும்

நிறைந்த வேளையில் இனிய உணவளித்து மகிழ்ந்து நிகழ்ச்சியை நிறைவு செய்தோம்.

R. ஞானம், செயலர்

குமராட்சி ஒன்றியம்:

சங்க மண்டபத்தில் **11.08.2026** அன்று பேராசிரியர் Dr. S. ஞானகுமார் Ph.D. வழிகாட்டுதல்படி சுமார் **40** மகளிர் கூடி விளக்கு பூஜை நடத்தினர். மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டி ஒன்றிய பொருளாளர் திருமதி. R. திலகம் மற்றும் கீழ்அதங்குடி திருமதி. சுந்தரி தில்லை கோவிந்தராஜன் தலைமையில் சிறப்பாக விளக்கு பூஜையும், சக்தி வழிபாடும் நடந்தது. பூஜை முடிந்ததும் மெய்யன்பர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. விழா முடிவில் ஆயிரம் பிறைகண்ட ஐந்து தம்பதிகள் சிறப்பிக்கப்பட்டு, அவர்கள் அனைவரையும் ஆசீர்வதித்தனர்.

05.08.2026 அன்று குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்க தலைவர் திரு. A.G. சிவராமன் பிள்ளை – திருமதி. S. சாந்தகுமாரி இவர்களுக்கு சிதம்பரம், கனகசபை நகர், சிவகாமி அம்மை அரங்கத்தில் சதாபிஷேக விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகளுக்கு குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

S. இராமச்சந்திரன் பிள்ளை, செயலாளர்

சீர்காழி:

செயற்குழு கூட்டம் சங்கக் கட்டிடத்தில் **1.8.26** மாலை **6.00** மணி அளவில் சங்கத்தலைவர் C. அகோரம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆகஸ்ட் **15** அன்று சுதந்திர தின விழா சங்கத்தில் கொண்டாடுவது என தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக திரு. L. செந்தில்குமார் பிள்ளை அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

ஆகஸ்ட் **15** அன்று மாலை சங்கக் கட்டிடத்தில் LKG முதல் +2 வரை படிக்கும் ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

1.	S. ஸ்ரீதர்	IIIrd Std.	Rs. 2000/-
2.	V. ரக்ஷிதா	IVth Std.	Rs. 3000/-
3.	P. மோளவன்	VIth Std.	Rs. 3000/-
4.	B. சஞ்சனா	IXth Std.	Rs. 3500/-
5.	S. கார்த்திகேயன்	Xth Std.	Rs. 4500/-
6.	R. வர்ஷா	Xth Std.	Rs. 4500/-
7.	S. கோபிநாத்	Xth Std.	Rs. 4500/-
8.	ஆனந்த ஸ்ரீ கோகுல கிருஷ்ணன்	Xth Std.	Rs. 4500/-
9.	S. ஸ்ரீவதி	XIth Std	Rs. 4500/-
10.	S. பிரித்திகா	XIth Std.	Rs. 4500/-
11.	G. சர்வேஸ்வரன்	XIth Std.	Rs. 4500/-
12.	M. வேதிகா	XIth Std.	Rs. 4500/-
13.	M.S. விமலேஷ்	XIth Std.	Rs. 4500/-
14.	N. ஹேமதர்சினி	XIth Std.	Rs. 4500/-
15.	M. ஸ்ரீமுகுந்தன்	XIIth Std.	Rs. 5000/-
16.	A. கிருத்திகா	XIIth Std.	Rs. 5000/-
17.	M. சக்திவேல்	XIIth Std.	Rs. 5000/-
18.	R. அன்விக்ஷா	XIIth Std.	Rs. 5000/-
19.	S. தர்ஷினி	XIIth Std.	Rs. 5000/-
20.	M. ரித்தீஸ்	XIIth Std.	Rs. 5000/-
			Rs. 86,500/-

1. திரு. M.A. சீனிவாசன் பிள்ளை கல்வி உதவித் தொகையிலிருந்து S. கவிச்சரன் IXth Std. மாணவனுக்கு **5000/–** வழங்கப்பட்டது.
2. திரு. கி. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் ஹேமபிரகாஷ் IXth Std. மாணவனுக்கு **5000** வழங்கப்பட்டது.

கல்வி உதவித்தொகையாக மொத்தம் **96,500** (தொன்னூற்று ஆறாயிரத்து ஐநூறு) வழங்கப்பட்டது.

S. ரவிச்சந்திரன், செயலர்

மணிக்கிராமம்:

சங்கத்தின் **23**வது ஆண்டு நிறைவு விழா **9.8.26** அன்று தெற்கு தெருவில் உள்ள M.M.S. இல்லத்தில் நடைபெற்றது. மகளிர் அணியினர் குத்துவிளக்கு ஏற்றினர். திரு. M. நடேசன்பிள்ளை (காவல்துறை ஆய்வாளர் ஓய்வு) கொடி ஏற்றினார். திருமதி. சிந்தாமணி இறைவணக்கம் பாடினார். திருமதி. லதா கண்ணன் வரவேற்புரை ஆற்றினார்.

சங்க தலைவர் திரு. G. அன்பழகன் தலைமை உரையில் கார்குல பெருமை பற்றியும் கார்காத்தார் ஒப்புரவு அவசியம் பற்றியும் பேசினார். திரு. செயலர் T. கபிலன் ஆண்டறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. S. பரமநாதன் வரவு செலவு கணக்குகளை படிக்கவும் அதை விழா குழுவினர் ஏற்றுக்கொண்டனர்.

மண்டலத் தலைவர் திரு. M. சிங்காரவேலன் அவர்கள் பணி நிறைவு பெற்ற திரு. J. மோகன், உதவி மேலாளர் யூனியன் பேங்க் ஆப் இந்தியா திருவாரூர் மற்றும் உறுப்பினர் திருமதி. சிந்தாமணி விஜயகுமார் பட்டதாரி ஆசிரியர், சீனிவாசா மேல்நிலைப்பள்ளி மேலையூர் இருவரையும் பாராட்டி பேசினார். அவர்களுக்கு சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர்.

வாழ்த்துரை – திரு. S. தர்மதுரை பிள்ளை – கிராம தலைவர் மணிக்கிராமம்; திரு. S. சண்முகம் பிள்ளை, மயிலாடுதுறை மண்டல தலைவர்; திரு. M. சிங்காரவேலன் பிள்ளை, சீர்காழி மண்டல தலைவர்; திரு. K. இராமநாதன் பிள்ளை, செம்பொன் மண்டல தலைவர்; திரு. S. சீனிவாசன் பிள்ளை, மயிலாடுதுறை மண்டல செயலர்; திரு. L. ராமசெல்வம் பிள்ளை, செம்பொன் மண்டல செயலர்

மேற்கண்ட அனைவரும் சங்க நிகழ்வுகளை பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. V. மாணிக்கவேல் பிள்ளை உதவி கல்வி அலுவலர் (ஓய்வு) குடவாசல் திருவள்ளுவரை பற்றியும் திருக்குறள் பற்றியும் பேசிவிட்டு திருக்குறள் ஒப்புவித்த மாணவர்களுக்கு ரூ. 1000/– பரிசு கொடுத்தார்கள். கல்வி நிதியும் அளித்தார்கள். காலை 9 மணிக்கு மகளிர்களுக்கு கோலப் போட்டி, ஓவியப்போட்டி, லக்கி கார்னர் நடைபெற்றது. அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு கொடுக்கப்பட்டது. போட்டி நிகழ்வுகளை திருமதி. இராஜலட்சுமி பரமநாதன் நடத்தி முடித்தார். ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவிதொகை வழங்கப்பட்டது. காலை 11 மணிக்கு பிஸ்கட் தேநீர், மதியம் 1 மணிக்கு விருந்து வழங்கப்பட்டது.

இறுதியாக திருமதி. ரம்யா சுவாமிநாதன் நன்றியுரை ஆற்ற வருகைபுரிந்த அனைவரும் நாட்டுப்பண் பாடினர். கூட்டம் இனிதே முடிந்தது.

கோ. அன்பழகன், தலைவர்

இளந்தோப்பு:

14.7.2026 அன்று சங்க கூட்டம் சிவன் கோவில் வளாகத்தில் நடைபெற்றது. தலைமை மண்டல செயலாளர் திரு. எஸ். சீனிவாசன் பிள்ளை; முன்னிலை எஸ். சபாநாயகம் பிள்ளை வகித்தனர். திரு. சபாநாயகம் பிள்ளை அவர்கள் விவசாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

தலைவர் திரு. V. ராமமூர்த்தி பிள்ளை அவர்கள் ஸ்ரீ விநாயகர் ஆலய எட்டாம் ஆண்டு சம்போத்திரா சிறப்பாக நடைபெற்றதற்கு அனைவருக்கும் நன்றி தெரிவித்து, அதற்குரிய வரவு, செலவு கணக்கை சமர்ப்பித்தார். செயலாளர் திரு. V. குருநாதன் அவர்கள் நன்றி கூற இம்மாத கூட்டம் இனிதே முடிவுற்றது. நன்றி.

V. குருநாதன், செயலாளர்

12.08.2026 அன்று சங்க கூட்டம் நடைபெற்றது. தலைமை Er. R. சபரிராஜன் பிள்ளை, முன்னிலை T. ரவிபிள்ளை. தலைவர் V. ராமமூர்த்தி அவர்கள் பேசுகையில், 26.8.26 அன்று நடைபெற இருக்கும் ஸ்ரீ வாழைமுடை அய்யனார் ஆலயத்தின், இரண்டாம் ஆண்டு ஸம்வத்ராபிஷேகத்தை முன்னிட்டு மருனானிகள், இளந்தோப்பு & பட்டவர்த்தி கிராமவாசிகள் இணைந்து நடத்துவது என ஏகமனதாக முடிவு செய்யபட்டது. இம்மாத கூட்டம் இனிதே முடிவுற்றது. திரு. கார்த்திகேயன் பிள்ளை நன்றி கூறினார்கள்.

திரு. M. கோவிந்தன் பிள்ளை மனைவியும் திரு. முத்துக்குமரன் & திரு. பாலமுருகன் இவர்களது தாயாருமான திருமதி. G. கஸ்தூரி மறைவிற்கு 2 நிமிடம் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

V. ராமமூர்த்தி, தலைவர்

மயிலாடுதுறை:

02.08.2026 அன்று மகளிர் அணி இறைவணக்கத்துடன் இணைச்செயலர் வரவேற்புரையுடன் செயலர் மற்றும் பொருளர் இருவரும் அறிக்கைகளை பதிவு செய்தார்கள்.

பின்னர் உரையாற்றிய தலைவர் பொறுப்பு திரு. T. ரவிக்குமார் அவர்கள் 2026–27ம் ஆண்டு மாணவ மாணவியர்க்கு கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பம் வழங்கப்பட்டு வருகிறது என்றும் 09.08.2026 அன்று நடைபெறயிருக்கும் "மங்கல சந்திப்பு" விழாவிற்கு கார்குல சொந்தங்கள் அனைவரும் ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக் கொண்டார்.

இணைச்செயலர் நன்றி நவில இரங்கல் தீர்மானங்கள் மீது மவுன அஞ்சலி செலுத்தப்பட்டு கூட்டம் நிறைவுற்றது.

15.08.2026 அன்று 80ஆவது சுதந்திர தின விழா நகர சங்க கட்டிடத்தில் மகளிர் அணி இறைவணக்கத்துடன் தலைவர் (பொறுப்பு) திரு. T. ரவிக்குமார் தேசியக்கொடியினை ஏற்றி வைத்து

வாழ்த்துரை வழங்கிடவும், அதனை தொடர்ந்து மேனாள் தருமபுரம் மேல்நிலைப்பள்ளி தலைமை யாசிரியர் திரு. திருஞானசம்பந்தம் மற்றும் அ.வ.அ. கல்லூரி நூலகர் முனைவர் செந்தில்நாயகம், மேனாள் தலைவர் பொறுப்பு திரு. ஜெயராமன், மகளிரணி தலைவி திருமதி சுகுணாதேவி, வசந்தி பன்னீர்செல்வம் வாழ்த்துரை வழங்கிடவும் நிறைவாக திருமதி. சுந்தரிகணேசன் நன்றி கூறிடவும், நிகழ்ச்சிகளை திரு. இராம. ஆனந்தன் தொகுத்து வழங்கினார்கள். விழாவிற்கு பல கார்குல சொந்தங்கள் கலந்துகொண்டு இனிதே நிறைவுற்றது. வணக்கம்.

திரு. S. தில்லைநாயகம், செயலாளர்

மயிலாடுதுறை மகளிரணியினரால் ஏற்று நடத்தப்பட்ட "திருவிளக்கு பூஜை", 26.7.26 அன்று மயிலாடுதுறை நகர கார்காத்த வேளாளர் சங்கக் கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது. 100 கார்குல மகளிர் கலந்துகொண்டு 1008லலிதா சகஸ்ரநாம மந்திரங்கள் ஓத திருவிளக்கு பூஜை சிறப்புடன் செய்தனர். நன்றாக மழை பெய்து, வேளாண்மை சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற பொதுநல நோக்குடனும், தங்கள் குடும்பம் சிறந்து விளங்க வேண்டும் என்ற வேண்டுதலுடனும் மகளிர் பூஜை செய்தனர். நகர சங்க மேனாள், இந்நாள் பொறுப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மகளிரணி மேனாள், இந்நாள் பொறுப்பாளர்கள், இளைஞரணி பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். திருவிளக்கு பூஜை சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

கோ. அகிலாண்டேஸ்வரி
செயலர், மகளிரணி

செம்பொன்னார்கோவில்:

சங்க கூட்டம் 06.08.2026 அன்று சங்க தலைவர் தலைமையில் சங்க உறுப்பினர் திரு. கனகசபை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. இறைவணக்கம் செல்வி சைந்தவி, வரவேற்பு செல்வன் சஞ்ஜீவ், சென்ற வார கூட்டறிக்கை, வரவு செலவு சங்க பொருளர் M.C. செல்வராஜ் அவர்கள் படிக்க கூட்டம் தொடங்கியது.

திரு. கணபதி நடனம் அவர்கள் பேசுகையில், கூட்டம் நடத்திய இல்லத்தார் பற்றியும், உடல்நலம், மனநலம் பற்றியும் பேசினார்கள். நமது சங்க உறுப்பினர் திரு. சண்முக வடிவேல் நினைவாக அவர்களது மனைவி திருமதி. சுடர்விழி அவசரகால நிதியாக ரூ. 10,000 (பத்தாயிரம்) சங்கத்திற்கு வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தார்க்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. இல்லத்தாரால் அளிக்கப்பட்ட இரவு விருந்தில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பு செய்தார்கள்.

திரு. கனகசபை அவர்களின் மகள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

கி. ராமநாதன், தலைவர்

பரசலூர்:

சங்க கூட்டம், மருத்துவமனைச்சாலை திரு. E. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. திருமதி B. செந்தமிழ்செல்வி இறைவணக்கம் பாட திரு. E. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் வரவேற்று மகிழ்ந்தார்கள். தலைவர் திரு. க. கோவிந்தராசன் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. செயலர் அறிக்கையை செயலர் செந்தில்குமார் வாசிக்க, திரு. மு.அ. நிதிய அறிக்கையை தலைவர் திரு. க. கோவிந்தராசன் சமர்ப்பித்தார்கள். நிதியப் பதிவேடுகள் மற்றும் அவசர கால நிதி உறுப்பினர்கள் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

கூட்டத்தில் எதிர்வரும் சங்க ஆண்டுவிழாவில் மகளிர் அணியினருக்கு சிறப்பு சீருடை வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு இனிப்பு, காரம் மற்றும் தேநீர் வழங்கி இல்லத்தார் உபசரித்தார்கள்.

இல்லத்தாரை கௌரவிக்கும் விதமாக அவர்களுக்கு பொன்னாடை அணிவிக்கப்பட்டது. திரு. வீ. கண்ணன் பிள்ளை பேசும்போது திருநனிப்பள்ளி (புஞ்சை) நற்றுணையப்பர் கோவில் பெருஞ்சாந்தி விழாவில் அனைவரும் கலந்துகொண்டு நற்றுணையப்பர், மலையான் மடந்தை அருளை பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நிறைவாக திரு. வீ. கண்ணன் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

K.S. செந்தில்குமார், செயலர்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு:

சங்க கூட்டம் 04.08.2026 அன்று தலைவர் திரு. பால இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில்

இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது. 14.08.2026 ஆடி மாத கடைசி வெள்ளிக்கிழமை மேலப்பெரும்பள்ளம் ஸ்ரீ சீதளாதேவி மாரியம்மன் 'தீமிதி' திருவிழாவும், கார்காத்தார் சார்பில் அன்னதானமும் சிறப்பாக செய்திட ஏகமனதாக தீர்மானம்நிறைவேற்றப்பட்டுநன்றிநவிலப்பட்டுகூட்டம் இனிதே நிறைவுற்றது. 14.08.2026ல் நடைபெற்ற தீமிதி திருவிழா மற்றும் அன்னதானம் இரண்டும் செவ்வனே செய்யப்பட்டு விழா இனிதே நிறைவேறியது.

பால. இலட்சுமணன், தலைவர்

---

80 இராதாநல்லூர்:

சங்க கூட்டம் 9.8.2026 அன்று சங்க கௌரவத் தலைவர் கு. இராமசுப்ரமணியன் அவர்கள் இல்லத்தில் கௌரவத்தலைவர் கு. இராமசுப்ரமணியன் அவர்கள் தலைமையில் சங்க தலைவர் தி. முத்துக்குமரசாமி அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆகஸ்டு மாதத்தில் பிறந்தநாள் மற்றும் திருமணநாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. கார்காத்தார் ஒப்புரவுக்கு சந்தா தொகை செலுத்தி ஒப்புரவு வளர்ச்சிக்கு சங்க உறுப்பினர்கள் பாடுபட கேட்டுக்கொள்ளப்பட்டது.

சங்க செயலர் இரா.மு.அ. செல்வம் என்கிற இராஜா முத்தையா – கலா தம்பதியரின் மகன் இரா. அருண் B.Tech., ஆயங்குடிப்பள்ளம், ந. சோமசேகர் – சுமதி தம்பதியரின் மகள் சோ. நந்தினி M.Sc. (Horti) இவர்களுக்கு 23.8.2026 அன்று சீர்காழி SRM திருமண மஹாலில் நடைபெறவுள்ள திருமண நிகழ்ச்சியில் சங்க உறுப்பினர்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்துகொண்டு சிறப்பு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது. சங்க பொருளாளர் மு. சீனிவாசன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

தி. முத்துக்குமாரசாமி, தலைவர்

திருவெண்காடு:

சங்க கூட்டம் 12.07.2026 அன்று சங்க தலைவர் கு. சம்பந்தம்பிள்ளை இல்லத்தில் அவரின் தலைமையில் உறுப்பினர் அ.ஜெயபால் பிள்ளை வரவேற்க ஜூன் 2026 மற்றும் ஜூலை 2026 மாத கூட்டம் தொடங்கியது.

சங்க உறுப்பினர்களின் ஜூன் 2026 (ம) ஜூலை 2026 மாதத்தில் பிறந்த மற்றும் திருமண நாள் காண்பவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு உறுப்பினர்களின் இல்லத்தில் மாதாந்திர கூட்டத்தினை அவர்களின் ஒப்புதலோடு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. சங்கம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் தங்கம் செய்தாததை சங்கம் செய்யும் என ம. சரஸ்வதி எடுத்து கூறினார்.

பொருளாளர் ம. ராமு வரவு செலவு கணக்கு படிக்க ஏற்றுகொள்ளப்பட்டது. ராமு நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

சங்க கூட்டம் பொன்னம்பலம் ஆசிரியர் இல்லத்தில் 09.08.2026 அன்று தலைவர் கு. சம்பந்தம்பிள்ளை தலைமையில் தி. உமாமகேஸ்வரி இறைவணக்கம் பாட துவங்கியது.

ஆகஸ்ட் 2026 மாத பிறந்தநாள் மற்றும் திருமண நாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. மணிக்கிராமத்தில் நடைபெற்ற 23ஆவது சங்க ஆண்டுவிழா அழைப்பினை ஏற்று 09.08.2026 காலை கலந்துகொள்ளப்பட்டது. எதிர்வரும் செப்டம்பர் 2026 மாத கூட்டம் 13.09.2026ல் பெருந்தோட்டம் அ. ஜெயபால் இல்லத்தில் நடத்திட சம்மதம் தெரிவித்தமைக்கு ஜெ. ரேணுகாவிற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. அடுத்த மாதாந்திர கூட்டங்களை நடத்திட பெருந்தோட்டம் க. லெட்சுமி சம்மதம் தெரிவித்தமைக்கு நன்றி கூறப்பட்டது.

சங்கம் வளர்ச்சி, எவ்வாறு நடத்தப்பட வேண்டும் மற்றும் உறுப்பினர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென பெருந்தோட்டம் அ. மயில் மற்றும் தி.மு.கீ. சிவனருள்செல்வன் எடுத்துரைத்தார்கள்.

இறுதியாக பொன்னம்பலம் சாந்தா மகன் அகோரமூர்த்தி நன்றியுரை ஆற்ற இம்மாத கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கு. சம்பந்தம்பிள்ளை, தலைவர்

பூம்புகார் - மேலையூர்:

சங்க கூட்டம் 2.8.2026 அன்று உறுப்பினர் திரு. பரணிதரன் இல்லத்தில் மூத்த உறுப்பினர் திரு. ஞானபிரகாசம் அவர்களின் இறைவணக்கத்துடன் துவங்கியது.

சங்க கூட்டத்தில் தலைவர் திரு. N. பாண்டியன் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். CREW Trust கல்வி உதவித்தொகை பெற நமது சங்கத்தை

சேர்ந்த கார்குல மாணவர்கள் விண்ணப்பிக்குமாறு பெற்றோர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நமது சங்க பொருளாளர் திரு. R. வெங்கடேசன் – திருமதி. மாலதி தம்பதியரின் சஷ்டியப்த பூர்த்தி விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அதற்கு சங்க உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

நமது சங்க வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்து கருத்துகள் பரிமாறபட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் தேனீர் விருந்து அளிக்கப்பட்டது. இறுதியில் செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– G. விஜயராகவன், செயலாளர்

✤ ✦ ✤

திருவாரூர்:

சங்க கூட்டம் 12.7.26 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை தலைமை ஏற்று நடத்தினார்கள். பன்னிரு திருமுறை கடவுள் வணக்கமாக அனைவராலும் பாடப்பெற்றது. தலைவர் உரையில் நமது சங்க ஆண்டுவிழா இந்த ஆண்டு சிறப்புடன் நடக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்கள். செயலாளர் சென்ற கூட்ட அறிக்கை, நிதிநிலை அறிக்கை வாசித்து உறுப்பினர்கள் ஒப்புதல் பெற்றுக்கொண்டார்கள். திரு சங்கர்கணேஷ் ஆன்மீக உரையில் காரைக்கால் அம்மையார் வரலாற்றை சிறப்புடன் கூறினார்கள். கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் திரு. சங்கர்கணேஷ் சிற்றுண்டி தேநீர் வழங்கினார்கள். கடைசியாக திருமதி. பாலாம்பிகை நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது.

– அ. சோமசுந்தரம், செயலாளர்

✤ ✦ ✤

கும்பகோணம்:

சங்கத்தின் 30ஆம் ஆண்டு விழா மற்றும் பொதுகுழு காமாட்சி ஜோசியர் தெரு வெங்கடாசலம் பிள்ளை திருமண மண்டபத்தில் 16.08.2026 அன்று தலைவர் A.S. பழனிபிள்ளை அவர்கள் தலைமையில் V. ரகுநாத்பிள்ளை, V.R. சாமிநாதன் பிள்ளை, M. பால குரு பிள்ளை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. R. ஆனந்தன் பிள்ளை இறைவணக்கத்துடனும், M.R.K. பாண்டியன் பிள்ளை அவர்களின் வரவேற்புரையுடனும் தொடங்கியது.

ஆண்டறிக்கை செயலாளர் S. விஜயகுமார் பிள்ளை வாசிக்க, நிதிநிலை அறிக்கை பொருளாளர் G. ராஜாராமன் பிள்ளை சமர்ப்பித்தார்கள். இரு அறிக்கைகளும் அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நமது சங்க உறுப்பினர்களில் சஷ்டியப்தபூர்த்தி தம்பதியர்கள் மற்றும் சிறப்பாக பணியாற்றி பணி ஓய்வு பெற்றவர்கள் கௌரவித்து பாராட்டப்பட்டார்கள். மதிய விருந்துக்கு பின் பெரியவர்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு போட்டிகள் நடத்தப்பட்டன.

மதிய நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு கார்காத்தார் கூட்டமைப்பு பொருளாளர் திரு. G. ராமநாதன் பிள்ளை கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி மாநில சங்க செயல்பாடுகள் பற்றி உரையாற்றினார்கள். பொதுக்குழுவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் அனைவராலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்ட முடிவில் இணைச்செயலாளர் M. சாமிநாதன் பிள்ளை அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூகநலச் சங்க புதிய பொறுப்பாளர்களாக தலைவர் ஏ.எஸ். பழனி பிள்ளை அவர்களையும், செயலாளராக திரு. எஸ். விஜயகுமார் பிள்ளை, பொருளாளராக G. ராஜாராமன் பிள்ளை தேர்வு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

புதிய உறுப்பினர்களைச் சேர்க்க நிர்வாக குழுவை கேட்டுக்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

மகளிர் அணி அமைப்பாளர்களாக திருமதி பிரேமா பாலசுப்ரமணியன், திருமதி. பத்மா பரமசிவம், திருமதி கலா பாலகுரு

தலைவியாக திருமதி. நீலா ராஜசேகரன், துணைத்தலைவியாக திருமதி. பிரேமா குணசீலன், செயலாளராக திருமதி. அனுராதா அசோக், துணைச்செயலாளராக திருமதி. ப்ரித்தி ஷீராம், பொருளாளராக திருமதி சுமதி இளங்கோவன் மற்றும் 7 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எஸ். விஜயகுமார் பிள்ளை
செயலாளர்

✤ ✦ ✤

திருச்சி:

இந்திய சுதந்திர திருநாள் அன்று, திருச்சி கார்காத்த வேளாளர் சங்கத்தின் 23வது மங்கல சந்திப்பு விழாவும், 53வது ஆண்டு விழாவும் வெகு சிறப்பாக நடைபெற்றது. தமிழகம் முழுவதும் 275 வரன்கள் பதிவு செய்திருந்தார்கள். காலை சரியாக 8:45 மணி அளவில் மகளிர் அணி பொறுப்பாளர்கள்

குத்துவிளக்கு ஏற்றிட, மங்கல சந்திப்பு விழா இனிதே தொடங்கியது.

திருச்சி சங்கத் தலைவர் திரு. G. சிவகுருநாதன் வரன்களின் விபரங்கள் அடங்கிய புத்தகத்தினை வெளியிட, திருச்சி திருமண தகவல் மையத்தின் அமைப்பாளர் திரு. நவிலு N.B. பாலசுப்பிரமணியன் அவர்களும், மாநில சங்க கௌரவ ஆலோசகரும், திருச்சி சங்க முன்னாள் தலைவருமாகிய திரு. M. பாலசுப்பிரமணியன் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

வரன்கள் குறித்த விபரங்களை செயற்குழு உறுப்பினர் திரு. G. சரவணன், திரு. V. குணசேகர் இருவரும் அறிவிக்க, வரன்கள் குறித்த விபரங்களை L.E.D திரையில் திருமண தகவல் மையத்தின் இணை அமைப்பாளர் திரு. C. சபாபதி ஒளிபரப்பு செய்தார். எந்தவித இடையூறும் இல்லாமல் வந்திருந்த பெற்றோர்கள் மிக அருமையாக இந்த திரை நிகழ்வை மிகவும் பயனுள்ளதாக கொண்டாடி, அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்த்திச் சென்றார்கள். அனைவருக்கும் சிறப்பான மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலை மகளிர் அணி சார்பில் போட்டிகளை சிறப்பாக நடத்தி பரிசளிக்கப்பட்டது. பிறகு மாலை நேர விழா இனிமையாக தொடங்கியது. மகளிரணியினர் தமிழ்த்தாய் வாழ்த்து பாட, திருச்சி சங்கச் செயலாளர் திரு. C. சுப்ரமணியன் வரவேற்புரை ஆற்றினார். புதிய மகளிர் அணி பொறுப்பாளர்களை தலைவி திருமதி சரஸ்வதி பாலசுப்ரமணியன் அறிமுகம் செய்து வைத்தார்.

மண்டலச் செயலாளர் திரு. V. குணசேகர் மற்றும் மண்டலத் தலைவர் திரு. S. உமையொருபாகம் ஆகியோர் முன்னிலை உரையாற்றினார்கள். மாநில சங்க அமைப்புச் செயலாளர் திரு சீனி. பழமலை பிள்ளை மற்றும் மதுரை சங்கத் தலைவர் முனைவர் K. சிவசுப்பிரமணியம் பிள்ளை வாழ்த்துரை வழங்கி னார்கள்.

திருச்சி சங்கத் தலைவர் க. சிவகுருநாதன் தலைமை உரையாற்றினார். கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியில் ஊடகவியலாளராக பணியாற்றி வரும் திருமதி திவ்யா நாதன் ''தடை அதை உடை'' என்ற தலைப்பில் கலகலப்பான ஒரு சிறப்புரை ஆற்றினார். சிறப்புரைக்கு முன்பாக சிறப்பு விருந்தினரை திருமதி காமாட்சி பாண்டியன் மிகச் சிறப்பாக அறிமுகம் செய்து வைத்தார்.

நிறைவாக திருச்சி சங்கப் பொருளாளர் திரு. N. பாண்டியன் நன்றி உரை கூறினார். திருச்சி சங்கச் செயலாளர் திரு. C. சுப்பிரமணியன் மகள் திருமதி. ஆர்த்தி வினோத் நிகழ்ச்சியினை சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

விழாவுக்கான ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. விழா நாளன்று காலை முதல் இரவு வரை மங்கல சந்திப்பு மற்றும் ஆண்டு விழாவிற்கான அனைத்து பணிகளையும் தங்களது சொந்தப் பணிகளாக கருதி, திருச்சி சங்க செயற்குழு உறுப்பினர்களும் மகளிர் அணியைச் சார்ந்த சகோதரிகளும் மிகச் சிறப்பாக செய்திருந்தனர். அனைவருக்கும் இரவு உணவு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

– C. சுப்ரமணியன், செயலாளர்

✤ ✦ ✤

மதுரை:

மாவட்ட சங்க செயற்குழுகூட்டம் **9.8.2026** அன்று நடைபெற்றது. திரு. S. மாணிக்கவாசகம் கடவுள் வாழ்த்து பாட, தலைவர் முனைவர் K. சிவசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. S. உமையொருபாகம் மண்டல தலைவர் மற்றும் சங்க செயலாளர், சங்க துணைசெயலாளர் N. இராமலிங்கம், மகளிர் அணி செயலர் U. குமாரிலட்சுமி மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். சென்ற மாதங்களில் நடந்த சங்க நிகழ்ச்சிகளை தலைவர் தொகுத்து வழங்கினார். குறிப்பாக **14.6.2026** அன்று நடந்த திண்டுக்கல் மாவட்ட கார்காத்தார் சங்க ஆண்டு விழாவில் மண்டல தலைவர் மற்றும் சங்க தலைவர் செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர் கலந்துகொண்டு சிறப்பித்தல் பற்றி விவரித்தார். மேலும் **9.7.2026** அன்று பெண்ணாடத்தில் மணிமண்டபம் திறப்பு விழாவில் நமது சங்க மண்டல தலைவர், சங்க தலைவர் பொருளாளர் துணைபொருளாளர் கலந்துகொண்டதை எடுத்துரைத்தார். மேலும் கடந்த மாதங்களில் சிவலோக பதவி அடைந்த சங்க உறுப்பினர் திரு. நாகராஜன் (திருமங்கலம்), திரு. ஞானசம்பந்தம் டி கல்லுப்பட்டி மற்றும் திருமதி லதா ஆறுமுகம் (ஆழகப்பன் நகர்) அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

25.12.2026 அன்று நடைபெறவுள்ள சங்க ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற செயற்குழு உறுப்பினர் மற்றும் சங்க உறுப்பினர் ஆலோசனை பெறப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொருளாளர் வழக்கறிஞர் திரு. முருகன் நன்றி நவில செயற்குழு கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

B. ரவிச்சந்திரன், செயலாளர்

✤ ✦ ✤

சென்னை மண்டல கார்காத்தார் மகளிர் சங்கம் தொடக்க விழா

ஆடி மாத பௌர்ணமியான ஜூலை 28ஆம் நாள், கார்குலத் திருநாள் கொண்டாடும் நன்னாளில், ஆதம்பாக்கம் லட்சுமி மஹாலில், சென்னை மண்டல கார்காத்தார் மகளிர் சங்கத்தின் தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது. ஆடி செவ்வாய்க் கிழமையன்று பகல் 2.45 மணிக்கு விநாயகர் அகவலுடன், ஆனைமுகனை வழிபட்டு, ராகுகாலத்தில் அம்பிகையை மஹிக்ஷாசுர மர்த்தனி சுலோகம், லலிதா நவரத்னமாலை பாடி விழாவைத் தொடங்கினோம். அதன்பின் சுமார் 1 மணி நேரத்திற்கு வயது வரம்பு பாராமல், அனைவரும் பல விளையாட்டுக்களை மகிழ்ச்சியுடன் விளையாடி மகிழ்ந்தோம். மாலை 5 மணி அளவில், நமது விருந்தினர்கள் மாநில கார்காத்தார் கூட்டமைப்பின் தலைவர், முனைவர் K.K.R.K. சுரேஷ், மாநிலப் பொதுச் செயலாளர் முனைவர். கைலை. சண்முகம், சென்னை மண்டலத் தலைவர் திரு. தியாகராஜன், மாநில கூட்டமைப்பின் ஆலோசகர் திரு S. சிவகுமார், மற்றும் சமூக ஆர்வலர்கள் மனிதநேயம் திரு T.N. முத்துக்குமாரசுவாமி ஐயா அவர்கள், ‘ஆனந்தம்’ திரு. செல்வகுமார் அவர்கள் வருகை புரிந்தனர். அதன்பின் தமிழ்த்தாய் வாழ்த்து, கார்காத்தார் வாழ்த்து, அமைப்பு செயலர் திருமதி. கிருஷ்ணவேணி அவர்கள் வரவேற்புரை மற்றும் செல்வி தியாமகிமாவின் பரதநாட்டியத்துடன் விழா தொடங்கியது. தலைவரின் எழுச்சி உரையுடன் மகளிர் சங்கம் தொடங்கப்பட்டு, சிறப்பு விருந்தினர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்

இம்மகளிர் சங்கத்தின் கௌரவத் தலைவி திருமதி. வனஜா இளங்கோவன் முன்னுரையும், தலைவி திருமதி. கலையரசி ராஜசேகரன் நோக்க உரையும், செயலாளர் திருமதி. குந்தவி. R. குழுவின் இந்நாளின் சிறப்பையும் (கார்குலத் திருநாள்) எடுத்துரைத்தனர். சென்னையின் பல பகுதிகளில் இருக்கும் மகளிரை ஒருங்கிணைத்து, சமூகத்திற்கு நற்காரியங்கள் புரியும் நோக்கத்தில் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் செயற்பாடுகளும், திட்டங்களும் எடுத்துரைக்கப்பட்டன. பல திட்டங்கள் உள்ளன. அவற்றில் எங்களால் இயன்ற திட்டங்களைச் செயல்படுத்த உள்ளோம். அனைத்து சென்னை மகளிர் ஆதரவையும் எதிர்நோக்கி உள்ளோம். சென்னையில் பல்வேறு பகுதிகளில் உள்ள மகளிர் அனைவரும் சங்கத்தில் உறுப்பினராகி ஒன்றுபட்டு செயல்படுவோம்! கார்குல சமூகத்துக்கு நம்மாலான உதவிகள் புரிவோம்! பொருளாளர் திருமதி லலிதா வேலாயுதம் நன்றி கூற, இரவு உணவுடன் விழா இனிதே முடிவு பெற்றது.

குறிப்பு: 1) இச்சங்கத்தில் உறுப்பினராக ஆண்டுச் சந்தா ரூ. 500 மட்டுமே! பொருளாளர் திருமதி. லலிதா அவர்களுக்கு 9940595359 எனும் இந்த எண்ணில் ‘Google Pay’ மூலம் செலுத்தலாம்.

2) சங்கத்தின் சில திட்டங்கள் தங்களின் பார்வைக்கு:

a) வயதில் மூத்தவர்கள் (85 வயதிற்கு மேல்) நேரில் சென்று கண்டு அளவுளாவுதல், ஏதேனும் உதவி தேவைப்படின் செய்து கொடுத்தல்.

b) குழந்தைகளுக்கு ஆன்மீக கதைகள், நல்லொழுக்க கதைகள், சுலோகங்கள் ஆகியவைகளை Online-ல் கற்பித்தல்.

c) Helpline உருவாக்கி நான்கு அல்லது 5 தொலைபேசி தொடர்புகள் ஏற்படுத்தி, அதன் மூலம் தேவைப்படுபவர்களுக்கு (Emergency) உதவுதல்.

d) Depression–ல் இருக்கும் மகளிரை இனம் கண்டு, வெளியே அழைத்துச் சென்று அவர்கள் மனதைச் சாந்தப்படுத்துவது.

e) Educational support & exam fear ஐ விலக்க மாணவர்களுடன் தொடர்பு கொள்ளுதல்.

f) கோவில்களில் நந்தவனம் அமைப்பது, etc.

இதில் முதல் பணியாக சென்னை ராயப்பேட்டை பாலாஜி நகரில் வசிக்கும் உயர்திரு உடையூர் முத்துக்குமரன் பிள்ளை – திருமதி. தமயந்தி தம்பதியரை, ஆகஸ்ட் மாதம் 16ம் நாள் மாலை 5 மணி அளவில், ஐவர் சந்தித்து, அளவளாவி மகிழ்வித்து, மகிழ்ந்து ஆசி பெற்று வந்தோம். அவர்தம் குடும்பத்தினர் அன்புடன் எங்களை வரவேற்று உபசரித்தனர். ஒரு பாரம்பரியமிக்க குடும்பத்தினரைச் சந்தித்ததில், அவர்கள் கூட்டாக உணவு உண்ணுதல் மற்றும் ஒன்றுகூடி அளவுளாவுதல் போன்ற நிகழ்வுகளைக் கேட்டதும், அத்தம்பதியர் சங்க உறுப்பினர்களை அடிக்கடி வருமாறு அழைத்ததும் மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, இனிப்பும் பழங்களும் வழங்கி வந்தோம்.

நன்றி! வணக்கம்!!

சென்னை மண்டல கார்காத்தார்
மகளிர் சங்கம் R. கலையரசி & R. குந்தவி

சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com

நம்பிக்கையை கைவிடாதே! அதுதான் வெற்றியின் முதல்படிக்கட்டு!

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா

– மோகன்குமார் தஞ்சாவூர்

இந்தியாவில் 18 மொழிகள், 100 கிளை மொழிகள், வட்டார மொழிகள், 6400 ஜாதிகள், உபஜாதிகள், 52 முதன்மைப்பழங்குடி இனத்தினர், 6 முக்கிய இனக்குழுக்கள் மற்றும் 28 மாநிலங்கள் உள்ளன. இருப்பினும் நாம் ஒரே நாடாக இருந்து வருகின்றோம். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இருக்கின்றோம். நம் தேர்தல் உலகிலேயே மிகப்பெரிய நடைமுறை கொண்டது. இவற்றையெல்லாம் கூறி எத்தனை நாடுகள் மார்தட்டிக் கொள்ள முடியும். நமது அரசியல் சட்டமும் இந்தியக் குடிமகனின் அடிப்படை உரிமைகளை உள்ளடக்கியது. நமது சுதந்திரமான செய்தி ஊடகத்தைப் பாருங்கள். இந்திய மொழிகள் அனைத்திலும் சேர்த்து 500க்கும் மேற்பட்ட நாளிதழ்கள், 16,000 வாரப்பத்திரிக்கைகள், 6000க்கும் மேற்பட்ட இரு வாரப் பத்திரிக்கைகள் உள்ளன. இங்குள்ளது போன்ற கருத்துச் சுதந்திரம், செயலாற்ற சுதந்திரம் உள்ளதாக வேறு எத்தனை நாடுகள் பெருமை பேச முடியும்.

வாலினால் ஆன பயன் என் சொல் ?

வாலை ஆட்டினால் ஒட்ட நறுக்கிவிடுவேன் என்று அடிக்கடி பயமுறுத்துகிறோம், இல்லையா ? வாலை ஆட்டுதல் என்பது விஷமம் செய்தல் எனும் அர்த்தத்தில் தானே அப்படிச் சொல்கிறோம். வால் உள்ள பிராணிகளெல்லாம் அதற்காகவா வாலை ஆட்டுகின்றன ? நாய் வாலை ஆட்டினால் அது தன் அன்பை வெளிப்படுத்துகிறது என்றுதான் கொள்கின்றோம். ஆனால் பூனை வாலை ஆட்டினால் தனது இரைமீது பாய்ந்து கடிக்கப் போகிறது என்றுதான் அர்த்தம். மேலும் ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு செயலுக்கும் எவ்வாறு தனது வாலைப் பயன்படுத்துகின்றன என்பதைப் பாருங்கள்.

ஒருவகைக் குரங்கு மரக்கிளைகளிடையே தாவும்போது கிளைகளை இறுகப் பிடித்துக்கொள்ளப் பயன்படுத்துகின்றது. அதற்கு வால் ஒரு கூடுதல் கையாகப் பயன்படுகிறது.

பீவர் என்ற விலங்கின் வால் தட்டையாக இருக்கும். எதிரிகள் வருவதைக் கண்டால் தரையை வேகமாகத் தட்டி தனது எச்சரிக்கையை வெளிப்படுத்தும். முதலைக்கு நீரில்தான் பலம் அதிகம். இது தன் இரையாகும் விலங்குகளை தனது வாலைச்சுற்றி அடித்து வீழ்த்தி, பின்னர் அவற்றை ஆற அமர உண்ணும் பழக்கம் கொண்டது.அணில் உயரத்தில் வேகமாகத் தாவி ஓடும்போது, நிலைதவறி விழுந்துவிடாது இருப்பதற்காக தனது வாலை இப்படியும் அப்படியும் ஆட்டுகிறது. சர்க்கஸ்களில் கம்பி மீது நடக்கும் போது கைகளை இப்படியும் அப்படியும் ஆட்டி பேலன்ஸ் செய்கிறார்களே அதுபோல. கங்காருவும் வேகமாகத் தாவிப் பாயும்போது சமநிலைத் தவறாமல் இருப்பதற்கு வால் இதேபோலப் பயன்படுகிறது. அது மட்டுமல்ல, பின்னங்கால்களில் உட்கார்ந்துகொள்ள இதனை மூன்றாவது காலாக ஸ்டூல் போலப் பயன்படுத்துகிறது. முயலின் வாலைப் பார்த்தால் முதலில் பயனற்றதாகத்தான் தோன்றும். ஆனால் உண்மையில் தாய் முயல் எதிரிகளிடமிருந்து தப்பிக்க தனது குட்டிகளுடன் ஓடும்போது தாய் முயலின் வால் அசைவைப் பார்த்துத்தான் குட்டி முயல்கள் தாங்கள் எப்படி ஓடவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்கின்றன. மயிலின் தோகை அழகில் மயங்காதோர் இல்லை. மயிலின் வாலைத்தான் தோகை என்கின்றோம். தனது இணையைக் கவருவதற்காக தோகையை விரித்து ஆடுகின்றன. வாலின் பயன்கள்தான் எத்துனை பார்த்தீர்களா ?

திருச்சிற்றம்பலம் – கே.தியாகராஜன், திருச்சிற்றம்பலம்

சைவத் திருமுறைகளைப் பாதுகாத்து உலகிற்கு வழங்கக் காரணமாக இருந்த இடம் சிதம்பரம். இது தில்லை என்றும் அழைக்கப்படுகிறது. இதுதான் இசை உலகிற்குப் பிறப்பிடம் என்று கூறுவார்கள். எனவேதான் திருமுறையை ஓதுபவர்கள் நன்றி கூறும்விதமாக ஓதுவதற்கு முன்னர் ஒரு முறை திருச்சிற்றம்பலம் என்றும், ஓதியபின் ஒரு தடவை திருச்சிற்றம்பலம் என்றும் கூறுவதை இன்றும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

திருச்சிற்றம்பலம் ஆலயத்தின் வாயில்கள்

சிதம்பர ஆலயத்தினுள் நுழைவதற்கான நான்கு வாயில்களும் தனித்தனியே சிறப்பு பெற்றவை. சமயக்குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் கிழக்குக் கோபுர வாயில் வழியாகவே ஆலயத்துள் நுழைந்து தில்லை நடராஜனைப் பாடியுள்ளார். கடவுளைப் பாடி பரவசமடைந்த அப்பர் அடிகளெனும் திருநாவுக்கரசர் மேற்குக் கோபுர வாயில் வழியே உள்ளே நுழைந்துள்ளார். பக்தியால் இறைவனைப் பாடி பரவசம் அடைந்த திருஞான சம்பந்தர் தெற்குக் கோபுர வாயில் வழியேதான் உள்ளே பிரவேசித்திருக்கிறார். சுந்தரர் என்றழைக்கப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் வடக்குக் கோபுர வாசல் வழியாக உள்ளே நுழைந்து இறைவனைப் பாடினார் என்பது வரலாறு; சமயக்குரவர்கள் நால்வரும் நான்கு வெவ்வேறு வாயில்கள் வழி உள்ளே நுழைந்து இறைவனை தரிசித்த இடம் தில்லை எனப்படும் திருச்சிற்றம்பலம்.

'சோழவளநாடு சோறுடைத்து'

தஞ்சை மாவட்டம் பற்றிக் குறிப்பிடும்போது சோழநாடு சோறுடைத்து என்ற சொல் வழக்கில் உள்ளது. சோழநாடு சோறுடைத்து என்றால் சோழமன்னர் காலத்தில் அவர்களின் சீரிய நிர்வாகத்தின்கீழ் நிலவளத்தால், உழவர்களின் உழைப்பால் உற்பத்தி பெருகி வளம் உயர்ந்திருந்தது. அதனால் அங்கு சோற்றுக்குப் பஞ்சமில்லை, எனவேதான் சோழநாடு சோறுடைத்து என வழங்கி வந்ததாகத்தானே நினைக்கின்றோம். ஆனால் இதன் விளக்கம் வேறு விதமாகவும் கூறப்படுகிறதே! சோறு எனும் தமிழ்ச் சொல்லுக்கு முக்தி என்று பொருள். சோழவளநாட்டில் முக்தியைத் தரக்கூடிய எண்ணிறைந்தக் கோயில்கள் மண்டிக்கிடந்தன. ஒவ்வொரு கோவிலும் ஒவ்வொரு முறையில் சிறப்பு பெற்றவை. அக்கோயில்களிலுள்ள மூர்த்திகளை வழிபட்டால் முக்திக்குப் பஞ்சமில்லை என்பதையே குறிப்பதாகக் கூறப்படுகிறது.

நடராஜர் நமக்கு உணர்த்துவதென்ன?

நமது கலாசாரமும் நடனமும் உடன் பின்னிப் பிணைந்தவை. பரதம், குச்சுப்புடி, ஒடிசி, மோகினி ஆட்டம் எனப் பல வேர்கள் விட்டது இந்திய பூமியில்தான். நடராஜர் நடனத்தில் பல அர்த்தங்கள் வெளிப்படுத்தப் படுகின்றன.

இதில் முக்கியமானது. ''நம்மை உற்சாகம் இழக்கச் செய்வது எதுவோ! அதை அழிப்பது'' என்பதாகும். நமது உத்வேகத்தை, தன்னம்பிக்கையை நம்மிடமிருந்து பறிக்கும் சக்தி எது? சோம்பல், சுயபச்சாதாபம் முதலியவைதானே! இவற்றை அழிக்கவேண்டும். நடராஜர் சிலை உணர்த்துவதும் இதைத்தான்.

நடராஜர் காலடியில் கிடக்கும் அரக்கன் – உற்சாகத்தை நம்மிடமிருந்து பறிக்கும் சக்தி, நடராஜர் கையில் உள்ள தீ சுவாலை –அறிவைத்தான் நமது வேதங்கள் தீ என்று சிம்பாலிக்காகக் கூறுகின்றன. துறவிகள் நெருப்பின் வண்ணத்தில் இருக்கும் காவி உடை அணிவதும் இதன் காரணமே! மறுகையில் உள்ள உடுக்கை ஞானத்தைக் குறிக்கும். மூன்றாவது கை காட்டும் அபய முத்திரை பயமின்றி வாழ் என்று பொருள். நம்மைத் தாழ்மைப்படுத்தும் அரக்கன் என்ற சக்தியை அழித்தால் துள்ளித் துள்ளி நடனமாடும் அளவுக்கு நமக்கு உற்சாகமும் பிறக்கும், மகிழ்ச்சியும் பிறக்கும்.

நடராஜர் மாதிரி தன்னைத்தானே புரிந்துகொண்டு முழு ஞானத்தோடு நம்மைத் தாழ்மைப்படுத்தும் சக்திகளை வீழ்த்தி அதன்மேல் ஏறி நின்று நாம் நடனமாடினால் நடனமாடுபவர் கண்ணுக்குத் தெரியமாட்டார். நடனம் மட்டுமே கண்ணுக்குத் தெரியும். எனவே ஆங்கிலத்தில் சொல்வதானால் –

ஜோக்ஸ்

1. ''அரைமணி நேர ஆப்பரேஷனுக்கு நீங்க கேட்கற பீஸ் ரொம்ப அதிகம் டாக்டர்!''
   ''அப்படி நீங்க ஃபீல் பண்ணினா, இரண்டு மணிநேரம் பண்ணறத்துக்குக்கூட நான் தயார்!''
2. ''அந்த ஆளு ஏன் பேன்ட்டுமேல ஜட்டியைப் போட்டுக்கிட்டு பஸ்ல ஏறுறாரு ?''
   ''பிக் பாக்கெட்கிட்டேயிருந்து தப்பிக்கப் புது யுத்தியாம்.''
3. ''அசந்து தூங்கிக்கிட்டிருக்கும்போது ஏண்டி எழுப்பினே ?''
   ''வழக்கமா சாப்பிடற தூக்கமாத்திரையை இன்னிக்கு சாப்பிட மறந்துட்டீங்களே இந்தாங்க, சாப்பிட்டுட்டுத் தூங்குங்க!''

---

1. உங்களுக்கென்று சில குறிக்கோள்களை மனதில் கற்பனை செய்துகொள்ளுங்கள். இவற்றை நோக்கியே உங்கள் செயல்கள் இருக்கட்டும்.
2. குறிக்கோளினை அடைவதில் பிடிவாதமாக இருங்கள். குறிக்கோள்களை விடுத்து உங்கள் எண்ணத்தை சிதறவிடாதீர்கள். மனதில் உறுதியாக இருங்கள்.
3. எதனையும் அப்புறம் எனத் தள்ளிப்போடாதீர்கள். எதனை நீங்கள் செய்ய நினைக்கிறீர்களோ அந்த வினாடியே செயல்படுத்துதற்கான நல்ல நேரமாகக் கொள்ளுங்கள். செயல்படுத்திவிடுங்கள்.
4. நாம் என்னவாக ஆகவேண்டுமென்று கற்பனை செய்துகொள்கிறோமோ அதுவாகவே ஆகின்றோம். நல்லனவாகவே, மேன்மையாகவே நினையுங்கள்.
5. நமது வாழ்முறையில் பல முடிவுகளை எடுக்கவேண்டியிருக்கும். அவற்றை நீங்கள்தான் எடுக்கவேண்டும். முடிவுகளை எடுக்கும் உரிமையை பிறருக்கு விட்டுவிடாதீர்கள்.
6. மனதில் மகிழ்வுடன் ஆர்வத்துடன் எச்செயலையும் துவங்குங்கள். செயல்படுவதற்கு ஏற்ற மனநிலையை முதலில் பெறுங்கள். நமது உலகத்தில் நாம்தான் எஜமானர்.
7. உங்களது நேரத்தை முறையாக அவ்வப்போது கவனித்து நிர்வாகம் செய்யுங்கள். கால விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். காலத்தே திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள்.
8. நமது தேவைதான் நமது வளர்ச்சியை நிர்ணயிக்கிறது. தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் மாற்றிக்கொண்டு தொடர்ந்து உங்கள் முன்னேற்றப் பாதையில் நேர்வழியில் செல்லுங்கள்.
9. உங்கள் மீது குறை சொன்னால், உண்மையிருப்பின் தயங்காது ஏற்றுக்கொள்ளுங்கள். கோபமடையாதீர்கள். குறையை திருத்திக்கொள்ளுங்கள். இது நம் வளர்ச்சிக்கு உரமாகும்.
10. புத்தகங்களைப்போன்ற சிறந்த நண்பன் கிடையாது. நல்ல புத்தகங்களை தேடிச்சென்று படியுங்கள். தினமும் படிக்கும் பழக்கத்தைக் கொள்ளுங்கள்.

மனித மரம் முளைத்தது ஆப்பிரிக்காவில்தான்!



இப்போது உள்ள மனிதர்கள் துவக்கம் ஆப்பிரிக்காவிலிருந்துதான் ஆரம்பித்திருக்க வேண்டும் என்று சுவீடனைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதை எப்படி கண்டுபிடித்தார்கள் என்கிறீர்களா ? மனித உடலில் உள்ள சில ஜீன்கள் பரம்பரை மாறினாலும் அதன் பண்புகளில் மாறாமல் வழிவழியாக அதே பண்புகளைக் கொண்டிருக்கும். இவ்வகை ஜீன்களுக்கு மைட்டோகாண்டிரிய ஜீன்கள் என்று பெயர்.

உலக அளவில் 53 பேரின் இரத்தத்திலிருந்து எடுக்கப்பட்ட இந்த மைட்டோகாண்டிரிய ஜீன்களை பரிசோதனை செய்ததில் இந்த ஜீன்களின் பண்பானது ஆப்பிரிக்கர்களின் ஜீனின் பண்புடன் ஒத்துப்போவதாக கண்டுபிடித்துள்ளனர். உலகின் பல பகுதிகளில் ஒரே நேரத்தில் ஆங்காங்கு மக்கள் தோன்றி

நாகரிகம் வளர்ச்சி அடைந்திருக்கும் என்றுதான் இதுவரை நம்பி வந்தனர். ஆனால் நம் எல்லோருடைய மூதாதையர்களும் ஆப்பிரிக்கர்கள்தான் என்பது இப்போது தெரியவந்துள்ளது ஆச்சரியத்தை அளிக்கிறது.

அப்படியா ?

1. இரத்தம் உறிஞ்சும் வௌவால்கள் தென் அமெரிக்காவின் பெரு நாட்டில் சிவப்பிந்தியர்கள் வசிக்கும் பகுதியில் மனித இரத்தம் குடிக்கும் பெரிய வௌவால்கள் (வம்பயர்) மிகுதியாக உள்ளன. மனிதர்கள் தூங்கும்போது அவர்களின் உள்ளங்கால்களில் ஓட்டை போட்டு இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன. வௌவால்களின் வாயினின்று வரும் ஒருவகை உமிழ்நீர் மனிதனின் காலில் பட்டவுடன் கால் உணர்வு இழந்துவிடும். தனது இறக்கைகள் விசிறியாகச் செயல்பட்டு நல்ல உறக்கத்தை ஏற்படுத்தி இரத்த வேட்டையை நடத்திவிடுகிறது.
2. சூரிய பகவானுக்கு தனிக் கோவில்கள் உள்ள இடங்கள் மூன்று... அவை:
    1. காஷ்மீரில் உள்ள மார்த்தாண்டம் கோவில்
    2. ஒரிசாவில் பூரிக்கு அருகில் உள்ள கோனார்க் கோவில்
    3. தமிழ்நாட்டில் ஆடுதுறைக்கு அருகில் உள்ள சூரியனார் கோவில்
3. இப்படியொரு சட்டம்

    பண்டை கிரேக்கக் கவிஞர்களில் புகழ்பெற்றவர் வர்ஜில். இவரது தோட்டத்தை அரசு பறிமுதல் செய்ய முடிவு செய்தது. இதை அறிந்த வர்ஜில், ஒரு ஈயைக் கொன்று தன் தோட்டத்தில் புதைத்து அதற்கு நினைவுத் தூண் எழுப்பினார். அந்த ஈ தனது செல்லப்பிராணி என்று கூறியதால், கிரேக்க சட்டப்படி நினைவுத்தூண் எழுப்பப்பட்ட தோட்டத்தை அரசால் பறிமுதல் செய்ய முடியவில்லை.

இவை தெரியுமா?

1. இறந்தவர்களின் செவிப்பறையை எடுத்து காது கேட்காதவர்களுக்குப் பொருத்தி வெற்றி பெற்றிருக் கிறார்கள் ஜெர்மனியில் மருத்துவ நிபுணர்கள்.
2. கருப்பையில் உருவாகும்போது குழந்தையின் இதயம்தான் முதலில் வளர்கிறது.
3. மாரடைப்பால் நின்றுபோன இதயத்தை மீண்டும் இயக்க உதவும் கருவி மார்க்விட் ரெஸ்பாண்டர்.
4. ஒரே ஒரு முறை மட்டும் மருத்துவர்கள் பயன்படுத்தும் ஊசிக்கு சோலோ ஷாட் என்று பெயர்.
5. மனிதனின் கண்கள் 17 ஆயிரம் வகையான நிறங்களை பிரித்துணர முடியும்.
6. குழந்தை பிறந்து நான்கு மாதங்களுக்குப் பிறகுதான் கண்ணீர் உற்பத்தி செய்யும் லாக்கிரீமல் சுரப்பி வேலை செய்யத் துவங்குகிறது. எனவேதான் பிறந்த குழந்தை அழும்போது கண்ணீர் வருவதில்லை.
7. திருமணத்தின்போது மணமக்களுக்கு மங்கல நாண் அணிவிக்கும் போது நாதஸ்வரத்தில் வாசிக்கப்படும் ராகத்தின் பெயர் – ஆனந்த பைரவி.

மேலும் தெரிந்து கொள்ளுங்கள்

1. அஜந்தா குகை எந்த மாநிலத்தில் உள்ளது ? – மஹாராஷ்ட்ரா மாநிலம்
2. இந்தியாவில் உள்ள நதிகளின் பெயர்கள் யாவும் பெண்ணின் பெயர்கள், ஒன்று தவிர – பிரம்மபுத்திரா
3. ஆசிய விளையாட்டுப் போட்டி எங்கு முதன்முதலில் நடைபெற்றது ? – புதுடெல்லி 1951

தன்னம்பிக்கைத் தொடர் - 3

சந்தனாவின் சாதனை

S. நடராஜ்

பள்ளி இறுதித் தேர்வில் கணிதத்தில் 51 விழுக்காடுகளே பெற்ற பவன்குமார் சந்தனா சாதித்தது என்ன ?

பொறியியல் துறையிலோ, I.I.T.யிலோ அல்லது சிறந்த விஞ்ஞானிகளாக விளங்குபவர்கள் அனைவருமே பள்ளியில் மிகச் சிறந்த மாணவர்களாக திகழ்ந்திருக்க கூடும் என்பதில்லை. ராக்கெட் தயாரிக்கும் கனவு காண்பவர்களுக்கு மிக அவசியமான பாடமாகக் கருதப்படும் கணிதத்தில் பவன் சந்தனா, பள்ளியில் வெறும் 51 மதிப்பெண்களே பெற்றிருந்தார். தேர்வில் தோல்வியடையாமல், வெற்றி பெறத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களை மட்டுமே வாங்கியிருந்தார். அந்த மதிப்பெண்களைக் கண்டு, அவர் மிகுந்த அவமான உணர்வுக்கு உள்ளானார். பள்ளியில் சவால்களைச் சந்தித்த, ஹைதராபாத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனுக்கு அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் தனக்கு எதிர்காலம் இல்லை என்று முடிவெடுப்பது என்பது சரியே.

ஆனால் அச்சிறுவனோ, ஒரு மதிப்பெண் மட்டுமே தனது அடையாளத்தை, எதிர்காலத்தைத் தீர்மானிக்க அனுமதிக்கவில்லை. அவர் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டார். பாட மதிப்பெண்களை விட அறிவின் மீதான ஆர்வத்திற்கு முக்கியத்துவம் அளித்து, தனது புரிதலை வளர்த்துக் கொண்டார். இந்திய தொழில்நுட்ப கழகத்தின் நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று 2007ஆம் வருடம் I.I.T. கரக்பூரில் மெகானிகல் என்ஜினியரிங் பட்டம் பெற்ற அவர், இஸ்ரோவில் இணைந்தார். ISROவில் இணைந்து மேம்பட்ட உந்துவிசை அமைப்புகள் (Propulsion Systems) மற்றும் ஏவுகலத் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டார்.

2018ல், இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்டை உருவாக்கும் உறுதியுடன், சக இஸ்ரோ பொறியாளரான நாகபாரத்டகாவுடன் இணைந்து, ஹைதராபாத்தில் 'ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்' (Sky Root Aerospace) நிறுவனத்தைத் தொடங்கினார். தொழில்நுட்ப சோதனைகள், நிதி நெருக்கடிகள் மற்றும் இதற்கு முன் எந்தவொரு இந்திய தனியார் நிறுவனமும் செய்யாத ஒரு செயலைச் செய்வதில் இருந்த பெரும் சவால்களென பல ஆண்டு கால போராட்டங்களை அந்நிறுவனம் எதிர்கொண்டது. ஜூலை 2020ல், ராக்கெட் என்ஜின் ஒன்றை வெற்றிகரமாகச் சோதனை செய்த முதல் இந்திய தனியார் நிறுவனமாக ஸ்கைரூட் உருவெடுத்தது. இந்தியச் சூழலில் இது ஒரு சிறு அடியாகத் தோன்றினாலும், வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அது அமைந்தது.

பல ஆண்டுகளின் போராட்டத்திற்குப் பின், ஒரு காலத்தில் கணித மதிப்பெண் கண்டு அவமானப்பட்ட அதே சிறுவன், சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் நின்று, தனது நிறுவனம் உருவாக்கிய 'விக்ரம் – 1' ராக்கெட் விண்வெளிப்பாதையை அடைவதைப் பார்த்தார்.அந்த ராக்கெட்டின் பயணத்தில் இடம் பெற்ற சுற்றுப்பாதை இயக்கவியல் (Orbital Mechanics), உந்துவிசை திசையன்கள் (Thrust Vectors), மற்றும் நிலைப்பிரிப்பு வரிசைகள் (Staging sequences) தொடர்பான கணக்கீடுகள், இந்திய மண்ணில் மேற்கொள்ளப்பட்ட மிகச் சிக்கலான கணக்கீடுகளில் சிலவாகும்.

அந்த வெற்றிக்குப் பிறகு அவர் முதலில் அழைத்தது முதலீட்டாளர்களையோ, ஊடகங்களையோ அல்ல; அவர் மீது நம்பிக்கை வைத்திருந்த தனது தந்தையைத்தான். மோசமான மதிப்பெண் காரணமாக தங்களைப் பற்றித் தாங்களே சந்தேகிக்கக்கூடிய ஒவ்வொரு இளம் வாசகருக்கும் சந்தனாவின் வெற்றிப் பயணம் ஒரு சிறந்த பாடமாகும். ஒரு தேர்வோ, அதில் நீங்கள் பெறும் மதிப்பெண்களோ, உங்கள் எதிர்காலத்திற்கான தீர்ப்பு அல்ல. அடுத்து நீங்கள் என்ன செய்ய வேண்டுமென தேர்ந்தெடுக்கிறீர்கள் என்பதே முக்கியம். அதாவது நீங்கள் தக்கவைத்துக்கொள்ளும் ஆர்வம், தொடர் முயற்சி மற்றும் மதிப்பெண்கள் காட்டிய வரம்புகளைத் தாண்டிப்பெரிய கனவுகளைச்சாதிக்க முன்னெடுக்கும் தங்கள் துணிச்சல் ஆகியவையே முக்கியமானவை ஆகும்.

தொடரட்டும் இளைஞர்களின் முயற்சி!
வருங்காலத்தில் வெற்றி முரசு கொட்டட்டும்!!

இளமையும் முதுமையும்

திருமதி. நிர்மலா ராஜவேல்
9841198008

மலைகளைத் தாண்டும் மானின் வேகமும் மதயானையைப்போன்ற அச்சமற்ற துடிப்பும் கொண்டது இளமை. துடிப்புடன் செயல்படும் உடல் வலிமை, புதிய விஷயங்களைக் கற்கும் ஆர்வம், எதிர்காலம் குறித்த கனவுகள், பொறுப்புகளற்ற சுதந்திரம் உடையது இளமை.

முதுமையோ, அமைதியான, ஆழமான நதி; மூழ்கினால் அறிவுபூர்வமான அனுபவ முதுமைகளை அள்ளித் தரும் வாழ்வின் ஆழமான அனுபவங்கள், அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும் அறிவு, அமைதியான மனநிலை, உடல் ஓய்வு தேடும் பருவமே முதுமை.

இளமை என்பது மை நிரம்பிய எழுதுகோல்
எழுதத் தெரிவதில்லை;
முதுமை என்பது எழுதத் தெரிந்த எழுதுகோல்
ஆனால் மசி இல்லை

எனக் கூறியுள்ளார் மேடைப்பேச்சாளர் பர்வீன் சுல்தானா அவர்கள்.

இனிது இனிது இளமை கடந்த முதுமையும் இனிது. இதெல்லாம் சொல்ல நல்லாத்தான் இருக்கு; வயசானாத்தான் தெரியும் நாங்க படற கஷ்டம் என நீங்க மனசுக்குள் சொல்றது எனக்கு நன்றாக கேட்கிறது. இளமையும், முதுமையும் வாழ்க்கையின் இரு பக்கங்கள். மனித வாழ்க்கையின் இரு முக்கியமான கட்டங்களாகக் கடக்கவேண்டிய பருவங்களாகும்.

இளமையென்பது பேராற்றலும், துடிப்பும், புதிய கனவுகளும் நிறைந்த வசந்தகாலம். இளமையில் சேகரிக்கும் சொத்துக்களை விடவும், நல்ல நினைவுகள் மட்டுமே முதுமையில் நம்மை அசைபோடச் செய்திடும். இளமையில் நமது உடலின் பலம், மனதின் தைரியம், எதனையும் துச்சமாக கடக்கக் கூடிய துணிவினைத் தருகின்றது. பிணிகளைக் கண்டும் அஞ்சாத மனநிலையைத் தருகின்றது. ஆனால் முதுமையென்பது அனுபவமும், அமைதியும், வாழ்வின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளும் அறிவும் நிறைந்த காலமாக இருப்பினும், குடும்பப் பொறுப்புகளை முடித்துவிட்டு இளைப்பாறும் பொன்னான பருவமாகும். மனதின் குரலைப் பொறுத்தே வயது மாறுபடுமெனச் சொன்னாலும் நமது உடலும், மனதும் சில நேரங்களில் சோர்வடைகின்றன. உறுப்புகளின் தேய்மானத்தால் உடல் சோர்ந்தாலும், உறவுகளின் அருகாமை இல்லாவிடில் மனம் மிகவும் கவலைகொள்கிறது. தன்னுடைய அனுபவங்களைப் பகிரவும், தன்னுடன் அமர்ந்து தன்னை விசாரிக்கவும் மற்றவர்களை எதிர்நோக்கிக் காத்திருக்கும் காலம் முதுமை மட்டுமே.

ஆனால் இன்று யாருக்கும் யாருடனும் பேசுவதற்கான நேரமே இருப்பதில்லை. அருகில் இருந்தாலும் நேரில் கூறாத வணக்கத்தை அலைபேசியில் கூறி நெருக்கத்தைத் தள்ளி தூரமாக்கி செல்கின்றனர். இன்றைய இளமை நாளைய நாளில் நிச்சயம் முதுமையை நோக்கி நகர்கின்றது. இதை உணர்ந்தோரால் மட்டுமே முதுமையின் எண்ண ஓட்டங்களைப் புரிந்துணர முடியும். முதுமை வந்து விட்டாலோ, இவற்றுக்கு நேர்மாறான சிந்தனைகள் வரத்தொடங்கி விடுகின்றன. லேசான தலைவலி வந்தால் கூட, ‘இது பெரிய நோயாக இருக்குமோ’ என்ற அதீத கற்பனை வந்து பயமுறுத்துகிறது. இவையெல்லாம் ஒரு பக்கமிருப்பினும், பள்ளியிலே படிக்காத, ஆசிரியர்கள் சொல்லாத, புத்தகங்கள் போதிக்காத, ஏன், மகான்கள் கூடத் தெரிவிக்காத பல அனுபவ அறிவுரைகளை இவ்வுலகம் நமக்கு இலவசமாக வழங்குகிறது. இவை அவர்களின் உடன்பிறப்புகளால், உறவினர்களால், நண்பர்களால், அலுவலக சக ஊழியர்களால் என பல்வேறு தளங்களில் உள்ளவர்களால் கிடைக்கின்றது.

இளமையில் பூஜ்யமாக இருந்த உலக அனுபவ அறிவு, முதுமையில் பல இலக்கங்களைக் கொண்டதாக விரிவடைகின்றது. நாம் இளமையில் நினைத்த உலகம் பொய்யென்று முதுமையில் தோன்றுகிறது. மொத்தத்தில் சொல்வதென்றால் இளமை என்பது பக்குவப்படாத எண்ண ஓட்டங்களாகவும், முதுமை என்பது நன்கு பக்குவப்படுத்தப்பட்ட எண்ணங்களாகவும் இருக்கின்றது. விதிவிலக்காக இளமையிலே சிலர் பக்குவம் அடைந்தும் வாழ்கின்றனர். ஒரு சிலரால் மட்டுமே இதுவும் சாத்தியப்படுகின்றது.

ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கும் முதியவர்கள் அக்குடும்பத்தின் மதிப்புமிக்க பொக்கிஷங்கள் என்பதை உணர்ந்து அவர்கள் கரம் பற்றிப் பேச நேரம் ஒதுக்கிக் கொள்வோம். வயதான நபர்களுடன் பழகுவது அருமையான உறவுப் பாலத்தை ஏற்படுத்த உதவும். குடும்பம், உறவுகள், சமூகம் மற்றும் தலைமுறைகள் போன்றவற்றுடனான ஒரு பலமான தொடர்பை வளர்க்கும். மூத்தோர்கள் தாங்கள் கடந்து வந்த காலத்தைப் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளையும் இளையோருக்கு வழங்குவார்கள். அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள ஏராளமான வாழ்க்கைப் பாடங்களும், அனுபவங்களும் கொட்டிக் கிடக்கின்றன.

அதே போல இளையோரிடமிருந்து புதுமையான யோசனைகளையும், உற்சாகத்தையும் மூத்தோர் ஏற்று நடந்தால் சமநிலை காணமுடியும். இளமைக் காலத்தில் முதுமையின் உணர்வுகளைப் புரிந்து அவர்களைக் குழந்தைகளாகப் பாவித்து நம்மை வளர்த்தவர்களை நாம் அரவணைக்க வேண்டும். பத்து பிள்ளைகள் இருந்தாலும், எந்தப் பிள்ளையையும் பெற்றோர்கள் தங்களை விட்டு பிரித்துப் பார்த்ததில்லை; பார்ப்பதில்லை. ஆனால் இன்றைய இயந்திரமயமான வாழ்க்கைச் சூழலில், பார்த்து பேசக்கூட முடிவதில்லை. இதில் பெற்றோர்களும் பாசத்தோடு, பணத்தையும் ஊட்டி வளர்ப்பதால் பாசம் சற்றே தள்ளிச் சென்று விடுகிறது.

முதுமையில் இளமையின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாவிட்டாலும், மனதளவில் ஒத்துப்போக பழக்கிக் கொண்டால் இளமையும், இளமையைத் தாண்டிய முதுமையும் என்றென்றும் இனிதே!

✣ ✦ ✣

நிலையாமை

A. ராஜரத்தினம், சென்னை
9444224366

பொருட்கள் நிலையில்லாதவை. உடம்பு, செல்வம், இளமை, உயிர் போன்ற அனைத்தும் நிலையற்றவை. திடீரென்று இவை மாற்றம் அடையும் அல்லது மறையும் தன்மை உடையன.

> "நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
> புல்லறி வாண்மை கடை" (குறள் 331)

நிலைக்காதவற்றை நிலைத்து நிற்கும் என்று தவறாகப் புரிந்துகொள்ளும் அறியாமையே மிகவும் இழிந்த நிலையாகும் என்று பொருள்.

> "அற்கா இயல்பிற்குச் செல்வம் அதுபெற்றால்
> அற்குப ஆங்கே செயல்" (குறள் 333)

செல்வம் நிலைக்காத தன்மை கொண்டது. எனவே அச்செல்வத்தைப் பெற்றால், உடனே நிலைத்து நிற்கும் அறச்செயல்களைச் செய்துவிடவேண்டும். ஒருவன் உலகப் பொருட்களின் நிலையாமைத் தத்துவத்தைத் தெரிந்துகொள்ளும் போதுதான் அவனது அறிவு அறநெறியை நாடும்.

நல்வினைகள், தீவினைகள் ஆகியவற்றால் அடைக்கப்பட்டது உடம்பு. இது உலகில் வாழும் சில காலத்தில் தனக்கு என்று விதிக்கப்பட்ட வினை போகங்களை அனுபவிக்கும். அவன் வாழ்கின்ற காலத்தில் கடைப்பிடித்து வந்த விரதத்தின் பயனும் ஞானமும்தான் கூடவே வரும். மனிதன் தன்னை சுற்றியுள்ள இயற்கை, விலங்கு, தாவரம் ஆகியவற்றின் அழிவைக் காணும் போது கூட தனது அழிவை எண்ண மறுக்கிறான் (திரு 143). முப்பது வயதிற்குள் உலகின் இயல்பு உணர்ந்து ஆன்ம அறிவைப் பெறவேண்டும்.

வீடு, மனை, பொன், பொருள், மாடு, ஆடு முதலியவை செல்வங்களாக உள்ளன. இவை வாழ்க்கைக்குத் தேவை. இருப்பினும் இவற்றின் மீது பற்று மிகுதியாக இருக்கக்கூடாது. ஏனென்றால் இவை நிலையற்றவை. இறைவனே நிலையானவன். பொருட்செல்வம் நிலையற்றதாகும். அது சக்கரம் போன்று ஓரிடத்தில் இருந்து வேறோர் இடத்திற்கு உருண்டு செல்லக் கூடியது. திருமந்திரம் பொருட் செல்வத்தின் நிலையாமையை விரிவாகப் பல பகுதிகளில் எடுத்துரைக்கிறது. நிலையாத பொருட் செல்வத்தைத் திருமூலர் நிலவில்லா இருளிற்கும், தனக்குதவா நிழலுக்கும், நில்லாது ஓடி வறளும் ஆற்று வெள்ளத்திற்கும், கடல்நீரில் கவிழ்ந்து அழியும் கப்பலுக்கும் ஒப்புமை ஆக்கி மனித குலத்திற்கு அறிவூட்டுகின்றார். வறுமையின்றி வளத்துடன் வாழவேண்டும் என்றால் மனிதன் சிவனைச் சிந்திக்க வேண்டும்.

அருட்செல்வம் உயிருடன் இறுதிவரை வரக்கூடியது. தீவினை காரணமாக வறுமை ஒருவனைப் பற்றிக்கொள்கிறது. புலன்களை அடக்கிச் சிவ சிந்தனையுடன் இறைவனை வேண்டினால் தீவினை நீங்கும். வறுமை விலகும். வீடுபேறு கிட்டும் என்று திருமூலர் கூறுகிறார்.

இளமை என்பது குறிப்பிட்ட வயது வரைதான் இருக்கும். பின் அது மாறிவிடும். எனவே என்றும் இளமையோடு வாழமுடியாது. ஔவை இளமையில் கல்வி கற்க வேண்டும் என்று கூறுகிறார். அதற்கேற்ப நாம் ஞானக்கல்வியை இளமையிலேயே கற்கவேண்டும். இளமையும், உடல் வலிமையும் இருக்கும்போதே வாழ்நாளை வீண் ஆக்காமல் இறைநிலையை அடையவேண்டும்.

> "பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
> காலங் கழிவன கண்டும் அறிகிலார்
> ஞாலம் கடந்தண்டம் ஊடறுத் தான்அடி
> மேலும் கிடந்து விரும்புவன் நானே" (திரு. 181)

பாலன், இளையன், முதியோன் என்று பருவ காலங்கள் கழிகின்றன. ஆனால் உலக மக்கள் இளமையில் நிலையாமையை உணராமல்

இருக்கின்றனர். அவர்கள் இந்த உலகத்தைக் கடந்து அதற்கு மேலாக உள்ள அண்டங்களையும் ஊடறுத்து நிற்கின்ற இறைவனடிக்கு அன்பு செய்தல் வேண்டும். இளமையோடு இருக்கும்போதே இறைவன் திருவடியை எண்ணுதல் நல்லது. சிலர் துன்பம் வரும்போது இறைவனை நினைக்கிறார்கள். அது விலகியவுடன், மறந்துவிடுகிறார்கள். இது தவறு. இறைவனை எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கவேண்டும்.

உயிர் நிலையற்றது. எனவே அறவாழ்வு வாழவேண்டும். இத்தகைய அழியும் தன்மையுள்ள உடம்பிற்குள் இறைவன் இருக்கின்றான். இறைவன் தங்கிஉள்ளஇந்தஉயிரானதுஎவ்வளவு அருமையானது என்பதை உணர்தல் வேண்டும். வாழும்போது செம்மையாக வாழவேண்டும். உண்ணும்போது யார் வந்தாலும் அவர்களுக்கு உணவு கொடுத்துப் பின் உண்ணவேண்டும்.இத்தகைய அறச்செயல்களைஉயிர் இருக்கும்போதே செய்யவேண்டும். அகங்காரத்தை தவிர்க்கவேண்டும். பொறாமையை ஒழிக்க வேண்டும். சினத்தை அடக்கவேண்டும். துறவிகளைப் போற்றி வாழவேண்டும். பிறருக்கு ஈவதால் ஆயுள் பெருகும்.

யாக்கை, இளமை, செல்வம் என்பன இன்பத்திற்குக் கருவிகள். இவை நிலையற்றவை. இவற்றோடு வாழும் வாழ்க்கையும் நிலையற்றது. விரத ஞானங்களால் உடம்போடு கூடிய இல்வாழ்க்கையை ஒளிபெறச் செய்யவேண்டும். இறை திருவடியை வணங்கிப் பேறுபெற வேண்டும்.

✣ ✦ ✣

அப்பாக்களின் வாழ்வில் நெகிழ்ச்சியான தருணங்கள்

காலை எழுந்தவுடன் தனது குழந்தை அரை தூக்கத்தில் தனது தந்தை அருகே ஒரு குட்டித் தூக்கம் போடும் அந்த வரத்திற்காக ஏங்காத தந்தை இல்லை.

வாழ்வில், ஆணானாலும் பெண்ணானாலும் பல பரிணாமங்களைக் கடக்கின்றனர். ஒரு பெண் மகளாக, மனைவியாக, தாயாக, சகோதரியாக, தோழியாக எனப் பலவற்றைக் கூறலாம். ஆனால், நாம் யாரும் அநேகமாக பெண்ணுக்கு நிகரான ஆணின் பங்கைப் பற்றி பேசுவதில்லை. அதுவும் முக்கியமாக ஓர் ஆண் ‘அப்பா’வாக மாறுவதைப் பற்றி யாரும் உரையாடுவது இல்லை. தாய்மை பற்றியும், குழந்தைப் பேறு பற்றியும் கவிதைகள் எழுதி எழுதி, அப்பாவைப் பற்றி சற்று யோசிக்க மறந்துவிட்டோம். எந்த அளவுக்கு எனில், ‘தாய்மை’ என்ற சொல்லுக்கு இணையான ஆண்பால் சொல்லே நமக்குத் தெரியாதே!

தாய் நம்மைப் பத்து மாதம் கருவில் சுமக்கிறாளென்றால், தந்தையோ தன் வாழ்நாள் முழுவதும் குடும்பத்தைத் தன் நெஞ்சில் சுமக்கிறார். குடும்பத்திற்கு அரணாகவும், குழந்தைகளுக்கு ஓர் வழிகாட்டியாகவும் விளங்குகிறார். தாயின் மனநிலையை பலமுறை, பல கோணங்களில் கேள்விப்பட்ட நாம் இன்று, சில நொடிகள் நம் தந்தையைப் பற்றிச் சிந்திக்கலாம். சில நேரங்களில், செல்லமாகவும், அநேகமாக கறாராகவும் இருக்கும் நம் அப்பாக்களின் வாழ்வில், அவர்கள் ஆழ் மனதில் புதைந்து கிடக்கும் மறக்க முடியாத தருணங்கள் பற்பல.

1. முதல் முத்தம்!

முதன்முதலில், தன் குழந்தையின் முகத்தைப் பார்த்து முத்தமிட்ட அந்த நொடி! அந்த உணர்ச்சியை எந்த கவிஞனாலும், எழுத்தாளனாலும், இன்றுவரை கூற முடிந்ததே இல்லை. தன் ரத்தம், தன் வாரிசு, தன் குழந்தை, அடுத்த சில வருடங்களில் தன்னைத் தாங்கப் போகும் தூணான, அக்குழந்தையை முதன்முதலில் கையில் ஏந்தி, முத்தம் கொடுத்த அந்த நொடியை எந்த ஒரு அப்பாவாலும் மறக்கவோ, விளக்கவோ முடியாது.

2. ஆள்காட்டி விரல்!

குழந்தை தன் பிஞ்சு கைகளால், அந்த மெல்லிய விரல்களால், முழு கையையும் வைத்து அப்பாவின் ஆள்காட்டி விரலைப் பிடிக்கும். அந்த அழகை ரசிக்கவே அப்பாவிற்கு ஆயிரம் கண்கள் வேண்டும்! என்ன செய்வார் அவர்? நேரம் கிடைக்கும்போது எல்லாம் தன் விரலை குழந்தையிடம் நீட்டி நீட்டி விளையாடும் அப்பாக்களை தினமும் பார்க்கலாம். அதன் பின்னால், எவ்வளவு பேரானந்தம் ஒளிந்து இருக்கிறது என்பதை நம்மால் ஒருகாலமும் உணர முடியாது.

3. ராஜகுமாரியின் சேட்டைகள்!

ஒரு அப்பாவுக்குப் பெண் குழந்தை பிறந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். அந்த குட்டி தேவதையை தன் மடியை விட்டு இறக்கவே மாட்டார். தன் மார்பில் அவள் எட்டி உதைக்கும் சுகமும், அவளின் அழகிய கொஞ்சல் சிரிப்பும் அப்பாவை வீழ்த்தும் அஸ்திரங்கள். ராஜகுமாரியை கொஞ்சி கொஞ்சி நாட்களைக் கழிக்கும் அப்பாவின் மனதில் இருக்கும் ஒருவித உணர்ச்சி... அதை குறிக்க சொற்களை கண்டுபிடிக்கத் தான் வேண்டும்!

4. அப்பா!

'ங', 'க', 'ஆ', 'ஊ' என தன் குழந்தையின் ஓசைகளையும், அழுகுரலையும் கேட்டு கேட்டு திருப்தி அடைவதற்குள் 'அப்பா' என ஒரு குரல் கேட்கும்! கட்டுக்கடங்காத காட்டாறு போன்ற மகிழ்ச்சிதான் அங்கு பாயும். ஆனால், நம் அப்பாக்களுக்குத் தான் அம்மாவைப் போல மகிழ்ச்சியை வெளிப்படுத்த தெரியாதே, அதனால் வாயெல்லாம் பல்லாக, 'அப்பா சொல்லு, அப்பா சொல்லு' எனக் கூறிக்கொண்டே இருப்பார்கள்!

5. முதல் அடி!

தன் மார்பிலும், முதுகிலும், தோளிலும் தவழ்ந்த அந்த பிஞ்சு பாதங்கள் முதல் அடியை எடுத்து வைத்ததும், அம்மாவின் சிரித்த முகம்தான் அநேகமாக முதலில் தெரியும். ஆனால், அப்பாவின் ஆனந்தக் கண்ணீரும், மகிழ்ச்சியும் நமக்கு அவ்வளவாக தெரிவதில்லை. காரணம், அவர்கள் நாம் விழாமல் இருக்க நமக்குப் பின்னால் நம்மைத் தாங்கிக் கொண்டு இருப்பார்கள்.

6. வெற்றி இல்லை சாதனை!

மெல்ல அப்பாவின் சுண்டுவிரலை பிடித்து நடைபயின்ற தன் கண்மணியின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் அப்பாவின் வெளிப்படுத்தப்படாத குதூகலம் ஒளிந்து இருக்கும். நம்முடைய ஒவ்வொரு சிறு வெற்றியைக் கூட மிகப் பெரிய சாதனையாக எண்ணி நம் அப்பா கர்வப்படுவார். நம்முடைய ஒவ்வொரு செயலையும் சாதனையாக மாற்றுவதில் அப்பாவிற்கு பெரும் பங்கு இருக்கிறது! ஆனால், நம் அப்பா எதையும் வெளிக்காட்டுவதில்லை, கண்டிப்பைத் தவிர! ஆனால் அதே கண்டிப்புதான் நம்மை ஒரு சிறந்த ஆளுமையாக மாற்றுகிறது என்பதை காலம்தான் நமக்கு உணர்த்தும்.

7. குட்டி தேவதை வளர்ந்த நொடி!

தன் விரல் பிடித்து வளர்ந்த தன் குட்டி தேவதை பருவ வயதில், பூப்பெய்தியதும், தன்னை அறியாமல் ஒரு ஆனந்தமும், பயமும் அப்பாவின் உடல் எங்கும் பரவும். அந்த உணர்வை எப்படி சொல்லலாம்? தன் பெண்ணைப் பத்திரமாக பார்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயமும், அவளுக்குத் தேவையானதைச் சேர்க்க வேண்டும் என்ற பொறுப்பும், இன்னும் வெகுசில வருடங்களில் அவள் இன்னொருவனின் மனைவி என்கிற எண்ணத்தின் தாக்கமும், பேரானந்தமும் ஒருசேர ஒருவித உணர்ச்சியை அப்பாவின் மனதில் உருவாக்கும். அதைப் பெண் பிள்ளைகளைப் பெற்ற அப்பாக்களால் மட்டுமே உணரமுடியும்.

8. திருமணம்!

காலங்கள் உருண்டோட 'நேற்று பிறந்த குழந்தை போல' தோன்றும் தன் பிள்ளைக்கு திருமண நாள் குறிக்கப்படும். மகனாக இருந்தால், அவனை நல்ல ஒரு ஆண்மகனாக வளர்த்து, தன்னை நம்பி வரும் பெண்ணை தன் தாய்க்கு நிகராக நடத்துபவனாக மாற்றி இருக்க வேண்டும். மகளாக இருந்தால், அவளுக்கு ஏற்ற துணையை தேர்ந்தெடுக்க வேண்டும். தன் மகளின் கைகளை தன்னைவிட பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும் ஓர் ஆடவனிடம் ஒப்படைக்கும் நொடி... நம் மகளின் வாழ்வு நிறைவானதாக இருக்கவேண்டும் என்ற வேண்டுதல் ஒருபுறமும், இனி இவள் மீது இவள் கணவனுக்கே முதல் உரிமை என்ற நிதர்சனமான உண்மை மறுபுறமும் மாறி மாறி அலைக்கழிக்கும். ஆனாலும், உதட்டில் புன்னகையுடனும், கண்களில் ஒளிந்திருக்கும் கண்ணீருடனும் தன் மகளை, மருமகளாக இன்னொரு வீட்டிற்கு வழி அனுப்பி வைக்கும் அப்பாவின் மனதில்தான் எத்தனை எத்தனை எண்ணங்கள்!

இப்படி ஒரு அப்பாவின் வாழ்வு முழுவதுதே சிறுசிறு நெகிழ்ச்சியுறும் தருணங்களால் நிறைந்தவையே. ஆனால், நம் கண்களுக்குத்தான் அது தெரிவதில்லை. நாம் நம் அப்பாவிடமிருந்து எவ்வளவு தொலைவில் இருந்தாலும், அவரிடம் எவ்வளவு கோபப்பட்டாலும், அவர் நம் மீது வைத்திருக்கும் அன்பும் பாசமும் என்றும் குறையாது. சின்னச் சின்ன தருணங்களிலேயே மனநிறைவு அடையும்.

அப்பாக்களுக்கு நிகர் யாருண்டு பூமியில்...?

அர்ச்சனா சுவேதாரண்யம், சென்னை
9943702054

அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவின் வளர்ச்சிக்கும், அதன் சந்தாதாரர்களை அதிகப் படுத்தவும் தங்களின் மேலான கருத்துகளை வரவேற்கிறோம்.

- **கைலை. சண்முகம்,** செயலாளர்

பிள்ளையார் மகிமை

முப்பது முக்கோடி தேவர்கள் முதல் ஓரறிவு கொண்ட உயிரினங்கள் வரை எல்லா ஜீவன்களுக்கும் படியளிப்பவர் பரமேஸ்வரன். இதை அறியாதவளா பார்வதி தேவி? ஆனாலும் இந்த தொழிலை ஈசன் சரிவர கவனிக்கிறாரா? என்றொரு சந்தேகம் அதற்கு தீர்வு காண முனைந்தாள். சிறு பாத்திரம் ஒன்றை எடுத்து வந்து அதற்குள் கறுப்பு எறும்புகள் சிலவற்றை பிடித்துப் போட்டு மூடிவிட்டாள். இந்த எறும்புகளுக்கு ஈசன் எப்படி உணவு அளிக்கிறார், பார்க்கலாம்!'' என்பது அவளது எண்ணம்.

ஸ்வாமி ''நேற்று எல்லா ஜீவராசிகளுக்கும் படியளந்தீர்களா'' என்று ஈசனிடம் கேட்டாள். உலகநாயகி தன்னுடன் விளையாடுகிறாள் என்பது ஈசனுக்குப் புரிந்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ''இதிலென்ன சந்தேகம்... பாத்திரத்தில் நீ சிறை வைத்த எறும்புகளைப் பார்த்திருந்தால் இந்த கேள்விக்கு இடமில்லை'' என்றார்.

பார்வதி தேவி, ஓடோடிச் சென்று பாத்திரத்தை திறந்து பார்த்தாள். சுறுசுறுப்புடன் எறும்புகள் சுற்றிக்கொண்டிருந்தன. அத்துடன் சில அன்னப்பருக்கைகளும் கிடந்தன. ''ச்சே,... வீணாக ஸ்வாமியை சந்தேகப்பட்டுவிட்டோமே! என வருந்தினாள் தேவி. மகேஸ்வரி, உனது ஐயம் விலகியதா? குறும்பாகக் கேட்ட பரமேஸ்வரன் சரி, சரி, விநாயகன் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறான், போய்ப் பார்! என்றார். விநாயகரை சந்தித்த பார்வதி தேவி அதிர்ந்து போனாள் ஒட்டிய வயிறும் வாடிய முகத்துடனும் இருந்தார் கணபதி.

''ஏனம்மா அப்படி பார்க்கிறீர்கள். எல்லாவற்றிற்கும் தாங்கள்தான் காரணம்!'' என்றார் விநாயகர். ''என்ன சொல்கிறாய், நீ'' படபடப்புடன் கேட்டாள் பார்வதி தேவி. அன்னையே, அகிலம் ஆளும் நாயகனின் நித்தியதர்ம பரிபாலனத்தில் சந்தேகம் கொண்டது தாங்கள் செய்த முதல் தவறு. அடுத்தது அப்பாவி எறும்புகளைப் பட்டினி போடும் விதம் சிறையிட்டது. தாயின் பழி தனயனைத்தானே சேரும் எனவே எறும்புகளின் பசியை நான் ஏற்றுக்கொண்டு, தாங்கள் எனக்களித்த அன்னத்தை எறும்புகளுக்கு இட்டேன். பட்டினி கிடந்ததால் எனது வயிறு சிறுத்துப் போனது! விளக்கி முடித்தார் விநாயகர்.

பார்வதி தேவி கண்கலங்கினாள். விநாயகரை அழைத்துக்கொண்டு சிவனிடம் சென்றவள், ''ஸ்வாமி, என்னை மன்னியுங்கள், நான் செய்த தவறுக்கு நம் மகனை வதைக்க வேண்டாம்'' என்று வேண்டினாள். ''வருந்தாதே, தேவி பக்தர்கள் என்பால் வைக்கும் நம்பிக்கை சற்றும் குறைவில்லாததாக இருக்க வேண்டும். அந்த நம்பிக்கைக்கு பூஜையோ வழிபாடோ கிடையாது. இதை உலக மக்களுக்கு உணர்த்தவே இந்த திருவிளையாடல். அன்னபூரணியான நீ உன் பிள்ளைக்கு அன்னம் அளித்தாய். அவன் அதை எறும்புகளுக்கு வழங்கினான். விநாயகனின் பெருமையை போற்றும் வகையில் அவை இனி பிள்ளையார் எறும்புகள் என்றே அழைக்கப்படட்டும் என்று அருளினார். பிறகு பார்வதியிடம் ''எறும்பு உண்டது போக மீதம் உள்ள அன்னப் பருக்கைகளை விநாயகனுக்கு கொடு என்றார்'' அப்படியே செய்தாள் பார்வதி. அந்த பருக்கைகளை உண்ட விநாயகரின் வயிறு பழைய நிலைக்குத் திரும்பியது. அவரது பசியும் தீர்ந்தது.

தென்னிந்திய ஆகம மரபுகளில் பழக்கவழக் கங்களில் விநாயகர் பிரம்மச்சாரியாக இருந்து வந்தார். ஆனால் வடஇந்திய மாநிலங்களில் விநாயகர் தேவிகளுடன் அருள்புரிகிறார். வடஇந்திய புராணங்களின்படி தேவர்களுக்கு எல்லாம் திருமணம் நடந்தது. விநாயகர் இதனால் மனம் வருந்தி தனக்கு திருமணம் ஆகாமையால் கோபம் கொண்டு தனது வாகனமான மூஷிகனை கூப்பிட்டு மற்ற எலிகளுடன் சேர்ந்து நடக்கும் திருமணங்களை தடுத்து நிறுத்த வேண்டும் என கட்டளையிட்டார். திருமண ஊர்வலம் செல்லும் பாதையில் பள்ளம் தோண்டி, திருமணம் நடக்கும் இடங்களையும் தோண்டி திருமணத்தை தடுத்து நிறுத்த முயற்சிப்பதைக் கேள்விப்பட்ட தேவர்கள் பிரம்மனிடம் முறையிட்டனர். பிரம்மன் புத்தி, சித்தி என்ற இரு சக்தியை தன் அருளால் படைத்து, இரு பெண்களையும் விநாயகருக்கு மணம் முடித்து வைத்தார். அதன்பின் விநாயகர் எலிகளைக் கூப்பிட்டு நடக்கும் தேவர்களின் திருமணங்களை தடுக்கவேண்டாம் என கட்டளையிட்டார். புத்தி என்றால் ஞானம், சித்தி என்றால் வெற்றி. ஞானம் இருந்தால் தான் சித்தி (வெற்றி) அடைய முடியும். விநாயகருக்கு சுபம் லாபம் என இரு குழந்தைகள் பிறந்தன. சுபம் என்றால் மங்களம், லாபம் என்றால் செல்வம். அதனால்தான் வியாபாரம் முதலிய நல்ல காரியங்கள் தொடங்கும் முன் சுபம் லாபம் என எழுதி ஆரம்பித்து வைப்பார்கள். விநாயகர் அருள் இருந்தால் முதலில் ஞானம், பிறகு வெற்றி; அதன் பின் செல்வம், மங்களங்கள் உண்டாகுமென புராணங்கள் கூறுகின்றன. கணபதியை வணங்கி வாழ்வில் வளம் பெறுவோம்!

தாரிணி தியாகராஜன்
மயிலாடுதுறை

மனதில் உறுதி வேண்டும்

டாக்டர் வே. கிருஷ்ணகுமாரி
9840623960

பூஜை அறையிலிருந்து பூஜை முடிந்து வெளியே வந்த மகாலிங்கம், சாப்பாட்டு மேஜையில் கையில் புத்தகத்தை வைத்துக்கொண்டு, ஆனால் எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த தன் மகள் யாழினியைப் பார்க்கிறார். தன் மகள் ஏதோ குழப்பத்தில் இருக்கிறாள் என புரிந்துகொண்ட அவர், தன் மனைவியிடம் மூன்று பொருட்களைத் தந்து, தனித்தனியாக வேகவைத்து எடுத்து வருமாறு கூறி, மகளின் அருகில் சென்றமர்ந்தார்.

அவளிடம் என்ன குழப்பமென்றோ, என்ன சிந்தனையில் இருக்கிறாள் என்றோ அவர் கேட்கவில்லை. அவர் அமர்ந்தவுடன், அவரது மனைவியும் வேகவைத்த பொருட்களைக் கொடுத்து, தானும் ஒரு நாற்காலியில் அமர்ந்தாள். யாழினியிடம், தன்னருகில் மேஜையில் இருந்த பொருட்களைக் காட்டி அவர் விளக்கம் அளித்தார். முதல் கிண்ணம் வேகவைத்த முட்டை; மிருதுவாய் இருந்த முட்டை கடினமாக மாறி உள்ளது. அடுத்தது உருளைக்கிழங்கு; கடினமாக இருந்த கிழங்கு மிருதுவாக மாறி விட்டது. மூன்றாவது காப்பித்தண்ணி; காப்பித்தூள் கொதித்தவுடன் நீரில் கரைந்து கலந்து விட்டது. ‘உனக்கு இதிலிருந்து ஏதாவது புரிகிறதா’ என அவர் கேட்க அம்மாவும், மகளும் அவரது முகத்தை ஆவலோடு நோக்கினர்.

இது ஒரு எடுத்துக்காட்டுத்தான். நமக்கு பல பிரச்னைகள் வரலாம். அதிலிருந்து நாம் மீண்டு வர, நம்மைக் கடினமாக்கி கொண்டு அதை கடந்து போகிறோமா, அல்லது உருளைக்கிழங்கு போல் அதை நினைத்து வருத்தப்பட்டு, மனம் வருந்தி குழைகின்றோமா? அடுத்தது காப்பித்தூள் கொதித்த வுடன் கரைந்து கலந்து விட்டது. பிரச்சனைகளும் அப்படித்தான். நாம் அதிலிருந்து மீண்டு வர வழிதேடி நம்மை கடினமாக்கி, அதை கடந்து போகிறோமா, அல்லது உருளைக்கிழங்கு போல மசிந்து, பிரச்சனையை நினைத்து வருந்துகிறோமா? அல்லது காப்பித்தூள் போல பிரச்னைகளில் கரைந்து, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து மீள வழியின்றி அதில் மூழ்கிப் போகிறோமா என்பதில்தான் நம் சாமர்த்தியம் உள்ளது என அப்பா, அமைதியாக எடுத்துக் கூறினார்.

புரிந்துகொண்டமகள், ‘அப்பா !நான்உறுதியுடன் நின்று, பிரச்சனையை நானே தீர்க்க முயல்வேன். முடியவில்லையெனில் உங்களிடம் வருவேன் என்று மகிழ்ச்சியாக துள்ளிக் குதித்தோடினாள். இவ்வளவுதான்; பிரச்சனைகள் இல்லாதவர் யார்? காலையில் சூரியன் உதிப்பது போல, ஒவ்வொரு நாளும் ஏதேதோ பிரச்சினைகள்? காலையில் குழாயில் தண்ணீர் வரவில்லை என்பதில் ஆரம்பித்து, குழந்தைகள் சொல் பேச்சு கேட்கவில்லை; கணவர் குணம் மாறுகிறது; வேலையில் மற்றவர்கள் தொல்லை தருகிறார்கள் என்பது வரை சின்னதும், பெரிதுமாக பிரச்னைகள் நம்மைச் சுற்றி வலம் வருகிறது.

ஆனால் ஒரு விஷயம், ஒரு கல்லில் விழும் ஒவ்வொரு அடியும், அக்கல்லினை அழகான சிலையாக மாற்றும். அதே போன்று ஒவ்வொரு பிரச்னையும் நம்மை, நமது வாழ்வை செதுக்குகின்றது. பிரச்னைகளில் அடிபட்டு, தீர்வு கண்டு எழும் போது, நாம் புடம் போட்ட பொன்னாக பிரகாசிக்கிறோம். இல்லாவிடில் நாம் படிக்கல்லாக அப்படியே கிடக்க வேண்டியதுதான். ஒரு நோய் வந்தால் மருந்துகள் எடுத்துக் கொள்கிறோம். ஆனால் அந்நோய் ஏன், எப்படி வந்தது என்றும் யோசிக்கிறோம் அல்லவா? அதே போன்று பிரச்சினை என்று ஒன்று வந்தால், புலம்புவதை விடுத்து, அதன் ஆழம் புரிந்து ஏன் வந்தது என்று ஆராய்ந்து, ஆணி வேர் புரிந்து அதற்கேற்ற தீர்வு காண வேண்டும்.

குடும்பத்தில் கூட ஒரு சிறிய காப்பி சூடு இல்லை என்று சிறிய சண்டை ஆரம்பிக்கும். நாம் அதை வளர்த்துகொண்டே போனால், எத்தனையோ வருடங்களுக்கு முன்பு கல்யாணத்தில் கூட சரியாக கவனிக்கவில்லை என்ற அந்த மூல வித்தில் வந்து நிற்கும். குடும்ப பிரச்சனைகளில் கவனம் தேவை. உடனுக்குடன் பதில் கொடுத்து, வளர்த்துக் கொள்ளாமல் விட்டுக் கொடுத்து, ஈகோ பார்க்காமல், யாராவது ஒருவர் தாழ்ந்து போய் வளரவிடாமல் முடித்தால், அங்கு மனக்கசப்பு இல்லை. பேசுவதால் நமக்கு ஏற்படும் கோபத்தை விட நம் அன்பு உயர்ந்தது என்று புரிய வைப்பின், பிரச்சினை ஓடிவிடும். ‘விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை.’ பொதுவாக நம் இனத்தில் அன்பு, அரவணைப்பு, சகிப்புத்தன்மை கொண்டவராக இருத்தல் இயல்பு. நம் வளர்ப்பு முறையும் இதுதான். ஆனால் சமீப காலங்களில், இளைய தலைமுறைகளில் இதில் சற்று மாற்றம்

காணப்படுவதும் விட்டுக் கொடுக்கும் தன்மை குறைந்து வருவதும், அது நமது குடும்ப அமைப்பை சற்றே ஆட்டிப் பார்ப்பதும், நாம் சிந்திக்க வேண்டிய விஷயம்.

அலுவலகத்திலும், அனைவரும் ஒன்று போல இருப்பதில்லை. அங்கேயும் நான் இதோ வருகிறேன் என்று தேவையற்ற துன்பங்கள் வந்து சேரும். அதையும் நாம் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். அதில் கரைந்து வருந்தி, சுய பச்சாதாபம் கொள்ளாமல், எதிர்த்து அல்லது வளைந்து கொடுத்து, அதன் தன்மைக்கேற்ப அதைக் கடந்து சென்று நம் பணிகளை வெற்றிகரமாக தொடர வேண்டும். முக்கியமாக நாம் எப்போதும் பிரச்சினைகளை பூதக் கண்ணாடி கொண்டு பார்த்து அல்லது ஊதி ஊதி பெரிதாக்காமல், பதட்டமின்றி, அதை விட்டு விலகி ஓடாமல், பேசித் தீர்க்க முயற்சிக்கலாம். தீர்க்க முடியாத பிரச்சினை என்று ஒன்றுமில்லை. எந்தவித இடியாப்ப சிக்கல்களையும் பொறுமை இருந்தால் களைந்து விடலாம். கேள்வி என்று ஒன்றிருந்தால், விடை நிச்சயம் இருக்கும். பிரச்சினை என்று ஒன்று வரின், தீர்வு என்று ஒன்று இருக்கும். பிரச்சினை நம் வாழ்வை பாதிக்க விடாமல் தன்னம்பிக்கையோடு அதனைச் சரிசெய்ய நம்மால் முடியுமென நினைப்போம். மன உறுதி கொண்டு அதனைத் தீர்ப்போம். பிரச்சினைகளை அடையாளம் காண்போம்! அதை முறியடிக்கும் சக்தியை, ஆற்றலை தீர்வுகளுக்குத் தருவோம்! வாழ்வில் வெற்றி பெறுவோம்!

வாழ்க வளமுடன்! வாழ்க நலமுடன்!!

✤ ✦ ✤

வருந்துகிறோம்

சீர்காழி தாலுகா ஆமபள்ளம் கிராமத்தைச் சேர்ந்த N. குருநாதன் அவர்கள் 25.7.26 அன்று இயற்கை எய்தினார் என்பதையும்,

சீர்காழி தென்பாதி தெட்சிணாமூர்த்தி நகரைச் சேர்ந்த கீதா தாயார் பானுமதி அம்மையார் அவர்கள் 6.8.26 அன்று இயற்கை எய்தினார் என்பதையும்

சீர்காழி (T.K) வைத்தீஸ்வரன் கோவில் சிட்டிபாபு அவர்களின் தாயார் புனிதா அம்மையார் அவர்கள் 18.8.26 அன்று இயற்கை எய்தினார் என்பதையும் சீர்காழி சங்கம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

✤ ✦ ✤

ஆடி மாத இதழ் குறித்து ஓர் கருத்தும், ஆசிரியர் குழுவின் விளக்கமும்!

கார்குலச் சொந்தங்களே வணக்கம்!

‘மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்பதற்கு எடுத்துக்காட்டாக நமது கார்காத்தார் ஒப்புரவு ஓர் களஞ்சியம். அனைவரும் படிக்க வேண்டிய ஒரு இதழ். வரன் பார்க்க மட்டும் இதை பயன்படுத்தாதீர்கள். இதழ் சிறிதாயினும் அதனுள்ளே உள்ள விவரங்கள் அதிகம். அதுவும் ஆடி மாத இதழ் மிகச் சிறப்பு.

1. ‘கவனச் சிதறல்’
2. மாளவிகாவின் தன்னம்பிக்கை
3. நாம் மாறினால் நம் வாழ்வு சிறக்கும் – தக்கன பிழைத்து வாழும் முறை
4. ‘மனமது செம்மையானால்’ இதில் பட்டினத்தாரின் ஆறு தத்துவங்களை அழகுற கூறியுள்ளார்.
5. ஊரும், பேரும்
6. திருமந்திரம், தமிழ் இலக்கியம் – ஒவ்வொரு தமிழனும் படிக்க வேண்டிய ஒன்று
7. ஆன்மீகத்தோடு இணைந்த கனக தண்ணீரில் வாழும் கார்மாங்குடி மிகவும் உயர்வு
8. எப்போதும் சிறப்புடன் திகழும் சிறுவர் பகுதி
9. நிறைய பொதுஅறிவினை நமக்களிக்கும் சங்கப்பலகை
10. ஸ்ரீ பக்த கோராகும்பார், கல்யாண வரம் அருளும் 27 கருட சேவை போன்ற ஆன்மீக தகவல்கள்
11. கார்குல கர்ணன் அவர்களின் சிறுவயது நிகழ்வு
12. வயோதிகம் ஒய்ந்து போவதற்கில்லை – படிக்க வேண்டிய ஒன்று.
13. உத்தரகோச மங்கை – மாணிக்கவாசகர் சிறப்பு
14. புரியாதவர்களும் புரிந்துகொள்ள செயற்கை நுண்ணறிவு AI – என அனைத்துக் கட்டுரைகளும் மிகவும் அருமையானதாக இருந்தன.

திருமதி. சிவனருள் சுப்பிரமணியன்
குரோம்பேட்டை

குறிப்பு:

ஆடி மாத கட்டுரைகளைப் பாராட்டி பல்வேறு நேயர்கள் கட்டுரை ஆசிரியருக்கும், ஒப்புரவு அலுவல கத்திற்கும் கடிதம் எழுதி உள்ளனர். ஒப்புரவில் கட்டுரை எழுத விருப்பமுள்ளவர்கள், அனைவருக்கும் உபயோகமுள்ள கட்டுரைகளை கார்காத்தார் ஒப்புர விற்கு எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். கட்டுரைகளை தகுந்தபடி மாதாமாதம் பிரசுரிப்போம்.

ஆசிரியர் குழு

நாற்குறிப்பு எழுதுவதின் அவசியம்

50 ஆண்டுகளுக்கு முன்பு 1976–ல், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் நிர்வாக (செயல்) அதிகாரியாகப் பணியாற்றிய எங்கள் உறவினரின் நாற்குறிப்பிலிருந்து.

எஸ். சீனிவாசன், ஐ.ஏ.எஸ்., எம்.பி.ஏ., 1976–ல் திருச்சி மாவட்ட ஆட்சியராக இருந்தபோது எனக்கு அறிமுகமானவர். திருச்சி நகருக்குள் நுழைய விவசாயிகள் மக்கள் பேரணி நடத்தினர். அப்போது, ஆட்சியர் காவல்துறை மற்றும் தனது கீழ் அதிகாரிகளுக்கு, அவர்களை திருச்சி நகரின் வெளி எல்லையில் தடுத்து நிறுத்துமாறு உத்தரவிட்டார். பச்சைத் தலைப்பாகை அணிந்திருந்த அனைத்து விவசாயிகளும் திருச்சிக்குள் நுழைய இடம் கொடுக்காமல் கைது செய்யப்பட்டனர். பின்னர், தமிழக அரசு உடனடியாக ஆட்சியரை வேறு பகுதிக்கு மாற்றியது. ஆட்சியர் ஐ.ஏ.எஸ். குழுவிடம் சென்று, எஸ். சீனிவாசன் இனி தமிழக அரசிலோ அல்லது இந்தியாவின் வேறு எந்த இடத்திலோ எந்தப் பதவியையும் வகிக்க மாட்டேன் என்று கூறி, தனது ஐ.ஏ.எஸ். பதவியைத் துறந்தார். குழு உறுப்பினர்கள் அவரது ராஜினாமாவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். அவர் அதை வன்மையாக எதிர்த்து, ''நான் ஹார்வர்ட் பல்கலைக்கழக எம்.பி.ஏ. பட்டம் பெற்றுள்ளேன். நான் அதனுடன் வாழ்வேன்'' என்று மேலும் கூறினார். பின்னர் சிறிது காலத்திற்குப் பிறகு, அவர் கோயங்கா எஸ்டேட்டின் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் அங்கு இருந்தபோது... நான் கல்கத்தாவிற்குச் சென்றிருந்தேன். சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் பயணித்து, அவரது உதவியாளர் என்னை ஒரு ஜீப்பில் வரவேற்றார். இருபுறமும் டென்னிஸ் மைதானம், கைப்பந்து மைதானம், கூடைப்பந்து மைதானம் மற்றும் பூப்பந்து மைதானம் இருந்தன. அவர் (சீனிவாசன்) அங்கே ஒரு மண்டபத்தில் இருந்தார். நாங்கள் சிறிது நேரம் செலவிட்டோம், பின்னர் அவர் என்னை மற்றொரு பகுதிக்கு அழைத்துச் சென்றார். அந்தப் பகுதி மிகவும் பரந்த தேயிலைத் தோட்டமாக இருந்தது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக ஒரு உணவகம் இருந்தது. அங்கே நாங்கள் பன் மற்றும் தேநீர் அருந்தினோம். அங்கே ஒருவர் பணியில் இருந்தார். எம். சீனிவாசன், அவரைத் தொடர்புகொண்டு அவரிடமிருந்து தகவல்களைப் பெறுமாறு என்னிடம் கூறினார். ஹிட்லர் ஜெர்மனியை ஆண்ட காலத்தில், அந்த நபர் ஒரு மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர் என்பதை நான் அறிந்துகொண்டேன். ஒலிம்பிக் கொடியை இறக்குவதற்காக ஹிட்லர் மேடைக்கு வந்தார். அப்போது ஒரு உதவியாளர் வந்து, ''இன்னும் ஒருவர் ஓட்டப்பந்தயத் தடத்தில் (ஓடிக்கொண்டிருக்கிறார்) இருக்கிறார். அதனால் இப்போது கொடிஇறக்கம் செய்ய முடியாது. மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர் தொடக்கக் கோட்டை (புள்ளியை) தொட்ட பிறகுதான் அதைச் செய்ய முடியும்'' என்றார். கடைசி மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர் திரு. முருகேசன் ஆவார். நான் மராத்தானில் தோற்றபோதிலும், 'நான் ஹிட்லரைக் காத்திருக்க வைத்தேன்' என்பதில் எனக்குப் பெருமிதம் உண்டு என்று அவர் என்னிடம் கூறினார். பின்னர், சிறிது காலத்திற்குப் பிறகு, 1960–களில் திரு. முருகேசன் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் விளையாட்டுப் பிரிவு ஆசிரியராகப் பணியமர்த்தப்பட்டார்.

மூலம்

G. சிவராமன், சிதம்பரம்

பி.கு: இக்காலத்தில் எத்தனை பேருக்கு நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளது ? அக்காலத்தில் எழுதிய நாட்குறிப்புகள் இது போன்று பல செய்திகளை நமக்கு எடுத்துரைக்கிறது. அந்நாட்கள் திரும்புமா ?

சிங்காரச் சென்னை வரலாறு

சென்னை மாநகரின் வயது 387 ஆகும். சென்னையைச் சுற்றியுள்ள பல இடங்களிலிருந்தும் கிடைத்திருக்கும் தொல்லியல் சான்றுகளும், கல்வெட்டுகளும், பிற ஆவணங்களும் இம்மாநகரின் காலம் சுமார் 2000 ஆண்டுகள் என தெரிவிக்கின்றன. கோரமண்டல கடற்பகுதியில் காலூன்ற நினைத்த பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி, விஜயநகர ஆட்சியிலிருந்த இந்த நிலப்பரப்பில் தங்களுடைய வணிக செயல்பாடுகளைத் தொடங்க எண்ணியது. அச்சமயத்தில் பழவேற்காடு முதல் சாந்தோம் வரையிலான நிலப்பரப்பு சென்னப்ப நாயக்கரின் புதல்வர்களான வெங்கடப்ப நாயக்கர், அய்யப்ப நாயக்கர் கட்டுப்பாட்டில் இருந்தது.

கிழக்கிந்திய கம்பெனியின் பிரதிநிதியாக இருந்த பிரான்சிஸ் டே மற்றும் அவருடைய மொழிபெயர்ப்பாளரான ஆண்ட்ரூ கோகன், வெங்கடப்ப நாயக்கருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு வங்கக்கடலோரம் ஒரு பொட்டல் நிலத்தை குத்தகைக்குஎடுக்கிறார். அங்கு வணிகதளம் அமைக்க முடிவு செய்து 1639ஆம் ஆண்டு இந்த உடன்படிக்கை ஏற்பட்டதாக நம்பப்படுகிறது. இந்தியாவின் தலைமை நில அளவையாளராகப் பணியாற்றிய காலின் மெக்கன்சி, தமிழக வரலாற்றைப் பற்றிய அரிய வரலாற்று ஆவணங்களைத் தொகுத்தவர். அவர் எழுதி வைத்த கையெழுத்து சுவடிகளில், மாநகர எல்லைப் படுதியை குறும்பர்கள் ஆட்சி புரிந்து வந்ததாகவும், அதன் 24 கோட்டங்களில் புலியூர் கோட்டமும் ஒன்றாக இருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார். இதன்கீழ் பூந்தமல்லி, மாங்காடு, அடையாறு, திருவான்மியூர், தாம்பரம், பெருங்களத்தூர் இருந்துள்ளன. செயின்ட் ஜார்ஜ் கோட்டையும், அதைச் சுற்றியிருந்த பகுதிகளும் புலியூர் கோட்டத்தின் ஒரு சிறு பகுதியே. வெங்கப்ப நாயக்க சகோதரர்கள் அவர்களது தந்தையின் பெயரிலேயே இந்த இடம் விளங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்ததால், சென்னப்பட்டணம் ஆனது.

மயிலாப்பூர் பல்லவ அரசின் முக்கியத் துறை முகமாக விளங்கியது தேவாரப் பாடல்களிலிருந்து தெரியவருகிறது. இயேசுவின் 12 தோழர்களில் ஒருவரான புனித தாமஸ் கி.பி. 52 முதல் கி.பி. 70 வரை இங்கு போதித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. 16ஆம் நூற்றாண்டில் இங்கு வந்த போர்த்துகீசியர் 1522ல் சாந்தோம் துறைமுகத்தையும் நிறுவி, சாந்தோம் சர்ச்சையும் கட்டினர். 1612ஆம் ஆண்டு டச்சு நாட்டவரிடம் இவ்விடம் கைமாறியது. 1639ஆம் ஆண்டு ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி வாங்கி, அந்நிலப்பரப்பில் வணிகத்திற்காகவும், குடியிருப்புக்காகவும் புனித ஜார்ஜ் கோட்டையை 1639, ஆகஸ்ட் 22ல் ஆரம்பித்து 1644ஆம் ஆண்டு ஏப்ரல் 23ல் அக்கோட்டை கட்டி முடிக்கப்பட்டது. அன்றைய தினம் புனித ஜார்ஜ் நாளாக இருந்ததால், இப்பெயர் பெற்றது. இன்றைய சென்னை நகரம் இக்கோட்டையைச் சுற்றியே உருவானது. தற்போதும் இக்கோட்டை வளாகத்தில்தான் தமிழ்நாடு அரசின் சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகம் இயங்கி வருகிறது.

சென்னை தினம் நகரத்தின் தொடக்கத்தை நினைவு கூர்கிறது. புனித ஜார்ஜ் கோட்டை நகரத்தின் ஆரம்ப வளர்ச்சிக்கு நேரடி சாட்சியாக நிற்கிறது. புனித ஜார்ஜ் கோட்டை பழைய சென்னை எவ்வாறு ஒரு சிறிய வணிக குடியேற்றத்திலிருந்து மிகப்பெரிய மாநகரமாக வளர்ந்தது என்பதை நினைவூட்டும் முக்கியச் சின்னமாக விளங்குகிறது. சென்னை தினமும், புனித ஜார்ஜ் கோட்டையும் சென்னையின் வரலாற்றில் பிரிக்கமுடியாத அத்தியாயங்கள். 1688ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் நாள் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட முதல் மாநகராட்சி சென்னை மாநகராட்சியாகும். அதே போன்று 1857ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட முதல் மூன்று பல்கலைக்கழகங்களில் சென்னைப் பல்கலைக்கழகமும் ஒன்று. பம்பாய் மற்றும் கல்கத்தா பல்கலைக்கழகங்கள் ஓரிரு மாதங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டன.

சென்னை இந்தியாவின் நான்காவது பெரிய நகரம். பலதரப்பட்ட மக்களும் ஒற்றுமையுடன் வாழும் இடம். தொழில், வர்த்தக மையம், கலைகளின் உறைவிடமாக இது விளங்குகிறது. மருத்துவத் துறையின் தலைநகரமாக சென்னை விளங்குகிறது. உலகின் இரண்டாவது நீண்ட கடற்கரையை (மெரினா) தன்னிடத்தே கொண்ட நகரமென பல சிறப்புகளைக் கொண்ட நகரம். நாடகம், சினிமா என்கிற ஊடகங்களின் வலிமையை மக்களிடையே உணர்த்தியது சென்னையே. இது பழமையும், புதுமையும் இணைந்திருக்கும் ஒரு நகரம். கடற்கரை, பழமையான கோயில்கள், சர்ச்சுகள், மசூதிகள், திருவல்லிக்கேணியின் mansions என புராதனம் ஒரு புறம்; விதவிதமான மால்கள், மெட்ரோ ரயில்கள், நான்கு வழி, ஆறு வழிச் சாலைகள், இரண்டு அடுக்கு பாலங்கள், வானளாவிய கட்டிடங்கள், விமான நிலையம் என புதுமை ஒரு புறம் என தனது வளர்ச்சியை விரிவுபடுத்திக் கொண்டே இருக்கிறது. பல முன்னணி மென்பொருள் நிறுவனங்களும்,

பெரிய மருத்துவமனைகளும் நிரம்பியுள்ள நகரமாக விளங்குகிறது. இது தமிழகத்தின் அரசியல், கலாச்சார மற்றும் பொருளாதாரத் தலைநகராக விளங்குகிறது.

சென்னை மக்களின் எளிய வாழ்க்கை முறையும், அன்பான உபசரிப்பும் தனித்துவமானது. சென்னையின் கலாச்சார பண்பாடு உலக கவனத்தை ஈர்த்து வருகிறது. சென்னையில் நடைபெறும் மார்கழி மாத இசைக் கச்சேரியும், நடன நிகழ்ச்சிகளும் உலகின் பல மூலைகளிலிருந்தும் மக்களை ஈர்க்கின்றன. சபாக்களில் கிடைக்கும் பாரம்பரிய தென்னிந்திய உணவு வகைகளும் மக்களிடையே பிரபலம் அடைத்துள்ளது என்றால் அது மிகையன்று. வணிகத்திற்கு முக்கியமாக பட்டுப்புடவைகளுக்கும், நகைகளுக்கும் தியாகராயநகர் உஸ்மான் ரோடும், ரங்கநாதன் சாலையும் புகழ் பெற்றவை.

ஆழ்வார்கள், நாயன்மார்களால் பாடப்பெற்ற கோவில்களைக் கொண்டது இந்நகரம். கோவில்களில் குறையாத கூட்டமும், தகவல் தொழில்நுட்பத் துறையில் குன்றாத முன்னேற்றமும் சென்னையின் தனிச்சிறப்புகளாகும். கபாலீஸ்வரர், மருந்தீஸ்வரர், திருவொற்றியூர், குறுங்காலீசுவரர் போன்ற சைவத் திருக்கோவில்களும், பார்த்தசாரதி கோயில், திருநீர்மலை, திருமழிசை போன்ற வைணவக் கோவில்களும் இந்நகரில் உள்ளன. காஞ்சி மகாப் பெரியவாளின் வழிகாட்டுதலில் பெசன்ட் நகரில் ரத்னகிரீஸ்வரர், அஷ்டலட்சுமி, அறுபடைவீடு கோவில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பாம்பன் சுவாமிகள், சர்க்கரை அம்மன் ஜீவசமாதிகளும் திருவான்மியூரில் அமைத்துள்ளன. பெசன்ட் நகரில் அன்னை வேளாங்கண்ணி ஆலயமும் மிகுந்த புகழ் பெற்று விளங்குகிறது.

சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரித் திங்களில் நடக்கும் புத்தகத் திருவிழா அறிவுத் தேடலுக்கு வித்தாக அமைந்து, லட்சக்கணக்கான புத்தகப் பிரியர்களை ஈர்த்து வருகிறது. சென்னையின் ஹாலிவுட்டாக திகழ்வது கோடம்பாக்கம் பகுதி. பல சினிமாக்களும், சீரியல்களும் இங்கு படமாக்கப்படுகின்றன. இப்பகுதி கோலிவுட் என்றழைக்கப்படுகிறது.

1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்த பிறகு மதராஸ் மாகாணமும், அதன் தலைநகராக மதராஸ் நகரும் ஆனது. மதராஸ் மாகாணம் 1967 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் மாண்புமிகு C.N. அண்ணதுரை அவர்களால் தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1996 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி ஆட்சியில் மெட்ராஸ், சென்னை என வழங்கப்படலாயிற்று. மதராஸ் என்ற பெயர் போர்த்துகீசியர்களால் வைக்கப் பட்டதாகும். 2014ஆம் ஆண்டு முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களால் ஆகஸ்ட் 22ஆம் நாள் சென்னை நகரம் உருவான தினம் கொண்டாடப்பட்டு, அன்றிலிருந்து இன்று வரை தொடர்ந்து வருகிறது. 2017ல் சென்னை யுனெஸ்கோவின் Creative Cities Network-ல் இணைக்கப்பட்டது.

வந்தோரை வாழ வைக்கும் சென்னைக்கு ஆகஸ்ட் 22 ஒரு சிறப்பான நாள். வாழ்த்துவோம்! வாழ்வோம்!

திருமதி. சுதா இளங்கோவன்
9487237354

❖ ✦ ❖

பாராட்டுகிறோம்

சென்னை MRC நகரில் 800க்கும் மேற்பட்ட சர்வதேச முதுகெலும்பு அறுவை சிகிச்சை நிபுணர் களின் 4 நாள் மாநாட்டினை சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் வி. காமகோடி அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தியா மற்றும் உலகளாவிய முதுகெலும்பு மருத்துவ சங்கத்தின் தலைவரும், மூத்த முதுகெலும்பு அறுவை சிகிச்சை நிபுணருமான மருத்துவர் கார்த்திக் கைலாஷ் முக்கிய பங்கேற்றுள்ளார். அவருக்கு கார்காத்தார் ஒப்புரவின் பாராட்டுக்கள்.

ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி சத்சங்கம், குரோம் பேட்டை, குமரன்குன்றம் முருகன் கோவிலில் (ஆடி மாத அம்மன் திருவிழாவையொட்டி) ‘அபிராமி அந்தாதி’, எனும் தலைப்பில் நமது சகோதரி ‘ஆன்மீகச்சுடர்’ டாக்டர் வே. கிருஷ்ணகுமாரி அவர்கள் ஆகஸ்ட் மாதம் 5ஆம் தேதி மாலை 6.30 மணி அளவில் ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றி, பலரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். அவர் மென்மேலும் புகழ்பெற கார்காத்தார் ஒப்புரவின் சார்பில் வாழ்த்துகிறோம்.

திரு. அருண்குமார் – வனிதா தேவியின் புதல்வி ஹரிணி பத்தாம் வகுப்பு CBSC பிரிவில் 98.8%ம், 12ஆம் வகுப்பில் மாடர்ன் வித்யா நிகேதன் CBSCல் 96% மதிப்பெண்கள் பெற்றதுடன், JEE நுழைவுத் தேர்வில் 99.156% வாங்கியதுடன் I.I.T. ரூர்க்கியில் B.Tech. Physics சேர்ந்துள்ளார். கார்காத்தார் ஒப்புரவின் சார்பில் எங்கள் வாழ்த்துக்கள்.

❖ ✦ ❖

முதியோர் பற்றிய ஒரு கண்ணோட்டம்!

இரா. திலகம், Tr, (Rtd.)
வையூர்
9789412635

'முதியோர் பராமரிப்பு' என்பது ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள ஒரு பெரிய பிரச்சனை. அதைத் திறம்படக் கையாள மூன்று தலைமுறையினருக்குமே ஒரு புரிதல் தேவைப்படுகிறது. முதியோர் இல்லம் என்ற வார்த்தையையே ஒரு கெட்ட வார்த்தை போல எண்ணத் தோன்றுகிறது. முதிர்ச்சி அடைந்தவர்களை வீட்டில் பராமரிப்பது கொஞ்சம் சிரமம்தான். காரணம் இன்றைய இயந்திரத்தனமான வாழ்க்கை சூழலுக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொள்ளாததுதான். பழம் பழுத்து விட்டது. ஒட்டில் ஒட்டாது. கலகலப்பாகி கழன்று விழ தயார் நிலையில் உள்ளது. ஆனால் முதுமை மட்டும் அடைந்து விட்டு, பழுக்காமல் வெம்பி விடுகிறவர்கள் தாமும் துன்பம் அடைந்து, தன்னை பராமரிப்பவரையும் சங்கடத்திற்கு ஆளாக்குகிறார்கள்.

மரணம் தவிர்க்க முடியாதது. என்றாவது ஒரு நாள் உலகம் நம்மை உதறிவிடப் போகிறது. ஆனால் நம்மில் எத்தனை பேர் வயதானதும் துறவினை நோக்கி நகர்கிறோம்? பள்ளிக்கூட பஸ் வந்ததும் திமிறிக் கொண்டு வீட்டிற்குள் ஓட நினைக்கும் சிறுவனைப் போல, மரணத்தின் அழைப்பு வரவர வாழ்க்கைக்குள் ஒளிந்துகொள்ள ஒரு சிலர் நினைக்கிறார்கள். வயது ஏறஏற நமக்குள் விரக்தி வருகிறது. அறுபது, எழுபது, எண்பது வயது வந்து காலம் நம் பக்குவத்திற்காகக் காத்திருக்கிறது.வயதுமுதிர்ச்சியினால்நம்செவிகளின் கேட்கும் திறன் குறைகிறது. தொலைக்காட்சியின் ஒலித்திறனைக் கூட்டுகிறோம். பேரப்பிள்ளைகளின் பரிட்சை, படிப்பு என்று மகனோ, மருமகளோ நியாயமாகச் சொன்னால் கூட, அதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத மனநிலையில் இருக்கிறோம். அழுகை, கூச்சல், பழிவாங்குதல், ஏமாற்றுதல் என்று தேவையில்லாத நிகழ்வுகளாக இருந்தாலும் அதனை பார்க்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

வயதானவர்களின் இந்த எதிர்பார்ப்பு ஒரு சாதாரண விஷயம்தான். இதற்கு காரணம் தனிமை. வயதானதும் பிள்ளைகள் நம்மை விட்டு விலகிவிடுவதால், அவர்களுக்கு இருக்கும் ஒரே பொழுதுபோக்கு தொலைக்காட்சி பெட்டிதான். காலத்தின் கட்டாயம் வேலை, மனைவி, மக்கள், படிப்பு என்ற சூழல் வரும் போது, பெரியோர்களை உடன் வைத்து பேணுவது என்பது இயலாத ஒன்றாகி விடுகிறது. அடுத்து பழமையான பண்பாடுகளில் வாழ்ந்தவர்களுக்கு இன்றைய தலைமுறையினரோடு ஒத்துப்போக முடியவில்லை.

அப்பாவுக்கு அடிக்கடி உடம்புக்கு முடியாமல் போகிறது என்று அவ்வப்போது விடுப்பு எடுத்தால் வங்கியோ, கம்பெனியோ ஒத்துக்கொள்ள மறுக்கலாம். இப்படியான நடைமுறைச் சிக்கல்களைப் புரிந்துகொள்ள மறுப்பது நம் பிள்ளைகளுக்கு நாம் செய்யும் அநீதி. முதுமை அடைந்த பின்னும் பேப்பர் படித்தபடியே காப்பிக்கு சர்க்கரை கம்மி, குழம்பில் காரம் கம்மியாக உள்ளது என்று குறை கூறுவதை தவிர்ப்பது நல்லது. ராமாயணம் படித்தால் மட்டும் போதாது. தசரதன் ராமனுக்கு பட்டம் கட்டிவிட்டு வனம் போகிறேன் என்று சொன்னதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மகாபாரதத்தில் திருதிராஷ்டிரனும், குந்தியும் வனம் போய்தான் தங்களின் எஞ்சிய காலத்தைக் கழித்தனர் என்பதையும் நாம் அறிவோம்.

சென்னையில் ஒரு அடுக்குமாடி வீட்டில் தனியாக வாழ்ந்து கொண்டிருந்தார் எழுபத்தைந்து வயது பெரியவர் ஒருவர். அவரின் ஒரே மகளுக்கு வெளிநாட்டில் பெரிய வேலை. கை நிறைய சம்பளம். குழந்தைகளைப் பேண தன் அம்மாவை வரவழைத்துக் கொண்டாள். சென்னையில் உள்ள சொத்துக்களைப் பேண அப்பா போகாமல் தங்கிவிட்டார். இந்நிலையில் தொடர்ந்து மூன்று நாட்களாக அவர் வீட்டு வாசலில் எடுக்கப்படாமல் கிடந்த செய்தித்தாளும், பால் பாக்கெட்டும் அக்கம் பக்கத்தினருக்கு தெரியவந்தது. காவல்துறை உதவியுடன் கதவை உடைத்துப் பார்த்தால்... பாத்ரூமில் பாதம் வழுக்கி விழுந்தவர் பரமபதம் ஏகி மூன்று நாட்களாகி விட்டன என்ற உண்மை கண்டறியப்பட்டது. ஏனிந்த சோகம்?

மகளை குறை சொல்ல முடியுமா? மனைவியைக் குறை சொல்ல முடியுமா? இதைத்தான் எழுதப்பட்ட விதி என்கிறோம். வீட்டுக்கு வீடு வாசற்படி என்பது போல வயதான அநேகம் பேருக்கு இதுதான் நிலைமை.

உன்னைச் சொல்லி குற்றமில்லை...
என்னைச் சொல்லி குற்றமில்லை...

காலம் செய்த கோலமடி,
கடவுள் செய்த குற்றமடி...
கடவுள் செய்த குற்றமடி.

சரி வயதாகி விட்டது. துணை யாருமில்லை. என்ன செய்யலாம்? ஒன்றும் பெரிய பிரச்சனை இல்லை. எந்த பிரச்சனைக்கும் உட்கார்ந்து அமைதியாக யோசித்தால் தீர்வு என்பது கண்டிப்பாக உண்டு. திருமணம் என்ற பந்தத்தில் மாட்டினோம். பிள்ளைகள் வந்தனர். அவர்களுக்கு செய்ய வேண்டியதை கடமையென நினைத்து நிறைவாக செய்து முடித்தோம். எல்லாம் முடிந்து தனிமையில் அமைதியாக நிம்மதியாக இருக்கிறோம். இதுதான் இறைவன் கொடுத்த வரம். நம் வாழ்வாதாரத்திற்கு போதுமான ஓய்வூதியம் (Pension) கிடைக்கப் பெறுகிறோம். காசு கொடுத்தால் சாப்பாடு வீடு தேடி வருகிறது. வெளி உலகை அறிய, மற்ற பிற தகவல்களை தெரிந்துகொள்ள செய்தித்தாள் வரவழைக்கலாம். TV பார்த்து நாடகம் போன்ற நிகழ்வுகளையும், அரசியல் பற்றிய தகவல்களையும் அறிவோம். பொழுது அழகாக போகிறது. இதை விடுத்து வேறென்ன வேண்டும். நிம்மதியாக மிச்சம் உள்ள காலத்தை ஓட்டலாம் அல்லவா!

நாம் உழைத்து சம்பாதித்த, நம் முன்னோர் கள் கொடுத்துச் சென்ற அசையும் சொத்து, அசையாசொத்துக்களை பத்திரமாக நம் பிடியில் வைத்திருப்போம். நம் காலத்திற்குப் பிறகு பிள்ளை களின் பயன்பாட்டிற்கு போகட்டும். இளமையில் உழைத்தோம், சம்பாதித்தோம். கடமைகளை முடித்தோம். வயதாகி விட்டது. இனி வரும் நாட்கள் உங்களுக்காக தியானம், இறைவழிபாடு, சீரான உடற்பயிற்சி, அளவான உணவு, முடிந்த அளவிற்கு ஏனழ எளிய மக்களுக்கு நம்மாலான உதவி என்ற அளவில் நாட்களை கடத்துவோம். எனது குடும்ப மருத்துவர் (Family Doctor) Dr. பாஸ்கரன், விக்ரமங்கலம் அவர்கள் ஓடி, ஓடி சம்பாதித்த காலம் முடிந்துவிட்டது. இதற்குமேல் இறைவா... என்னை படுக்கையில் விழவைத்து கஷ்டப்படுத்தாமல் நடமாட்டத்தில் இருக்கும் போதே நல்ல நிலையில் என் உயிர் பிரியவேண்டும் என வேண்டிக்கொள்ளுங்கள் என்பார். நூற்றுக்கு நூறு உண்மையான வார்த்தை. மூத்த குடிமக்களே! தனிமையில் இருந்தாலும், குடும்பத்தாரோடு இருந்தாலும் அமைதியாகவும், நிம்மதியாகவும் நம் முதுமை பருவத்தைக் கடந்து செல்வோம். நன்றி!

FOBO

அன்றாட வாழ்வில் நமது தேவைக்காக ஏதேனும் ஒரு பொருளை வாங்க நினைக்கையில், பல நிறுவனங்கள் தயாரிக்கும் ஒரேவிதமான பொருட்கள் நம் கண் முன்னே வருகிறது. தேவையானது ஒன்றாயினும் அதனை விட சிறந்ததாக மற்றவை தோன்றுகிறது. இதனால் எதை தேர்ந்தெடுப்பது என்பதில் குழப்பம் ஏற்படுகிறது. இக்குழப்பத்தினை Decision paralysis அல்லது Decidophobio என்று கூறுவர். முந்தைய காலகட்டத்தில் இத்தகைய சிக்கல் நமக்கு ஏற்பட்டதில்லை. ஆனால் இன்றைய போட்டி உலகில் ஒன்றைவிட சிறந்ததாக மற்றொன்று என பல பொருட்கள் சந்தையில் வருகின்றன. ஒரு நிறுவனமே தனது பொருளின் தரத்தை உயர்த்தி அல்லது கூடுதல் மதிப்பூட்டி புதிய பொருளாக வெளியிடுகிறது. இப்படி பல பொருட்களை நம் முன் கொண்டுவரும் போது இயல்பாகவே நம் மனதில் எதை வாங்குவது என்ற குழப்பமும், தவறான பொருளை வாங்கிவிடுவோமோ என்ற பயமும் உள்ளூர எழுகிறது. மேலும் ஒரு குறிப்பிட்ட பொருளை வாங்க முடிவு செய்த பின்பும், நம் மனம் அது சரியான முடிவா? இல்லையா? என யோசித்து நம்மைத் தூங்க விடாது. அதுமட்டுமன்றி Googleல் அப்பொருளைக் குறித்து பற்பல ஆராய்ச்சிகளைச் செய்து, நமது மன அழுத்தத்தை அதிகமாக்கி கொள்வோம்.

இதனை FOBO [FEAR OF BETTER OPTIONS] என்பார்கள். இந்த வாக்கியத்தை உருவாக்கியவர் Patrick McGinnis எனும் பெரும் தனவந்தர். இதிலிருந்து வெளிவருவது எப்படி? அதற்கான ஒரு சில வழிகள்:

* நமது தேவை என்ன என்பதில் தெளிவு வேண்டும்.
* நமது நிதி நிலைமையை மனதில் கொள்ள வேண்டும்.
* கூடுதல் பணம் கொடுத்தால் கிடைக்கும் பலன் உண்மையில் நமக்குப் பயன்படுமா என்பதில் உறுதியான சிந்தனையும் முடிவும் வேண்டும்.
* சலுகைகளுக்கு மயங்காமல் இருத்தல் வேண்டும்.

இந்த நான்கு அடிப்படை புள்ளிகளை (விஷயங்களை) மனதில் கொண்டால் FOBO மனநிலையிலிருந்து எளிதில் வெளிவரலாம்.

இரா. சோமசுந்தரம், சென்னை
(ஆரலூர்)

நிம்மதி - ஒரு பாலைவனச் சோலை!

ஞான அம்புலி, சிதம்பரம்

'எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி அங்கே எனக்கொரு இடம் வேண்டும்' – 1960–ல் இந்த பாடல் ஒலிக்காத கிராமங்களே இல்லையெனச் சொல்லலாம். நிம்மதியை விட வேறு ஒன்றையும் பெரிதென எதிர்பார்க்காதது அன்றைய மனித இனமாகும். பணம், பதவி, பட்டம் மட்டும் தேடி அலைவோர் பிறந்த பயனை அடையாதவராவார். மன அமைதியின் மற்றொரு பெயர் நிம்மதி ஆகும்.

இன்றைக்கு நிம்மதியை தரும் என கருதும் ஒரு செயல் மிக விரைவில் எதிர்மறையாய் மாறுவதை அடிக்கடி பார்க்கலாம். அசுர வேகத்தில் மாற்றங்கள் நிகழ்ந்து வரும்போது நினைத்த நிம்மதியை முழுமையாய் பெற முடியவில்லை. எளிய வடிவத்தில் சொல்லவேண்டுமானால் கடின உழைப்பு, சீரிய சிந்தனை, நெடு நாள் திட்டம், இவைகளினால் கிடைக்கும் அனுபவமே நிம்மதியாகும். மனித இனத்திற்கு மட்டுமே சொந்தமான பல பண்புகளில் நிம்மதியும் ஒன்றாகும். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற பொன்மொழியை யாவரும் அறிந்திருந்தாலும் இகழ்ச்சி வந்துவிடாது வெற்றி கிடைத்தாலும் பெற்றிட்ட நிம்மதி நிலைத்திருப்ப தில்லை. தனிமனித நிம்மதியை பெற்றிட உள் மனதுக்கு கட்டுப்படுங்கள்.

நிம்மதியில் பல வகைகள் இருப்பதாக சொல்லுவார்கள். 'எதிலும் நிம்மதி என்றும் நிம்மதி' பெற்றிருப்பவனே முழு மனிதனாகும். ஆயினும் பல வகை சங்கடங்கள், போராட்டங்கள், துயரங்கள் ஆகியவற்றை வென்ற பிறகு கிடைக்கும் நிம்மதியை காயகல்பமாக கூறுவர். பல நேரங்களில் நமது முயற்சி தோல்வி அடைந்தாலும் மன அமைதியை அடைந்தோமானால் மன நிம்மதி நிச்சயம். நாம் செய்யும் காரியம் வெற்றியை கொடுத்தாலும் அதனால் மற்றவர்களுக்கு துன்பம் வந்திடுமானால் எவருக்கும் நிரந்தர நிம்மதி கிடைத்திடாது. மகிழ்ச்சியான வாழ்க்கை, சலனமற்ற தூக்கம், நிலையான வெற்றி, நிரந்தரமான பாச பிணைப்பு இவைகள் எல்லாம் நிம்மதியால் நிலைத்திடும் பின்விளைவுகள் ஆகும். தனிமை நிரந்தரமான நிம்மதியை தராது. ஆனால் இந்த நிம்மதியை பெற்றிட வழிமுறைகளை வகுத்து கொடுக்கும். கூட்டு வாழ்க்கையில் கண்டிப்பாய் நிம்மதி பெற்றிடலாம். நிம்மதியும் மகிழ்ச்சியும் உடன்பிறப்பு இரு சகோதரர்கள் என்பார். நிம்மதி இல்லாத மகிழ்ச்சி துன்பத்தின் வழிகாட்டி எனலாம். அதே நேரத்தில் மகிழ்ச்சி மட்டும் உள்ள இடங்களில் எல்லாம் நிம்மதி இருக்குமென கூற இயலாது. நிம்மதியாய் வாழ்பவரோடு பழகுதல் கூட நமக்கு மகிழ்ச்சியை தந்திடும். செய்யும் செயலை முழு மனதோடு செய்வோமானால் வெற்றி கிடைக்கவில்லை என்றாலும் நிம்மதி கண்டிப்பாய் கிடைக்கும்.

நிம்மதி என்பது ஒரு பாலைவனச்சோலை! கானல்நீர் கண்காட்சி!! அதை அடைந்திடுதல் அவரவர் திறமையில்! ஒரு பெண்ணின் கண்ணீருக்கு தன் செயல் காரணமாகிவிடக்கூடாது என்று நினைக்கும் ஆணும், தன் கணவர் எடுக்கும் அனைத்து சரியான முடிவுகளையும் ஆதரிக்கும் பெண்ணும் இருக்கும் வீட்டில் தான் நிம்மதி நிலவும் என்பர். எத்துணை அழகான கணிப்பு!!

தனித்துவம் பெறும் நிம்மதி முற்றும் துறந்த முனிவர்கள், சன்னியாசிகளுக்கு தானாகவே கிடைத்திடும். மற்றவர்களில் இறைப்பணியில், சமூக நலப்பணியில் முழுமையாய் ஈடுபடுவோர்களுக்கு மட்டும் கிடைத்திடலாம். குடும்ப நிம்மதி, உற்றார் நிம்மதி, சமூக நிம்மதி, தொழில் நிம்மதி, என நிம்மதியில் பல வகைகள் உண்டு என சொல்வார்கள். தன்னம்பிக்கை, கடின உழைப்பு, புத்திசாலித்தனமான அணுகுமுறை, நற்சிந்தனை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இவை அனைத்தும் நிம்மதியின் முக்கிய காரணிகளாகும். நிம்மதியாய் வாழ்வோரிடம் பொறாமை கொள்ளாமல் வழிகாட்டுபவர்களாக கருதுவது நல்ல பலனை தர உதவும்.

நிம்மதி என்பது ஒரு நாள் நிகழ்வல்ல! அது தினமும் செய்யும் பல சிறு நன் முயற்சிகளின் தொடர்புகளின் மொத்த விளைவு ஆகும். நிம்மதியான வாழ்க்கைக்கு சுற்றுச் சூழல் மிகவும் அவசியம் ஆகும். சுற்றுச்சூழல் முன் அறிவிப்புமின்றி மாற்றத்திற்கு உட்பட்டதால் நாமும் எதற்கும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

நிம்மதி என்பது தனித்துவமானதால் ஒருவருக்கு நிம்மதி அளிக்கும் செயல் பெரும்பாலும் மற்றவருக்கு பொருந்தாது. ஒரே குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்கும் இந்த நியதி பொருந்தும். அதே போல் ஒருவருக்கு வாலிப வயதில் நல்ல செயல்பாட்டால் கிடைத்த நிம்மதி அவரே மூப்பு அடைந்த பிறகு அதே வடிவத்தில் கிடைத்திடாது. நிம்மதியை இழக்காமல் இருக்க குறுக்கிடும் மாற்றங்களை ஏற்க மனம் வேண்டும். இதனை முன் வினைப் பயன் என்போருமுண்டு!

நிம்மதியை குலைத்திட முயற்சிப்பவர்களை ஒதுக்கிவிடலாம். நற்செயல் பலனால் வந்திடும் நிம்மதியும் தொடர் கதையென நிலைத்துவிடும் என மெத்தனமாய் இருந்துவிடக்கூடாது. நிம்மதி பெற்றிட இன்றுவரை என்ன என்ன பண்புகளை கடைப்பிடித்தோமோ அவைகளையும் தொடர்ந்தால்தான் நிம்மதி நம்மோடு என்றும் தங்கும். கிடைத்திட்ட நிம்மதி இருவழி பாதையாய் விலகக்கூடாது. நிம்மதியை அடைந்திடும் வழிப்பாதை அனைவருக்கும் ஒன்றாய் இருக்காது. எனவே ஒவ்வொருவரும் தங்கள் சொந்த வாழ்க்கைக்கு ஏற்ப நிம்மதி கிடைக்கும் வழிமுறையினை திட்டமிட்டு பின்பற்ற வேண்டும்.

வாழ்க்கையில் வேறு பல செயல்களில் நாம் செல்லும் பாதையில் குறுக்கீடுகள் வந்தால் மாற்றுப் பாதையில் பயணிப்பது போன்று நிம்மதி பெற்றிட செல்லும் வழியில் இடையூறுகள் வரும் என உறுதியாய் நினைத்தோமானால் வேறு பாதையில் பயணத்தை தொடர்வதுதான் புத்திசாலித்தனம். நிம்மதியினைக் கெடுக்கும் செயல்களில் முதல் எதிரி சோம்பலாகும்.

சில தோல்விகள் என்பது கண்டனத்துக்குரிய தண்டனை அல்ல! பெரும்பாலும் நிம்மதியான வாழ்க்கையை பெறுவதற்கு அதுவே முதல் படியாக வழிகாட்டியாக கூட இருக்கலாம். வாழ்க்கையில் சில நேரங்களில் மன அழுத்தம் இல்லாமல் இருப்பவராகவும் சஞ்சலம் இன்றியும் இருப்பது மிக அவசியம். இத்தகைய நேரங்களில் பெற்றிடும் மன அமைதியால் தொடர் நிம்மதி என்ற நிலையை பெற்றிடலாம். யார் நம்மை புறம் தள்ளினாலும் அவர்களை ஒதுக்கிவிடு. நமது நிம்மதியை தொலைத்திடக்கூடாது.

நம்மை பற்றி மற்றவர்கள் உருவாக்கும் கற்பனை கதைகளுக்கும் தவறான புரிதலுக்கும் நாம் பொறுப்பேற்று நிம்மதியினை இழத்தல் அறிவீனம். நிம்மதியைக் கெடுக்கும் மனிதர்களை (உறவுகாரர்களாக இருந்தாலும்) வெறுக்காமல், பழி வாங்காமல் அமைதியாய் விலகினால் வாழ்க்கையில் ஜெயிக்கலாம். அனைத்து உறவினர்களிலும் நட்பு கொண்டவர்களிலும் நமக்கு தேவையான நிம்மதியை தருபவர்களை (குறைவான எண்ணிக்கையில்) சரியாக தேர்வு செய்தல் நல்ல பலனைத் தரும். ஊர் பேசும் ஆயிரம் அபத்தங்களை கேட்டு அதிர்ச்சி அடையாமல் நீங்கள் உங்கள் பாதையில் நம்பிக்கையோடு தொடருங்கள். நிம்மதியும் உங்களோடு உடன் வரும்.

நிம்மதி என்பது மனம் சார்ந்தது. அதனை பணம் சார்ந்ததாக மாற்ற முயல்பவர்களை புறக்கணித்தல் நல்ல பலனை தரும். நிம்மதியாய் வாழ்ந்திட நமது முன்னோர்கள் கடைப்பிடித்த மற்றும் கற்றுக்கொடுத்த வழியானது அடிக்கடி, புனிதயாத்திரை மேற்கொள்வ தாகும். குறிப்பிட்ட கால இடைவெளியில் உணவு கட்டுப்பாட்டோடு உடலை வருத்துவதும் அனைவருக்கும் நிரந்திர நிம்மதியை பெற்றிட சிறந்த வழிமுறையாகும். தற்கொலை அதிகமானதற்கான காரணங்களில் ஒன்று நிம்மதியின்மை என்று அரசின் குறிப்பு ஒன்றில் வந்துள்ளது. நிம்மதி இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை பெருகுவதனால் தனி மனித நிம்மதியின்மை இன்று சமூக பிரச்சனையாக மாறி உள்ளது. நிலையான நிரந்தரமான நிம்மதி நிலைத்திட இறை அருளோடு, நற்செயலோடு, வெற்றி வேட்கையோடு, மன உறுதியோடு முன்னேற்றம் காணுதல் கடைசி வரை நிலைத்திடும்.

நிம்மதியே வாழ்வின் உயிர் நாடி !
இதனை ஓடி ஆடி தேடிடுவோம் !!

✤ ✦ ✤

வான் மழையே வா!

வானம் பொழியுது
பூமி நனையுது
புற்கள் முளைக்கிறதே
பூக்கள் சிரித்து
பட்டாம்பூச்சிகளை அழைக்குதே
பனித்துளிகளாய் இலையில்
வர்ணஜாலம் காட்டுதே
பற்பல வண்டினங்களையும்
தன்னிடம் ஈர்க்கிறதே – பின்
தன்னிலுள்ள தேனமுதை கொடுக்கிறதே
மழையே நீ வா வா வா
அமுதம் அள்ளி தா தா தா

மழை பெய்யும் போதிலே
வான வில்லும் தோன்றுமே
வான வில்லின் வண்ணங்கண்டு
மனசு கொள்ளைப் போகுமே
கார்மேகம் பொழியும் போதிலே
கப்பல் விடத் தோணுமே
துளித்துளியாய் விரியும் துறலில்
துள்ளலாட்டம் போடத் தோணுமே
மழையே நீ வா வா வா
அமுதம் அள்ளி தா தா தா

சி. பாலசுப்ரமணியன்
திருமருகல்

✤ ✦ ✤

தமிழ் இலக்கியம் - குறுந்தொகை

திருமதி. செல்வி மணிவாசகன்
மும்பை

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களில் அதிகம் பேசப்படும் அகத்திணை இலக்கியம் குறுந்தொகையாகும். இந்நூல் அகப்பொருள் பற்றிய 400 ஆசிரியப்பாக்களையும், கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றினையும் உடையது. நாலடிச் சிற்றெல்லையும், எட்டடிப் பேரெல்லையும் கொண்டு தொகுக்கப்பட்டு உள்ளது. குறைந்த அடிகளையுடைய பாடல்களால் தொகுக்கப்பட்டதால் குறுந்தொகை எனப்பட்டது.

காதல் பற்றிய கற்பனையை அகம் எனவும் வீரம், கொடை, புகழ் முதலிய வாழ்க்கைத் துறைகளைப் புறம் என்றும் பகுத்த முறை செம்மொழியாம் நம் தமிழுக்கே உரிய சிறப்பாகும். மனித வாழ்க்கையில் காதல் இன்றியமையாதது. எனவே தான் உலக இலக்கியங்கள் காதல் குறித்தவைகளாகவே அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. அந்த வகையில் சங்க இலக்கியங் களில் பெரும்பான்மையானவை காதலர் தம் உளவியற் கூறுகளை நன்கு உணர்த்துவதாக பாடியுள்ளனர்.

குறுந்தொகையின் பொதுவான சிறப்புகள்:

எட்டுத்தொகை நூல்களுள் முதன்முதலில் தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகையாகும். இதனைத் தொகுத்தவர் பூரிக்கோ என்ற புலவராவார். வரலாற்றுப் புலவர்கள் எனக் கூறப்படுபவர்கள் பரணர், மாமூலனார், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் உள்ளிட்ட இலக்கண, இலக்கியங்களின் உரை ஆசிரியர்களால் மிகுதியாக மேற்கோள் காட்டப்பட்ட நூல் குறுந்தொகையே!

தலைவனும், தலைவியும் அன்பு கொண்டு இன்பம் நுகர்ந்து வாழும் வாழ்க்கையின் பலதிறப்பட்ட நிகழ்ச்சிகளை காமம், கேண்மை, தொடர்பு, நட்பு, நயம் எனும் பெயர்களால் சூழலுக்கேற்ப எடுத்தாளப்பட்டுள்ளது. அன்பின் தன்மையை உணர்த்தும் வகையில், இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின், பிரிவாரெனக் கருதி அஞ்சிய தலைமகள் குறிப்பறிந்து, தலைமகன் கூறியதாக வரும் அருமையான பாடல் – (குறிஞ்சித் திணை)

யாரும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே (40)

இப்பாடலை எழுதிய புலவர் பெயர் புலப்படாமையால் இதை எழுதியவர் செம்புலப் பெயல் நீரார் என்றே வழங்கப்படுகிறார்.

எவ்வகை இடையூறு நேர்ந்தாலும், அன்பு அழிந்துபடாது எனும் துணிபு, காதலர் மாட்டே இருத்தலால், அவர்கள் உலகியலோடு பொருந்தி வாழ்கின்றனர். அடிக்கடி கண்டு அளவளாவிடினும், மனமொன்றிய அன்பு தேயாது என்பதனை,

காம மொழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென வருவி
விடரகத் தியம்பு நாடவெம்
தொடர்புந் தேயுமோ நின் வயினானே.

என்று புலவர் கபிலர் உணர்த்துகிறார். குறுந்தொகை பாடல்கள் திணைவாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அவை குறிஞ்சி – 147, முல்லை – 45, மருதம் – 48, நெய்தல் – 70, பாலை – 90 பாடல்களாகும். மேலும் காதல் பெருமையுடன், இல்லத்தரசியின் பெருமை, விருந்தோம்பல், பொருள் தேடுதல், கல்வி, ஈகை போன்ற நெறிகளையும் வாழ்வியலோடு வகுத்து வாழ்ந்த பண்பாட்டையும் அறிய முடிகிறது.

பாடல்களால் அறிய வரும் செய்திகள்: ஆலமரத்தடியில் ஊர் சபை கூடும் மரபு இருந்தமை (15) கொல்லி மலையின் ஒரு பகுதியில் செதுக்கப்பட்ட பாவை கொல்லிப்பாவை எனக் கூறப்பட்டது; ஊரின் பலர் கூடி கடவுளை வணங்கவும் (கூட்டுப் பிரார்த்தனை), ஊர் செய்திகளைப் பேசவும் மன்றம் இருந்தமை,

ஊரில் பல தெருக்கள் அந்தணர் தெரு, ஆசில் தெரு போன்றவை இருந்தமை,

ஊரார் உண்ணுவதற்கும், நீராடுவதற்கும் பொய்கையும், இருந்தமை (அண்மையிலும்), காட்டாறும், கேணிகளும் தொலைவில் இருந்தன என்றும் பாடல்கள் குறிக்கின்றன. தெய்வ வழிபாட்டில் பலவகை இசைக் கருவிகள் – பறை, பணிலம், பதலை, முழவு, தட்டைப் பறை, முரசு போன்றவை ஒலிக்கப்பட்டன. பாணர்கள் பலவகை யாழ்களைக் கொண்டும் கலையை வளர்த்தனர்.

பொதுவாக இந்நூல் கூறுவது என்னவெனில், தலைவன், தலைவி ஆகியோரின் இணையற்ற அன்பும், அவர்கள் ஒருவர்க்கொருவர் மனம் கோணாதவாறு ஒழுகும் இயல்பும், அனைவருக்கும் நன்மை பயக்கும் தன்மையும் புகழை உண்டாக்கின என்ற உண்மையை உணர்த்தும் இலக்கியமாகத் திகழ்வது குறுந்தொகையே.

தொடரும்

“அன்னம் பாலிப்பும் அரனருளும்”

கோலாகலன்

“ஆசையைத் துறப்பது எளிது. பசியைத் துறப்பது எளிதல்ல. பசி கடுமையாகும் பொழுது அதன் வலி கொடுமையாக இருக்கும். இக்கொடுமையால் மாந்தனுக்குள்ள பத்து நற்குணங்களும் பறந்து போய்விடும். இதனால்தான் பசி வரின் பத்தும் பறந்து போகும் என்னும் பழமொழி உருவானது. ஔவையார் எழுதியுள்ள நல்வழி நூலில் உள்ள இருபத்தி ஆறாம் பாடல் வருமாறு:

“மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை – தேனின்
கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்”

பசிக்கு உணவு கிடைக்காதவன் தன்னிடம் உள்ள சிறப்புகளை இழந்துவிட நேரிடும். தன்மானம், குலப்பெருமை, கற்ற கல்வியின் மதிப்பு, வள்ளல் தன்மை, அறிவுடைமை, தானம், தவப்பலன், முயற்சி, தாளாண்மை, காமம் ஆகிய பத்து குணங்களையும் இழந்துவிடுவான் என்பதே மேலே சொல்லப்பட்டுள்ள பாடலின் பொருளாகும்.

புண்ணியங்களுள் சிறந்த புண்ணியம் பசித்த ஒருவர்க்குச் சோறிடல் ஒன்றே! உணவளிப்பதால் ஒருவர் பசி மட்டும் போக்கவில்லை; பசியால் அவர் செய்யவுள்ள பத்து பொல்லாப் பாவங்கள் அல்லது பத்து இழிவுகளினின்றும் அவரைக் காத்தருளும் புண்ணியமும் கிட்டும். ஒன்று பத்தாவது இதுதான்.

மேலும் போதும் போதும் என்று நிறைவைச் சொல்லும் பெரும்புத்தி உண்பவரால் மட்டுமே உளமாறச் சொல்ல முடியும்.

05.10.1823 அன்று மருதூரில் (சிதம்பரத்துக்கு அருகில் உள்ள ஊர்), இராமையாப்பிள்ளை – சின்னம்மைக்கு பிறந்த ஐந்தாவது குழந்தைதான் வள்ளலார் எனப் பின்னாளில் அழைக்கப்பட்டு அனைவராலும் நேசிக்கப்பட்ட சிதம்பரம் இராமலிங்க அடிகளார் ஆவார். பள்ளிக்குச் செல்லாமலேயே முருகன் அருளால் ஞானம் பெற்று பாடல்களை இயற்றும் பாவலர் ஆனார்.

இவர் வாழ்ந்த காலத்தில் எங்கும் வறட்சி, பஞ்சம், பசி, பட்டினி. இதனைப் போக்கிட **1867**ல் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையைத் தொடங்கி பசித்தோர்க்கு உணவளிக்கும் அன்னதானத் தொண்டினைத் தொடங்கினார். இன்றுவரை அவர் மூட்டிய அடுப்பு அணையவில்லை.

வேட்டவலம் சமீன்தார் வீட்டில் இவர் அடி எடுத்து வைத்ததும் அங்கு பேயாலும் நோயாலும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த இருவர் நலம் பெற்றது வரலாறு. தண்ணீரில் விளக்கெரித்த அற்புதம் செய்தவர் வள்ளலார். இவர் விருப்பப்படி வேட்டவலம் அம்மன் கோயிலில் உயிர்ப்பலி நிறுத்தப்பட்டது. பிரமதண்டிகா யோகம் செய்து தம் தேகத்தை அக்னிதேகமாக்கிக்கொண்டார். இறைவனை அருட்பெருஞ்சோதி ஆண்டவராகப் பார்த்து ஒளி வழிபாடு செய்தவர் வள்ளலார். மரணமிலாப் பெருவாழ்விற்கு வழிகாட்டியவர். சீவகாருண்ய ஒழுக்கத்தைப் போதித்தார். அதுவே முத்திப் பேரின்பம் தரும் என்றார்.

வள்ளலாரின் அணுக்கத் தொண்டர் சண்முகம் பிள்ளை. வெளியே புறப்பட்டுச் சென்ற வள்ளலார் வெகு நேரமாகியும் திரும்பவில்லை. அவரைத் தேடிச் சென்ற சண்முகம் பிள்ளை வள்ளலாரின் அங்கங்கள் வெவ்வேறாகிக் கிடப்பதைக் கண்டு அஞ்சி மயங்கி விழுந்துவிட்டார். உடனே வள்ளலாரின் அங்கங்கள் ஒன்றாகி, சண்முகம் பிள்ளையை எழுப்பி இனிமேல் இப்படி என்னைத் தேடி வரவேண்டாம் என்று கூறிவிட்டு அவருடன் தருமச் சாலைக்குத் திரும்பினார். இதன் மூலம் வள்ளலார் ஒரு சித்தர் என்பதும், சமயப்புரட்சித் துறவி என்பதும் விளங்கும். **6000** பாடல்களுக்கு மேலாக **6** திருமுறைகளை எழுதியருளியுள்ளார். உரைநடைகளையும் எழுதியுள்ளார். **550**க்கும் மேற்பட்ட மூலிகைகளைப் பற்றியும் அவற்றின் மருத்துவ குணங்கள் பற்றியும் எழுதியுள்ளார். மண்ணைப் பொன்னாக்கும் ரசவாத வித்தை தெரிந்தவர். மழையை வருவித்தவர். ஒளித்தேகம் பெற்றவர். இப்படிப் பல அற்புதங்களைச் செய்த அருளாளர்தான் வள்ளலார். திடீரெனத் தோன்றுவார், மறைவார். இலைகளை உருவி கூலி கொடுப்பார் அது காசாக மாறும். சித்தரான இவர் சித்தவைத்தியரும் கூட!” என்றெல்லாம் வள்ளலாரைப் பற்றி விரிவான உரையாற்றி முடித்தார் சிவகாமி சித்தர். அப்பொழுது ஒருவர் “சுவாமி! கொழுப்பு உடலில் அதிகமாகச் சேர்ந்து தொல்லைக்காளாகியுள்ளேன்...” அவர் முடிப்பதற்குள் சிவகாமி சித்தர் பேசலுற்றார். “கென்யா நாட்டில் உள்ள மாசாய் இன மக்கள் கொழுப்பு உணவே மிகுதியும் உண்பர். ஆனாலும் நலத்துடன் வாழ்கின்றனர். அவர்கள் அனைத்து நோய்களுக்குமாய் கையாளும் மருந்து நமது கருவேல மரத்தின் பட்டைக் குடி நீரே! அதனைப் பயன்படுத்திப் பாருங்கள் என்றார். சிவகாமி சித்தர் “ஆலும் வேலும் பல்லுக்குறுதி” என்ற பழமொழியை நினைவுபடுத்தினார்.

வியந்துபோன தாவரவியல் ஆய்வு மாணவர்கள் கூட, சுவாமிகளை வணங்கி ஆசி பெற்றுச் சென்றனர்.

பாடு பூவே! கூத்தாடு பூவே!
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி!
ஆலும் வேலும் பல்லுக்குறுதி!
அன்பும் அறனும் வாழ்விற்குறுதி
அன்னதானம் முக்திக்குறுதி என்ற
பாடு பூவே! கூத்தாடு பூவே!

என்று பாடிக்கொண்டே சித்தர் புறப்பட்டார்.

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் **நட்சத்திரம்**	**பிறந்த தேதி** **உயரம்**	**படிப்பு**	**வேலை**	**முகவரி**
B 1/9 செல்வி **K. சந்தியாதேவி** ரேவதி நல்லோடம் பூர்வீகம் : ஸ்ரீமுஷ்ணம் விருப்பம் : அரசு, வங்கி, IT துறையில் உள்ள வரன் Tea Totaller	22.5.1998 166 cm	B.Pharm Preparing Govt. Exam		திரு. R. கண்ணன் எலக்ட்ரிஷியன் எண். 4, சப்தரிஷி தெரு ஸ்ரீமுஷ்ணம் – 608 703 Cell : 9976141398, 8807110754
B 2/9 செல்வி **P. தேவதர்ஷினி** விசாகம் 3ம் பாதம் செஞ்சலுட பூர்வீகம் : திருவிடைமருதூர்	19.7.2002 175 cm	B.E. (ECE)	ZOHO Company, Chennai	திரு. R. பொன்னரசன், 90/A, தெற்கு வீதி, திருவிடைமருதூர், தஞ்சாவூர் மாவட்டம் – 612 104. Cell : 88380 01039, 94428 61136 (W)
B 3/9 செல்வி **K. சரண்யா** உத்திரட்டாதி தொழுவுட	25.5.2003 161cm	B.E. (EEE)	Control Soft Engineering Pvt. Ltd., Chennai Rs. 35,000/PM	திரு. G. குமரேசன், 14B/3, North Street, Seppakkam, Veppur Taluk, Cuddalore - 606 302. Cell : 63824 73531, 94448 41014, 91591 97980
B 4/9 செல்வி **கா. ஸ்ரீபிரியா** பூரட்டாதி வில்வராய பூர்வீகம் : நெய்வாசல் (காட்டுமன்னார்கோவில்) விருப்பம் : நல்ல குணமுள்ள நல்ல பணியில் உள்ள வரன்	27.03.98 166 cm	B.Sc. (Mathematics)		திருமதி. M. நிர்மலா கார்த்திகேயன், 6/70, மேலத் தெரு, திருக்கடையூர். Cell: 94429 02828, 80985 20359
B 5/9 செல்வி **S. துர்காதேவி** சித்திரை 4ஆம் பாதம் பூவனுட பூர்வீகம் : பூவிழுந்தநல்லூர் விருப்பம் : லக்னத்தில் 2ஆம் வீட்டில் ராகு/கேது உள்ள வரன்	13.08.2002 162 cm	B.E. (C.S.E)	Software Developer Cognizant, Chennai. Rs. 4 Lakhs / PA	திரு. N. சாமிநாதன் 13/34, ஐயப்பன் கோவில் தெரு விரிவு வேலப்பாடி, வேலூர் – 632 001. Cell: 9629953478, 9894755943

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/9 செல்வன் **S. நவீன்குமார்** அனுஷம் செம்புதரிய பூர்வீகம் : குமாரகுடி (சேத்தியாதோப்பு) விருப்பம் : Degree படித்த அழகான பெண்	4.9.2000 175 cm	B.E. (EEE)	Procurement CREW (P) Ltd. Rs. 40,000/PM	திரு. G. சங்கரன் 398, காளியம்மன் கோவில் 3வது கிராஸ் ஒந்தாபிள்ளைகாடு, கிச்சிபாளையம், சன்னியாசிகுண்டு Post சேலம் – 15. Cell: 9894370987, 9566823510
G 2/9 செல்வன் **S. தனவிக்ரம்** ரேவதி கனகராய பூர்வீகம் : பிள்ளையார்தாங்கல்	2.5.2000 175 cm	B.E. (EC) MS	Sr. Software Development Engineer AMD AUSTIN USA	திரு. S. சேகர் Plot No. 8, ARB நகர், சிதம்பரம் Cell : 9442477393, 9442762462
G 3/9 செல்வன் **M. வினோத்குமார்** திருவோணம் 1ம் பாதம் முனதரிய பூர்வீகம் : சிறுகாட்டூர், காட்டுமன்னார்கோவில் விருப்பம் : பணியில் உள்ள வரன்	7.11.1997 175 cm	B.E. (CSE)	IT Analyst, TCS Chennai Rs. 6.3 Lakhs / PA	திரு. M. மணிகண்டன் 98, விநாயகர் கோவில் தெரு, சிறுகாட்டூர், காட்டுமன்னார்கோவில் Tk, கடலூர் Dt – 608 304 Cell: 9976053504, 9362181366
G 4/9 செல்வன் **G.பிரம்மநாயகம்** பூராடம் சேவுட பூர்வீகம் : சீவலப்பேரி விருப்பம் : Degree முடித்து வேலை பார்க்கும் பெண் அல்லது வேலை பார்க்க விருப்பம் உள்ள பெண்	4.5.1991 180 cm	B.Tech & BFS	Construction Safety Supervisor (Athanic Group of Companies) Rs. 2.5 Lakhs / PA	திரு. கணேசன் 952, கோட்டைத் தெரு, சீவலப்பேரி – 627 351. Cell: 6380529006
G 5/9 செல்வன் **M. ஜீவானந்தன்** ரேவதி கொத்தனுட பூர்வீகம் : கொத்தட்டை (பெண்ணாடம்)	23.12.1993 5'5"	B.E. Mech	SPARK LINE EQUIPMENT Pvt. Ltd.	திரு. V. முத்துமாணிக்கம் (Late) மு. கோமதி 1, 52, நடுத்தெரு, கொத்தட்டை அஞ்சல், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம். Cell: 8760328544, 9688951044
G 6/9 செல்வன் **S.Manikandan** Anusham Sembudhdarya பூர்வீகம் : Thuraipadi, Chidambaram Tk	09.2.1999 175 cm	B.E. (EEE)	Industrial Safety Nebosh PGDC Power Plant Engineering IL&FS Power Plant Parangipettai Cuddalore Dt.	திரு. R. Sabanayagam, NLC 2-B, Hostel Type / Block - 12 Neyveli - 607 803 Cell : 9486658630, 9486592146

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 7/9 செல்வன் **ர. ராஜா மணிகண்டன்** திருவாதிரை கொழுமுடையான் பூர்வீகம் : காட்டுமன்னார்கோயில் விருப்பம் : படித்த அழகான, வேலைக்கு செல்லும், சுத்த சைவ பெண்	17.06.96 165 cm	B.E., (Mechanical Engineering)	Manager - Private Company, Chennai Rs. 7.5 Lakhs/PA	Mrs. Revathi Ravichandran, F2, Sri Andal's Lilly Apts., 111, Priyadharshini Nagar, TNHB Colony Road, Sithalapakkam, Chennai - 600 126. Cell : 94456 38756
G 8/9 செல்வன் **R. குகேஷ்** புனர்பூசம் பல்லவராய பூர்வீகம் : கீழையூர், மயிலாடுதுறை	19.08.98 183 cm	B.E (CSE)	Surboard Payments Chennai Rs. 31 Lakhs/PA	திரு. R.A. Kannahi, 175-1, Second Street, Valampuri Nagar, Mayiladuthurai Cell : 96551 72069, 75984 54775
G 9/9 செல்வன் **K. LOKESH KAUSHIK** Barani Muniyathirai பூர்வீகம் : Thirunelveli	8.10.1998 175 cm	B.E. (ECE)	Software Engineer (Dev Sec Ops -P2) Trimble, Chennai Rs. 14 Lakhs / PA	திரு. D. Kannan C404 - Door No. 6, 46th Street, 9th Avenue, Ashok Nagar, Chennai - 83. Cell : 94454 20325
G 10/9 செல்வன் **E. சிவராம்** பூசம் திவித்திரிய பூர்வீகம் : அடிப்புதுச்சேரி (திருவாரூர் Dt)	24.11.1994 179 cm	B.E. (Civil)	Deputy Manager Interior Brigade Enterprises Ltd. Rs. 8,00,000/PA	T. இளங்கோ 12, பாரதியார் 2வது தெரு (தெற்கு) B-Flat, அஷ்டலட்சுமி அபார்ட்மென்ட் பழவந்தாங்கல், சென்னை – 114 Cell: 9952335735, 9790770494
G 11/9 செல்வன் **C. வினோத்** சுவாதி சாத்துக்குட பூர்வீகம் : மயிலாடுதுறை	13.2.1993 172 cm	B.E. (EEE)	டிராவல்ஸ் Rs. 40,000/PM	திரு. N. செல்லதுரை 258A/3, West 7th Cross Sivapriya Nagar, Senthangudy Vellalagram - 609118 Cell: 9976096968 (WhatsApp)
G 12/9 செல்வன் **J. முரளிதரன்** பரணி மழுவதரிய பூர்வீகம் : சிதம்பரம் விருப்பம் : படித்த பெண் அல்லது படித்து சென்னையில் வேலை பார்க்கும் பெண்	26.6.1992 173.5 cm	B.E. (ECE)	Cloud Specialist in Spacetech, Chennai Rs. 50,000 / PM	திரு. R. ஜவகர், 102, முதல் மாடி, 1A, பெரியாழ்வார் தெரு, சானிடோரியம், கிழக்கு தாம்பரம், சென்னை – 600 059. Cell : 94429 36710, 88257 11845
G 13/9 செல்வன் **ஸ்ரீ அஸ்வத்** உத்திரட்டாதி முதனுட பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : ராகு, கேது உள்ளது / தகுதியான வரன் வேலை பார்க்கும் பெண்	11.11.1997 178 cm	B.Tech. (EEE)	Lead Test Engineer QBurst Technologies Chennai Rs. 12,00,000/PA	திரு. கோ. குஞ்சிதபாதம் 20/2, மேற்கு ரத வீதி, பெண்ணாடம் – 606 105. Cell : 88705 55569 (WhatsApp) 98423 57920

எங்கள் ஊர்
ஜெயங்கொண்ட சோழபுரம்

சோழப்பேரரசன் மாமன்னன் ராஜேந்திரசோழன் கலிங்கம் வரை படையெடுத்துச் சென்று போரில் ஜெயம் அடைந்ததன் நினைவாக உருவாகிய நகரம் தான் எங்கள் ஊர் ஜெயங்கொண்டசோழபுரம் ஆகும். 100–க்கு மேற்பட்ட கார்குல குடும்பங்கள் ஒற்றுமையோடும், ஒப்புரவோடும் சிறப்பாக வாழ்ந்து வருகிறோம்.

காா்காத்தார் தோன்றிய கதை: முன்பு ஒரு காலத்தில் பாண்டிய மன்னன் எம் பகுதி மீது படையெடுத்து வென்று எங்கள் பகுதியை கைப்பற்றினான். பின்பு மதுரையில் வாழ்ந்த கார்காத்தார் சமுதாயத்தை ஜெயங்கொண்டம் நகரத்தில் குடியமர்த்தி ராஜ்ஜிய நிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைத்தார். உடையார்பாளையம் தாலுக்கா 64 வருவாய் கிராமங்களிலும் நம் இன மக்களை கர்ணம் மணியக்காரர் ஆக நியமித்தார். இவர்கள் மிகவும் நேர்மையுடனும், விசுவாசத்துடனும் நிலவரி, மற்ற வரி வருவாய்களை அரசு கஜானாவில் செலுத்தினார்கள். பாண்டிய மன்னன் இவர்கள் நேர்மை, விசுவாசத்தில் உளம் மகிழ்ந்து ஜெயங்கொண்டம் சுற்றி 3 கி.மீ சுற்றளவுள்ள நிலங்களை நமது கார்காத்தார் மக்களுக்கு தானமாக கொடுத்தார்.

அண்மை காலம் வரை இந்த பகுதியில் வேறு யாருக்கும் நிலங்கள் கிடையாது. காலப்போக்கில் இந்நிலங்கள் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், காவல் குடியிருப்பு, மருத்துவ செவிலியர் குடியிருப்பு எனவும், புது நகர்களாக மாறின. இது செவி வழி வந்த வரலாற்று செய்தி ஆகும்.

ஆலயங்கள்: எங்கள் ஊரில் பல நூறு ஆண்டுகளைக் கடந்த மிகவும் புராதனமான பழமலைநாதர், கழுமலைநாதர், சென்னீஸ்வரர், சோழீஸ்வரர் ஆகிய 4 சிவாலயங்கள் அமைந்துள்ளன. இன்னும் வரதராஜப்பெருமாள், செல்லியம்மன், நாச்சியார் அம்மன், திரௌபதி அம்மன், மாரியம்மன் ஆகிய 4 காவல் எல்லை தேவதைகள் உள்ளன. இந்த 4 காவல் தேவதைகளும் ஊரை தீய சக்திகளிடமிருந்து காத்து வருவதாக ஐதீகம் ஆகும். இவ்வாலயங்களில் அனைத்து இந்து பண்டிகைகள், பிரதோஷம், மகா சிவராத்திரி, ஏகாதசி, விநாயகர் சதுர்த்தி சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

ஆவேரி: காவேரி ஆற்றைப்போல எங்கள் ஊரில் மிகப்பெரிய கடல்போல ஆவேரி ஏரி பரந்து விரிந்து 40 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த ஏரி மூலம் சுமார் 250 ஏக்கர் பரப்பளவுள்ள நம் இன மக்களின் நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தன. காலப்போக்கில் பருவமழை தவறியதாலும், ஏரியில் நீர் வரத்து இல்லாமையாலும் விவசாயக் கூலி தொழிலாளர்கள் கிடைக்காமலும், விவசாயம் எங்கள் கை விட்டு போனது. விளை நிலம் எல்லாம் வீட்டு மனைகளாக மாறின. சுற்றுக்கட்டு வீடுகள், மனைகள், தோட்டம், துறவுகள் எல்லாம் வணிக வளாகம், அடுக்கு மாடி குடியிருப்புகள் என மாறி மாதாந்திர வாடகை வருமானத்தை ஈட்டி தருகின்றன.

இளைஞர்கள் கல்வியில் முன்னேறி சிறந்த அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர்கள், குழந்தை நல மருத்துவர், தோல் நோய் மருத்துவ நிபுணர், எலும்பு முறிவு மருத்துவ நிபுணர், கண் மருத்துவர், அப்போலா மருத்துவ நிபுணர்கள், சிறுநீரக சிறப்பு மருத்துவ நிபுணர்கள் என மக்களுக்கு மருத்துவம் புரிந்து வருகிறார்கள். எம் ஊரில் நீதிபதி, ஆடிட்டர்கள், வழக்கறிஞர், அண்ணாமலை பல்கலைக்கழக அலுவலர்கள், முதல்வர், பேராசிரியர், தலைமையாசிரியர், ஆசிரியர் என ஏராளமானோர் உண்டு.

கல்வி நிலையங்கள்: எமது நகரத்தில் அரசுக்கல்லூரி, தனியார் கல்லூரி, பாலிடெக்னிக், ITI, – பொறியியல் கல்லூரி, நர்சிங் பயிற்சி பள்ளி, மேல்நிலைப்பள்ளிகள் அமைந்து மாணவர்களுக்கு கல்வி அறிவை புகட்டி வருகின்றன.

கார்காத்தார் சங்கம்: எம் நகரத்தில் சுமார் 50 ஆண்டுக்கு முன்பாக தாசில் பண்ணை ராஜசேகரன் பிள்ளை அவர்கள் திருக்கரத்தால் கார்காத்தார் சங்கம் துவக்கப்பட்டது. சுமார் 150 பேர் சங்க உறுப்பினர்களாக உள்ளனர். பிரதி மாதம் 5–ந் தேதி கூட்டம் நடைபெற்று ஆக்கப்பூர்வமான தீர்மானம் இயற்றப்படும். எங்கள் ஊரில் இளைஞர் அணியும், மகளிர் அணியும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

தற்போதைய பொறுப்பாளர்கள்: G. ராமநாதன் பிள்ளை – தலைவர்; K. பாலசுப்பிரமணியன் பிள்ளை – செயலாளர்; R. சேகர்பிள்ளை – பொருளாளர்.

இளைஞரணி பொறுப்பாளர்கள்: V. ராஜ மாணிக்கம் – தலைவர்; A. முருகன் – செயலாளர்; P. ராஜா (எ) ராமநாதன் – பொருளாளர்.

மகளிரணி: மகாராணி – தலைவி; ரேணுகா தேவி – செயலாளர்; சத்யா (எ) தீபிகா – பொருளாளர்.

நாட்டார் குடும்பம்:

எங்கள் ஊரில் நாட்டார் குடும்பம் இன்றளவும் செல்வச்செழிப்போடும், பேரும் புகழோடும் விளங்குகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு உடையார்பாளையம் ஜமீன்தார் பரிவாரங்களோடு திருமுட்டம் ஆலயம் வழிபட செல்கிறார். எங்கள் ஊரில் அப்போதைய நாட்டார் சாமிநாதன்பிள்ளை குளக்கரை சென்றுவிட்டு நடந்து வருகிறார். ஜமீன் சேவகன் நாட்டார்பிள்ளையை யாரென அறியாமல் கம்பால் நெட்டி தள்ளிவிட்டார். நாட்டார் ஊர் தலையாரி மூலம் சுங்க கேட் வாயிலை மூடுவிடுகிறார். ஜமீன் பரிவாரங்கள் செல்ல முடியாமல் தவிக்கின்றன. திவான் அவர்கள் நிலைமையை உணர்ந்துகொண்டு நாட்டார் பிள்ளையை அணுகி அறியாமல் செய்த பிழையை மன்னிக்கும்படி 1 பைசா அபராதம் செலுத்திய பின் சுங்க கேட் வாயில் திறக்கப்பட்டு ஜமீன் பரிவாரங்கள் பயணத்தை தொடர்ந்தார். இன்றளவும் ஊர் மக்கள் இந்நிகழ்வை நினைவில் வைத்துள்ளனர். தற்போதைய நாட்டார் சாமிநாதன்பிள்ளை அவர்கள் 'குலவித்தை கல்லாமல் பாகம்படும்' என்னும் முதுமொழிக்கேற்ப சிறப்பாக ஊர் நிர்வாகத்தை நடத்தி வருகிறார். இவர் ஒரேநாளில்நான்கு அம்மன்கோவில்களுக்கு தருமபுரம் ஆதினம் முன்னிலையில் கும்பாபிஷேகம் செய்தது ஒரு வரலாற்று சாதனையாகும். எங்கள் ஊரில் குடும்ப பிரச்சனை, சொத்து பிரச்சனை சம்பந்தமாக யாரும் காவல் நிலையமோ, நீதிமன்றமோ சென்றதில்லை. ஊர் முக்கியஸ்தர்களும் நாட்டார்களும் சமரசம் செய்து பிரச்சனைகளை தீர்த்து வைக்கின்றனர். இது ஒரு வரலாற்று பதிவாகும்.

நகராட்சி:

எங்கள் ஊரில் இதுவரையிலும் உள்ளாட்சி தேர்தலில், நமது வார்டில் ஏகமனதாக ஒருவரே தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவது தொன்றுதொட்டு நடந்துவரும் எழுதாத சட்டம் ஆகும். அண்மையில் நடந்த நகராட்சி தேர்தலில் நம் இன மக்கள் இருவர் கவுன்சிலராக வெற்றி பெற்றது மகிழ்ச்சிக்குறியதாகும். 1. S. ராஜமாணிக்கம் பிள்ளை – கவுன்சிலர், 2. மீனா சங்கர்நடராஜன்.

S. ராஜமாணிக்கம்பிள்ளை இவர் 3 முறை கவுன்சிலராக வெற்றி பெற்று நமது வார்டில் எண்ணற்ற நலத்திட்டங்களான குடிநீர் வசதி, மின்விளக்கு, கழிவு நீர் வாய்க்கால், சாலை வசதிகள் ஆகியவற்றை குறைவில்லாமல் செய்து வருகிறார். இவரது பணி பாராட்டப்பட வேண்டியது ஆகும். இக்கட்டுரையின் நோக்கம் எமது ஊர் வரலாற்றை வருங்கால சந்ததியினரும், இளம் தலைமுறையினரும் ஒப்புரவு வாசகர்களும் படித்து நினைவில் கொள்ளவேண்டும் என்பதே ஆகும்.

ஆக்கம்: K. பரமசிவம் ஆசிரியர்

குடவாசல் - எங்கள் ஊர்

குடவாசல் குடந்தை திருவாரூர் மார்க்கத்தில் சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. பிரளயகாலத்தில் படைப்புக்குரிய வேதங்களை பிரம்மா ஒரு அமுத குடத்தில் இட்டார். அந்தக் குடம் வெள்ளப்பிரளயத்தில் அடித்துச் செல்லப்பட்டு தென்திசையில் மிதந்து வந்தது. மீண்டும் உயிர்களைப் படைக்க சிவன் வேடன் வேடத்தில் சென்று குடத்தின் மீது அம்பு எய்தினார். அமுதகுடத்தின் பாகங்கள் விழுந்த இடத்தில் சிவன் சுயம்புலிங்கமாக அருள்பாலித்தார்.

கோணேஸ்வரர்: சூதமகரிஷி, பிருகு மற்றும் தாலப்பியர் ஆகியோர் இத்தலத்தில் சிவனை வழிபட்டுள்ளனர். உயிர்களை(கோ) நேசித்து அவர்களை மீண்டும் படைக்க அருளியவர் என்பதால் இவருக்கு "கோணேஸ்வர்" என்று பெயர் ஏற்பட்டது. அமுதக்குடத்தின் முகப்பு வாயில் விழுந்த தலமென்பதால் தலம் "குடவாயில்" என்றழைக்கப்பட்டு குடவாசல் என மருவியது. சுவாமிக்கு அமுதலிங்கேஸ்வரர் என்றும் புற்றிற்குள் இருந்ததால் வன்மிகநாதர் என்றும் பெயர்கள் உண்டு. கோயில் நுழைவு வாசல் எதிரே காசி விஸ்வநாதர் காட்சி தருகிறார். தை மாதத்தில் 3 நாட்கள் இவர் மீது சூரிய ஒளி விழுகிறது. அருகே நடராஜர் சிவகாமியம்பாளுடன் இருக்கிறார். இக்கோயிலுக்குள் நுழைந்ததும் வலதுபுறத்தில் "அனுமதி விநாயகர்" சன்னதி இருக்கிறது. இவரை வணங்கி அனுமதி பெற்ற பிறகே சிவனை வழிபடச் செல்ல வேண்டும் என்பது ஐதீகம்.

மேற்கு நோக்கிய இத்தலத்தை திருப்பணி செய்த கோச்செங்கட்சோழ மன்னன் மாடக்கோயிலாக கட்டினான். இக்கோயில் சோழர்களால் கட்டப்பட்டது. தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 157வது தேவாரத்தலம் ஆகும்.

துரோணாச்சாரியர் இந்தத் தலத்தில் கடுந் தவமியற்றிக் கோணேசரைப் பூஜித்துக் கீழ்பாலுள்ள சூரிய தீர்த்தத்தில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை களில் ஸ்நானஞ் செய்தார். கோணேசரே அவருக்கு

அசுவத்தாமன் என்னும் சாகாவரம் பெற்ற புத்திரராய்த் தோன்றிக் கௌரவர்களுக்கு நண்பனாக விளங்கினார்.

ஒரு சமயம் பார்வதி தனது தேகம் அழுக்காயிருந்ததால் ஸ்நானஞ் செய்வதற்காகத் தன் அழகிய பிள்ளையாரை வாயிற்காவலாக வைத்து அவர் கையில் ஒரு தடியைக் கொடுத்து "ஓ குழந்தாய் நான் ஸ்நானம் செய்யப் போகிறேன். ஒருவரையும் உள்ளே விடாதே" என்றாள். அவரும் "அம்மா அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிக் காவலிருந்தார்.

சிவபிரான் மூன்றுலகங்களிலும் சஞ்சரித்து வந்து உள்ளே நுழையுஞ்சமயத்தில் பிள்ளையார் தடியைக் குறுக்கே வைத்து உள்ளே விடமாட்டேன் என்றார். சிவபிரான் பிள்ளையாருடைய தலையைக் கிள்ளி எறிந்துவிட்டு உள்ளே சென்றார். உமாதேவியார் அவரை உபசரித்து அவர் மகிழ்ந்த சமயத்துப் பிள்ளையை நினைந்தழுதாள். சிவபெருமான் அவள் விருப்பத்தை நிறைவேற்றுவதாகச் சொன்னார்.

உமாதேவி தன் பிள்ளையை எழுப்பித்தர வேண்டினாள். அதற்கு அவர் முன்னிருந்த தலையொட்டாதென்றும் மாணிபத்திரன் கொணரும் வேறு தலையொன்றைப் பொருத்தி எழுப்பித் தருவதாகவுஞ் சொன்னார். வடதிக்கிற் தலை வைத்துத் தூங்குகிறவன் தலையை கொண்டுவா அதுதவிர மற்றத் தலை பிள்ளையாருக்கு ஒட்டாது என்று சொன்னார். மாணிபத்திரன் யாண்டுத் தேடினும் அத்தகைய மனிதத் தலையொன்றும் கிடைக்கவில்லை.

மதயானை ஒன்று வடக்கே தலைவைத்து தூங்கிற்று. அதன் தலையை வெட்டி மாணிபத்திரன் சிவபிரானிடஞ் சேர்த்தார். அதைப் பொருத்திக் கடாக்ஷித்ததும்பிள்ளையார்சுகமாகஉயிர்த்திருத்தலை கண்டு அவருக்கு அநேக வரங்களைத் தந்தருளினார். உனக்கு மூஞ்சூறு வாகனமாகுக. நீ பதினான்கு உலகங்களிலும் பூஜிக்கப் பெறுவாய். என் பூஜாகாலங்களிலும் உற்சவ காலங்களிலும் உலகத்தில் விவாக முதலிய கல்யாண காலங்களிலும் எல்லா ஜனங்களும் உன்னைப் பூஜிப்பார்கள். விரைவில் பூவுலகில் எனக்கு ஆதியிலுண்டானதொரு க்ஷேத்திரம் போய்ச் சேருக. அங்கு உன்னை யாவருங் கொண்டாடுவார்கள். பிறகு எங்கும் பூஜிக்கப்படுவாய். அது தான் குடவாயில் கோணேஸ்வரர் க்ஷேத்திரம்.

இந்த கோயில் கிழக்குப்பக்க சுற்றுசுவர் பின்னால் தான் முதுபெரும் வேளாண் விஞ்ஞானி முனைவர் செல்லைய்யா இல்லம் உள்ளது. அடுத்த வீடு அவரது சித்தப்பா சட்டமன்ற உறுப்பினர் திரு.கிருஷ்ணமூர்த்தி பிள்ளை அவர்கள் வீடாகும். அவர் சென்னை தமிழ்நாடு கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவராக இருந்த போது நமது கார்குல சொந்தங்கள்சுமார் 20 பேருக்கு மேல் வங்கியில் வேலை போட்டுக் கொடுத்துள்ளார்கள். அந்தத் தெருவில் நமது கார்குல சொந்தங்களின் வீடுகள் உள்ளன.

குடவாசல் கார்காத்தார் சங்கத்தில் அருகிலுள்ள ஒகை, உத்திரங்குடி, அரசூர் கீரந்தங்குடி, செல்லூர், இலையூர், காவனூர், மணப்பரவை, துறையூர், பஞ்ச நதிக்குளம் ஊரிலுள்ள கார்குலத்தினர் உறுப்பினராக உள்ளனர். இன்றைய காலநிலை மாற்றத்தால் விவசாயத்தில் வருமானம் குறைந்து விட்டதால் விவசாயத்தையும் விடாமல் நமது கார்குல சொந்தங்கள் மாற்றுத் தொழிலும் செய்வது சிறப்புடையதாகும்.

இலையூர் காலஞ்சென்ற ஜெகநாதப்பிள்ளை அவர்கள் சுமார் 90 ஆண்டுகளுக்கு முன் துறையூர் போன்ற ஊர்களுக்கு தொடக்கப்புள்ளி கொண்டு வந்தார்கள். இலையூர் சீனிவாசம் பிள்ளை அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவராக இருக்கும் போது அன்றைய முதலமைச்சர் காமராஜ் அவர்கள் இலையூரில் ஆரம்பப் பள்ளியை திறந்து வைத்தார்கள்.

மணப்பரவை M.R. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை, துறையூர் சா. செல்வம்பிள்ளை அவரது துணைவியார் மணப்பரவை ஊராட்சி மன்றத் தலைவராக செயல் பட்டனர். குடவாசல் நகர ஊராட்சித் தலைவராக K.K. பாலு செயல்பட்டுள்ளார். சினிமாத் துறையில் இலையூர் தியாகராஜனும், குடவாயில் அருள்மொழி அவர்களும் நினைவுறத்தக்கவர்கள்.

ராஜராஜசோழன் காலத்திலிருந்து இன்று வரை கோவில் கல்வெட்டுகளை ஆய்வு செய்த குடவாசல் பாலசுப்பிரமணியன் (நம் குலத்தவர் அல்ல) பிறந்த ஊர் குடவாசல் ஆகும். அவரது ஆய்வு நூலிலிருந்தும், நேரிலும் தகவல் பெற்று கல்கியின் பொன்னியின் செல்வன், பாலகுமாரனின் உடையார் நாவலிலும் ராஜராஜசோழன் வரலாறு தஞ்சை கோயில் கட்டப்பட்ட வரலாறு எழுதப்பட்டுள்ளது குடவாயிலின் சிறப்பாகும்.

இந்தத் தகவல்கள் கடலூர் மஞ்சக்குப்பம் திரு. வ.சு. சண்முகம் பிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்டு இந்து சமய அறநிலையத் துறையால் நவம்பர் 2022ல் திருக்குடவாயில் புராணம் என்ற தலைப்பில் வெளியிட்ட நூலிலிருந்து எடுத்தாளப்பட்டது.

தகவல்: நா. கேசவன்

நானிலம் போற்றும் திருநாங்கூர்

அரங்க. தியாகராசன்
மயிலாடுதுறை
9486718234

மாங்கனியை தின்று கொண்டிருந்த ‘ஆண் குரங்கானது வண்டுகள் ரீங்காரமிட்டு வந்தவுடன், அவைகள் மாங்கனியை நுகரட்டும் என்ற பெருந்தன்மையோடு, தாவி வாழைத் தீங்கனியை நுகர வந்துவிட்டதாக, திருமங்கையாழ்வார்

மாங்கனி நுகர்ந்த மந்தி
வந்து வண்டிரிய வாழைத்
தீங்கனி நுகரும் நாங்கூர்த்
திருமணிக் கூடத்தானே!

எனப் பாடி மகிழ்கின்றார்.

மேலும்,நாங்கூரில்ஓடிவருகின்றகாவிரியானது, யானைத் தந்தம், சந்தனம், முத்துக்கள் போன்ற மலைப் பண்டங்களை தன் பெரிய அலைகளால் நாங்கூரில் கொண்டு வந்து தள்ளுகின்றன என்பதனை, ‘ஆளரியால் அலைப்புண்ட யானை மருப்பும் அகிலும் அணிமுத்தும் வெண்சாமரையோடு பொன்னி மலைப்பண்டம் அண்டத் திரையுந்து நாங்கூர் மணிமாடக் கோயில் வணங்கென் மனனே!’ எனவும் பாடி மகிழ்வார்.

மேலும் இரட்டைப் புலவர்களில் ஒருவர், ‘தேங்கு புகழ் நாங்கூர்ச் சிவனே!’ என்று பாடி புகழ்மிக்க ஊர் நாங்கூர் எனக் கூறுவார். பட்டினத்தடிகள் சேந்தனாரைக் குறிப்பிடுகின்ற பொழுது, நாங்கூர் வயல்களில் மீன்கள் ஓடியாடி விளையாடுகின்றன என்பதனை ‘செய்தளைக் கயல்கள் பாய் நாங்கூர்ச் சேந்தனை’ எனப் பாடி நாங்கூரில் பிறந்த சேந்தனாரைக் குறிப்பிடுவார்.

திருநாங்கூர் இயற்கை அழகும், தொன்மைப் பெருமையும் கட்டமைக்கப்பட்ட ஊர் அழகும் எவ்வாறு நிறைந்திருக்கின்றன என்பதனைக் கூறி மகிழ்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முற்காலத்தில் ‘நாகபுரி’ என்று அழைக்கப் பட்டதே நாங்கூர் என மருவியதாகக் கூறப்படுகின்றது. மேலும் ‘நாங்கை’ என்ற ஒரு வகை மரம் நிறைந்து இருந்ததால் இப்பெயர் வந்ததாகவும், நாங்கை என்பதற்கு தானிய வரி என்ற ஒரு பொருளும் உண்டு. தானிய வரிகள் மிகுதியாகக் கொடுத்தமையாலும் இப்பெயர் வந்திருக்கலாம் என்ற கருத்துகளும் இருக்கின்றன. எனினும் பக்தி மார்க்கத்தில் சிறந்த ஊராக இருந்தமையால் திரு என்ற அடைமொழியைச் சேர்த்து ‘திருநாங்கூர்’ என அனைவரும் அழைத்து மகிழ்கின்றனர்.

தொன்மைச் சிறப்பு:

‘தில்லை மூவாயிரவர் நாங்கை நாலாயிரவர்’ என்ற சொல் வழக்கு இன்று வரை உள்ளது. தில்லையிலே மூவாயிரம் அந்தணர்கள் வாழ்ந்தனர். ஆனால் நாங்கை என்ற நாங்கூரிலே நான்காயிரம் அந்தணர்கள் வாழ்ந்தனர். அதற்குச் சான்றாக இவ்வூரிலே ‘நாலாயிரத்தொரு பிள்ளையார் கோயில்’ என்ற ஒரு கோயில் இன்றும் உள்ளது. இங்கு இராமனுடன் நாலாயிரம் அந்தணர்கள் தவமிருந்தனர் என்பதும் அவர்களோடு விநாயகரும் ஒருவராகத் தவமிருந்தார் என்பதும் புராணச் செய்தியாக உள்ளது. இன்றும் அந்தணர்கள் வாழ்ந்த நான்கு ஐந்து வீதிகள் உள்ளன. ஆக்கூரில் உள்ள கார்குல வேளாளர்களை திருஞான சம்பந்தர் புகழ்ந்து பாடியுள்ளதைப் போல, நாங்கூர் வாழ் அந்தணர்களின் வீரத்தையும் புகழையும் கொடையையும் திருமங்கையாழ்வார் ஒவ்வொரு பாசுரத்திலும் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். அவர்களின் வீரத்தைக் குறிப்பிட்டுக் காட்ட, ‘ஒண்திறல் தென்னன் ஓட வடவரசு ஓட்டங் கண்ட தென்திறலாளர் பயிலு நாங்கூர்’ எனக் கூறுகின்றார். இதன் மூலம் தென்னன் என்பவன் யார்? வடவரசு என்பது யாது? என்ற வரலாற்று ஆய்வினையும் நம்முன் ஆழ்வார் வைக்கின்றார்.

அடுத்து பூம்புகாரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த கரிகாற் பெருவளத்தான் தன் தாய்மாமன் இரும்பிடர்த் தலையார் வாழ்ந்தவூர் நாங்கூர் என்பதும் நாங்கூர் வேளீர் குலத்திலே பெண் எடுத்துத் திருமணம் செய்து கொண்டான் என்பதும் வரலாற்றுச் செய்தியாக உள்ளது. மேலும் கரிகாலனுக்கு அரசியல் நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் அவனைக் காப்பாற்றி பூம்புகாரில் அரசனாக்கி மகிழ்ந்தது நாங்கூர் வேளீர்ப் பெருமக்களே என்பதும் வரலாற்றில் பெருமைக்குரிய செய்தியாகும்.

காலத்தால் மிகவும் முற்பட்ட தொல்காப்பிய இலக்கணநூலிற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் நாங்கூர், வல்லம் போன்ற ஊர்களைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். வேளாளர்களை தொல்காப்பியர் உழுது உண்போர், உழுவித்து உண்போர் என இரண்டாகப் பிரித்துக் காட்டுவார். பெரிய பண்ணை போன்ற விவசாயம் செய்கின்றவர்களை உழுவித்து உண்போர் எனக் குறிப்பிடுவார். இப்படி வளமாக விவசாயம் செய்தவர்களாக உரையாசிரியர் நாங்கூர்,

வல்லம் போன்ற ஊர்களில் வாழ்ந்தவர்கள் எனக் குறிப்பிடுவார்.

இவ்வூர் இராசேந்திர வளநாடு என்றும் நாங்கூர் நாட்டு நாங்கூர் வளநாடு என்றும் குறிப்பிடப்படுகிறது. பூம்புகாரை அடுத்த மணிக்கிராமம் முதல் அனைத்து ஊர்களும் இவ்வளநாட்டில் அடங்கியதாகத் தெரிகிறது. அதற்குச் சான்றாக தாய்லாந்தில் உள்ள 'தாகூவாபா' என்ற ஊரில் உள்ள ஒரு கல்வெட்டு, நாங்கூர் வளநாட்டைச் சேர்ந்த மணிக்கிராமத்து வணிகன் அவ்வூரில் குளம் தொட்டு வளம் பெருக்கினான் என்ற செய்தியைக் குறிப்பிடுகின்றது. மேலும் இவ்வூரில் உள்ள கோயில்களில் இரண்டாம் நந்திவர்மன், முதலாம் பராந்தகச் சோழன் காலத்திய கல்வெட்டுகளும் நாங்கூரின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன.

ஊரின் அமைப்பு:

'திருவாரூர்த் தேரழகு திருவிடைமருதூர் தெருவழகு' எனக் குறிப்பிடுவர். ஆனால் திருநாங்கூரில் இராஜவீதிகளின் அமைப்பும், நூல் கட்டியது போன்ற உள் வீதிகளின் அமைப்பையும் கண்டால் திருவிடைமருதூரைக் காட்டிலும் தெரு அழகுடையது என்பது நன்கு விளங்கும். நாங்கூர் என்பது இன்று மிகப் பெரிய கிராமமாகக் காணப்பட்டாலும் பண்பட்ட நகர அமைப்பில் இவ்வூர் இன்றும் இருப்பது சிறப்பாகும். நான்கு இராஜவீதிகளும் மிகவும் நீண்டது என்பதைக் குறிப்பிட திருமங்கையாழ்வார், 'சிறையார் உவணப்புள் ஒன்றேறி அன்று திசை நான்கும் நான்கும் இரிய' எனக் கூறுவார். இரண்டு இராஜவீதிகள் சேர்ந்து ஒரு வீதியாக உள்ளது என்பதனை திசை நான்கும் நான்கும் இரிய என்பதன் மூலம் எட்டு இராஜவீதிகள் நான்கு இராஜவீதிகளாக உள்ளன என மிகுத்துக் காட்டுவார். மணிமாடக் கோயிலில் உள்ள திருநாராயணப் பெருமாள் கருட வாகனத்தில் (சிறையார் உவணப்புள்) ஏறி இந்த நான்கு வீதிகளில் வருகின்றார் எனக் கூறுகின்றார். சுமார் நூற்றி நாற்பது ஆண்டுகளாக நடைபெறும் கருட சேவை உற்சவத்தை ஆழ்வார் தீர்க்கதரிசனமாக ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு குறிப்பிட்டுக் காட்டுவது மிகுந்த ஆச்சரியமே!

இராஜவீதிகள் மட்டுமல்லாமல் உள்வீதிகளும் நேர்க்கோட்டிலேயே அமைந்திருப்பது மிக அருமையாகும். நாங்கூரில் அந்தணர் வீதிகள் நான்கு, கார்காத்தார் வீதி ஒன்று, கைக்கோளர்கள் வீதிகள் மூன்று, வணிகர் வீதி போன்றவைகள் மட்டுமல்லாமல் தச்சர் தெரு, இசை வேளாளர்கள் தெரு இரண்டு, நோக்கர் தெரு, கொல்லர் தெரு, வண்ணார் தெரு போன்றவைகளும் முறையாக அமைந்துள்ளது. ஊரை ஒட்டிய பகுதியில் அக்கால முறைப்படி அடியோர் பாங்கினர், வினைவளர் பாங்கினர் வீதிகளும் உள்ளன.

இவ்வூரிலே நீர்வளத்திற்கு அளவே இல்லை என்ற வகையில் மணிக்கர்ணிகை ஆறு ஓடுகின்றது. இரண்டு பெரிய ஓடைகள் உள்ளன. பத்துக்கும் மேற்பட்ட குளங்கள் உள்ளன. ஓடை என்ற பெயர் வழக்கில் உள்ளதனை, 'திருப்பாற்கடல்' என்றே கூறுகின்றனர். மிகப் பெரிய இந்த ஓடையானது அளவில் பெரியதாக இருப்பதால் கடல் அலைகள் போல நீர் எழுவது கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வோடையின் நான்கு புறமும் வீதிகள் போன்ற அமைப்பும் அந்த இரண்டு கரைகளிலும் தென்னை மரங்கள் வரிசையாக நெருக்கமாக இருப்பதும் காண்பவர்களைக் கவிஞர்களாக மாற்றிவிடும் பேரழகாகும்.

'விழவுமலிமூதூர்' என்று மதுரையையும், பதியெழு வறியாப்ப பழங்குடியினர் வாழ்மூதூர் என்று பூம்புகாரையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன. அதாவது மதுரையில் திருவிழாக்கள் நடந்தபடியே இருக்குமென்றும், பூம்புகாரில் சகல வசதிகள் இருப்பதால் அவ்வூரினர் வேறு ஊருக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்பதனை இவ்வரிகள் மூலம் விளக்குவர். ஆனால் இவை இரண்டும் நிறைந்த ஊராக எங்கள் திருநாங்கூர் விளங்குகின்றது என்பது எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியாகும்.

திருவிழாக்கள் இவ்வூரில் மிகுதியாக நடக்கக்கூடிய வகையில் வைணவக் கோயில்கள், சிவன் கோயில்கள், மாரியம்மன், காளியம்மன், செல்லியம்மன், திரௌபதையம்மன் கோயில்களும், நொண்டி வீரன், சாவான், பிடாரி மற்றும் கிராம தேவதைகள் நிறைந்த ஊராக இருக்கின்றது. அதனால், தெருமுனையில் மேளதாள நாதஸ்வர இசை கேட்டவுடன் எந்த கோயில் சுவாமி வருகிறது என்று கூடத் தெரியாமல் நாங்கள் சிறுவயதில் கடைக்கு ஓடிச் சென்று, சுவாமி வருவதற்குள் அருச்சனைக்கு ஆயத்தம் ஆவது எங்களுக்கு ஒரு சுகமான மகிழ்ச்சியான அனுபவமாகும். அவ்வளவு திருவிழாக்கள் இந்த ஊரில் நடந்தபடியே இருக்கும்.

வைணவ சமயத்தில் குறிப்பிடுகின்ற ஆழ்வார்களால் பாடப்பெற்ற நூற்றி எட்டு திவ்ய தேசங்களில் பதினொரு திவ்ய தேசங்கள் எங்கள் திருநாங்கூரைச் சார்ந்தது என்பது எங்கள்

ஊரின் மிகப் பெரிய சிறப்பாகும். திருநாங்கூரில் திருநாராயணப் பெருமாள், திருக்குடமாடு கூத்தர், திருப்புருடோத்தமப் பெருமாள், திருவைகுந்தநாதப் பெருமாள், திருப்பள்ளிகொண்ட பெருமாள், திருச்செம்பொன்னரங்கர், திருவரதராஜப்பெருமாள் கோயில்கள் உள்ளன. திருநாங்கூர் என்றே பாசுரங்களில் குறிப்பிடுகின்ற திரு அண்ணன் பெருமாள்,திருமாதவப்பெருமாள்,திருக்காவளம்பாடிக் கண்ணன், திருப்பார்த்தன்பள்ளி போன்ற கோயில்கள் இவ்வூரை ஒட்டிய இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளன.

மேலும் அருள்மிகு மதங்கீஸ்வரர் கோயில், அருள்மிகு நம்புவார்க்கன்பர், அருள்மிகு அமிர்த புரிசுவரர், அருள்மிகு உத்திராபதிக் கோயில் போன்ற சிவன் கோயில்களும் உள்ளன. நாங்கூரின் நடு ராஜவீதியில் ஒரே நேர்க்கோட்டில் அமைந்திருக்கும் காமனைத் தகனம் செய்த காமுட்டிக் கோயில்கள் மூன்று உள்ளன.

மதங்க முனிவர் இவ்வூரில் தவமிருந்து பார்வதியை மகளாகப் பெற்று, அஞ்சனாட்சி, சுகஹஸ்தை என்ற பெயரிலே வளர்ந்து இங்கு சிவபெருமானைத் திருமணம் செய்துகொண்டாள். அதனால் இப்பெருமானை மதங்கீஸ்வரர் என்றே அழைக்கின்றனர். இக்கோயிலில் மதங்க முனிவருக்கும் ஒரு சிலை உள்ளது. இக்கோயிலிலேயே வடதிசையை நோக்கியவாறு அருள்மிகு காளியம்மன் அழகிய சாந்த சொரூபியாக ஊஞ்சலில் அமர்ந்து அருள்பாலிக்கும் அழகே அழகு!

✣ ✦ ✣

விட்டலனின் அடியார்கள் - ஸ்ரீ பக்தகானோபாத்திரை

திருமதி. லலிதா வேலாயுதம்
9940595359

பண்டரிபுரத்தில் இருந்து சுமார் 14 மைல் தொலைவில் உள்ள மங்களபட் எனும் ஊரில் இசை வேளாளர் மரபில் பிறந்தவள் சியாமா. தற்சமயம் இவ்வூர் மங்களவேதா எனப்படுகிறது. பரதக்கலையிலும், இசையிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்த ஷியாமாவிற்கு, கன்ஹோபாத்ரா என்ற அழகிய மகள் இருந்தாள். மராத்தி மொழியில் கன்ஹோ என்பது கிருஷ்ணரின் மறுபெயரான கன்ஹா அல்லது கிருஷ்ணா என்பதின் சுருக்கம். பாத்ரா என்றால் இலை என்றும், பாத்திரம் என்றும் கொள்ளலாம். இவை இரண்டும் கன்ஹோபாத்ரா எனும் பெயரை சியாமா தனது மகளுக்குச் சூட்டினாள். இதன் நேரடிப் பொருள், ‘கிருஷ்ணருக்கு உரியவள்’ அல்லது ‘கிருஷ்ணனின் பக்திக்கான பாத்திரம்’ என்பதாகும்.

அவள் சிறு வயதிலேயே பாடுவதையும், நடனமாடுவதையும் கற்றுக்கொண்டாள். மிகவும் அழகானவளாக இருந்தாள். இவள் வளரும் பருவத்திலேயே பரமனிடம் பக்தி பூண்டு, எந்நேரமும் பாண்டுரங்கனின் புகழ் பாடுவதிலும், அவனைத் தியானிப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டாள். அவள் பக்த மீராவைப் போல், நம் ஆண்டாளைப் போல கண்ணனையே தனது மனதில் கணவனாக வரித்தாள். கனவிலும், நனவிலும் அவனது திருநாமத்தையே ஜபித்துக்கொண்டிருந்தாள். அவளின் அன்னைக்கும் அவள் பரமனின் பக்தையாக வளருவதில் மகிழ்ச்சியே! ஆனால் அவளின் அழகும், திறமையும் ஊரில் பரவ, மன்னனின் காதுகளையும் அது சென்றடைந்தது. அவன் அவளை அடையவேண்டும் என்ற எண்ணத்தை அதிகாரிகள் மூலம் சியாமாவிற்கு சொல்லி அனுப்பினான்.

சியாமா செய்வதறியாமல் மகளைத் தன்னுடன் அரசனின் அரண்மனைக்கு வருமாறு அழைக்க, மகள் மறுத்து ஒதுக்கினாள். கணிகையர் குலத்தில் பிறந்த நாம் அரசனுக்கு அடிபணிந்தால், அரசன் நிறைய ஆபரணங்களும், செல்வமும் கொடுப்பான் என்று கூறியும், கானோபாத்ரா அவளுக்கு அதில் விருப்பமில்லை என்று மறுத்துக் கூறிவிட்டாள். ‘குலம், கோத்திரம், சாதி, சம்பிரதாயம் எல்லாம் நமக்குத்தான். ஆண்டவனுக்கு அதெல்லாம் கிடையாது. இடையர் குலத்தில் உதித்த அந்த கண்ணன், இந்த கணிகையர் குலமகளை ஒருபோதும் கைவிடமாட்டார்’ என உறுதிபட கூறவும், சியாமா, ‘நீ நமது குலத்திற்கு நிலையான பெருமையைத் தேடித் தந்துவிட்டாய்’ என பாராட்டினாள்.

ஒருநாள் பண்டரிபுரம் செல்லும் யாத்ரீகர்கள் குழு, கடவுளைப் புகழ்ந்து பாடிக்கொண்டே அவ்வழியே சென்றது. அவர்களைக் கண்ட கன்ஹோபாத்ரா, அவர்களை நமஸ்கரித்து, அவர்கள் எங்கே செல்கிறார்கள் என்று கேட்டாள். அவர்கள் விட்டலைத் தரிசிக்க பண்டரிபுரம் போவதாக கூறவும், விட்டலின் மகிமையைக் கூறுமாறு கேட்டாள். அதற்கு அவர்கள் பிரம்மா மற்றும் பிறரால்கூட அவரது மகிமையை விவரிக்க முடியவில்லை என்றும், அவரது அழகு லட்சுமியின் அழகைவிட பில்லியன் மடங்கு அதிகம் என்றும் கூறினர். பிறகு அவள் தான் இறைவனிடம்

யாசித்தால், அவர் தன்னை ஏற்றுக் கொள்வாரா எனக் கேட்டாள். அதற்கு அந்த பக்தர்கள் அவர் நிச்சயமாக அவளை ஏற்றுக்கொள்வார் என கூறவும், அவள் வீட்டிற்குச் சென்று தாயாரின் அனுமதி பெற்று தம்புராவும், சிப்ளா கட்டையும் எடுத்துக்கொண்டு அவர்களுடன் புறப்பட்டாள்.

போகும் வழி எல்லாம் பண்டரிநாதனின் புகழைப் பாடிய வண்ணம், பண்டரிபுரத்தை அடைந்தாள். பண்டரிபுரத்தைக் கண்டதும் அவள் கொண்ட இன்பத்திற்கு எல்லையே இல்லை! சந்திரபாகா நதியில் நீராடி, அங்கிருந்து ஆலயம் வரை செல்லும் படிக்கட்டுகளில் நின்ற வண்ணம், உள்ளம் உருகப் பாடினாள். தன்னை மறந்து பக்தியால் ஆடினாள். நலம் தரும் நாயகனை; இடைதனில் கரம் வைத்து நிற்கும் பேரழகனை; காளிங்க நர்த்தனனை கோபியர் கொஞ்சும் ரமணனை; பண்டரிநாதனைக் கண்டாள். இரவு பகலாக பஜனையில் மூழ்கி இருக்க, மங்களபட மன்னன் அவளுக்காக ஏக்கத்தில் பல நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த கோபத்தில் அதிகாரிகளை அவளது வீட்டிற்கு அனுப்ப, அவள் பண்டரிபுரத்தில் இருப்பதை அறிந்து, அதிகாரிகளையும், வீரர்களையும் அவளை பலவந்தமாக அழைத்து வருமாறு ஆணையிட்டு அனுப்பி வைத்தான்.

பண்டரிபுரம் அடைந்த அதிகாரிகளும், வீரர்களும் தாங்கள் அவளுக்காக பல்லக்குடன் வந்திருப்பதைக் கூறி, உடனே புறப்பட்டு வருமாறு வேண்டினர். அவள் முகத்தில் புன்முறுவல் அரும்ப, தங்களின் அரச கட்டளையை பண்டரிநாதனிடம் விண்ணப்பித்து, அவனது சித்தம் எதுவோ அதுபோல் நடக்கட்டும் என்று கூறி கருவறைக்குள் சென்றாள். பண்டரிநாதனிடம் அவளை ஏற்றுக்கொள்ளுமாறு புலம்பி அழுது வேண்டினாள். அருகில் இருந்த அர்ச்சகர்கள் அவள் நிலை கண்டு கவலை கொண்டனர். அப்போது கருவறையில் ஒரு பேரொளி பிறந்தது; ஆலய மணிகள் வேகமாக ஒலித்தன; சங்கு முழங்கியது; வேத கோஷம் எழுந்தது. எம்பெருமானின் திருக்கண்களில் இருந்து ஜோதி பிறந்தது. அந்த ஜோதியில் ஸ்ரீகானோபாத்திரை கலந்தாள். அவளது உடல் நிலத்தில் விழ, அர்ச்சகர்கள் அவளது உடலை பண்டரிநாதனின் கட்டளைக்கிணங்க கோவிலின் தெற்குபுறத்தே எவருக்கும் தெரியாமல் புதைத்தனர். அவ்வாறு புதைத்த உடனே அந்த இடத்தில் ஒரு பிரகாசம் தோன்றி, இலைகளும், நறுமணம் கமழும் பூங்கொத்துக்களும் குலுங்கும் அழகிய துரட்டி எனப்படும் தாராட்டி மரம் ஒன்று தோன்றியது.

கானோபாத்திரையை எதிர்பார்த்து நின்றிருந்த அதிகாரிகளும், வீரர்களும் அர்ச்சகர்களை நம்பாமல் விலங்கிட்டு அழைத்துச் சென்றனர். அர்ச்சகர்கள் அரசனிடம் நடந்ததைக் கூற நம்பாத அரசன், பண்டரிபுரம் சென்று, தெற்குப் பிரகாரம் அடைந்தான். பக்தர்களின் கூட்டம் மரத்தை வலம் வந்து நமஸ்கரிப்பதும், தீபாராதனைக் காட்டி வழிபடுவதையும் கண்டு அரசன் அதிசயித்தான். அரசனும் மரத்தினை வலம் வந்து வணங்கி, கண்களில் நீர் மல்க தனது தவற்றினுக்கு மன்னிப்பு கேட்டுப் பிரார்த்தித்தான். இன்று முதல் நானும், எனது நாடும் உனக்கும், உன்னை ஆட்கொண்ட பாண்டுரங்கனுக்கும் அடிமை என்றான்.

அரசன் கருவறைக்குச் சென்று வணங்கவும், அவர்கள் அணிவித்த பூமாலையில் நீள் முடி இருக்கக் கண்டு வியந்தான். தான் ஏதோ அபச்சாரம் செய்ததாக பயம் கொண்டான். பாண்டுரங்கப் பெருமானோ வைரமணி முடி அலங்கரிக்கும் தனது சிரசிலே கார்குழல், தாமரைக் கண்கள், முதலைக் காதணிகள் மற்றும் கழுத்திலிருந்த கௌஸ்துபம் தெரியும் வண்ணம் திருக்காட்சி கொடுத்தார். அரசனும் ஆண்டவனின் அருளைப் பெற்று நாடு திரும்பினான்.

தாராட்டி மரம் பொதுவாக தொரட்டி மரம் அல்லது துரட்டி மரம் என அழைக்கப்படுகிறது. கடும் வறட்சியையும், வெப்பத்தையும் தாங்கி வளரும் ஒரு சிறு மர வகையாகும். இதன் வேர், பட்டை மற்றும் இலைகள் நாட்டு மருத்துவத்தில் பல்வேறு தோல் நோய்கள் மற்றும் உடல் உபாதைகளைப் போக்க பயன்படுத்தப்படுகின்றன. இம்மரம் நமது தமிழகத்தில் காங்கேயம், சிவன்மலை போன்ற திருத்தலங்களில் தல விருட்சமாக உள்ளது.

இன்றளவும் கானோபாத்திரை மரமாக மாறிய அத்தொரட்டி மரம் பண்டரிபுரத்தில் தெற்கு பிரகாரத்தில் உள்ளது. பக்தர்கள் அம்மரத்தைச் சுற்றி வலம் வந்து வணங்குவதை வழக்கமாக கொண்டுள்ளனர். அம்மரத்திலிருந்து உதிர்ந்து விழும் தளிர்களைத் தங்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாக எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொள்கின்றனர். தென்புறத்துக் கோபுர வாயிலை 'ஸ்ரீ கன்ஹோபாத்ரா வாயில்' என்று பக்தர்கள் கொண்டாடுகின்றனர். அவள் மரமாகி விட்டாள்; ஆனால் அந்த மரமோ நமக்கு வரம் தரும் கற்பக விருட்சமாக மாறிவிட்டது!

ஸ்ரீ பக்தகானோபாத்திரை திருவடிகளே சரணம்!
ஜெய ஜெய விட்டல! ஹர ஹர விட்டல!!

கோபி பாலைவனத்தின் உருமாற்றம்

மங்கோலியாவில் உள்ள கோபி பாலைவனம் உலகின் மிகப் பெரிய குளிர் பாலைவனங்களில் ஒன்றாகும். மங்கோலியா மற்றும் சீனாவின் நிலப்பரப்பில் 13 லட்சம் ச.கிலோமீட்டர்களில் விரிந்திருக்கும் இப்பாலைவனம் பல சதாப்தங்களாக சிறிது சிறிதாக விரிந்து வந்தது. காலநிலை மாற்றம், அதிகப்படியான மேய்ச்சல், மரம் வெட்டல், புல்வெளிகளை விவசாய நிலங்களாக்குதல் போன்ற காரணங்களால், பசுமையான நிலங்கள் மெதுவாக மணலாக மாறின. நீண்ட காலம் இப்பிரச்னை உலகின் கவனத்தைப் பெரிதாக ஈர்க்கவில்லை.

1983ஆம் ஆண்டு வடசீனாவிலிருந்து எழுந்த ஒரு மிகப்பெரிய தூசிப்புயல், கோடிக்கணக்கான டன் மணல் துகள்களை நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்கள் கடந்து எடுத்து வந்து, தலைநகராம் பெய்ஜிங்கையே மூடியது. பகல் நேரத்திலேயே வானம் மஞ்சள் வண்ணக் கோலம் பூண்டது. சாலைகளில் போக்குவரத்து பாதிப்படைந்ததுடன், பொதுமக்கள் மூச்சுத்திணறல், கண் எரிச்சலால் அவதியுற்றனர். அச்சம்பவம் சீன அரசுக்கு ஓர் எச்சரிக்கை மணியாக அமைந்தது.

பாலைவனம் என்பது எல்லைப்பகுதியிலிருக்கும் ஒரு புவியியல் பிரச்னை மட்டுமல்ல; அது நாட்டின் தலைநகரையே முடக்கக்கூடிய தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார பிரச்னை என்பதை அரசு உணர்ந்தது. இதையடுத்து சுமார் 4500 கி.மீ. நீளத்திற்கு மரப்பாதுகாப்பு வளையங்கள் உருவாக்கப்பட்டன; கோடிக்கணக்கான மரங்கள் நடப்பட்டன; மணலின் எழுச்சியைக் கட்டுப்படுத்த வேலிகள் அமைக்கப்பட்டன. பாலைவனத்தில் வளரும் புதர்கள், புற்கள் நடப்பட்டன. அதிகப்படியான மேய்ச்சலுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஆனால் ஒரு பெரிய பிரச்னை தொடர்ந்தது.

பல பகுதிகளில் பாலைவன மண் கான்கிரீட் போல இறுகிப் போய் இருந்தது. மழை பெய்தாலும் நீர் மண்ணுக்குள் இறங்கவில்லை. மரக்கன்றுகளின் வேர்கள் பரவ இயலவில்லை. பல கோடி மரங்கள் நடப்பட்டாலும், அவற்றில் கணிசமானவை உயிர் பிழைக்கவில்லை. இருபதாண்டுகளுக்கும் மேலாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், எதிர்பார்த்த வெற்றி கைக்கெட்டாததாகவே இருந்தது.

அவ்வமயம் மங்கோலிய பாதுகாப்பு உயிரியல் அறிஞரான ஒலிவர்கண் பாதர், ஆஸ்திரிய சூழலியல் அறிஞர் பெட்ரா காட்சென்ஸ்கி, வனவிலங்கு மருத்துவரான கிரிஸ் வால்சர் உள்ளிட்ட பல ஆராய்ச்சியாளர்கள் ஒரு வித்தியாசமான கருத்தை முன்வைத்தனர். ‘இந்நிலத்தை மனிதன் மட்டுமே காப்பாற்ற முடியாது. ஒரு காலத்தில் கோபியின் சூழலை சமநிலையில் வைத்திருந்த ஃப்ரெஸ்வால்ஸ்கி காட்டு குதிரைகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதன் மூலம், இயற்கை தன்னைத் தானே சீரமைத்துக் கொள்ளத் தொடங்கும்'' என்று கூறினார். அது பலருக்கும் நம்ப முடியாத யோசனையாகவே தோன்றியது.

ஃப்ரெஸ்வால்ஸ்கி குதிரை என்பது சாதாரண குதிரையல்ல. உலகில் இன்று வாழும் ஒரே உண்மையான காட்டு குதிரையாகும் என பல உயிரியல் அறிஞர்கள் கருதுகின்றனர். வீட்டு குதிரைகளுக்கு 64 குரோமோசோம்கள் எனில், இவைகளுக்கு 66 குரோமோசோம்கள் உள்ளன. மங்கோலியர்கள் இக்குதிரையை ‘தாகி' என்று அழைக்கின்றனர். அதாவது ‘அடக்கமுடியாத குதிரை' என்ற பொருளாகும். 19ஆம் நூற்றாண்டு வரை கோபி பாலைவளத்தில் பெருமளவில் வாழ்ந்த இக்குதிரைகள், வேட்டையாடுதல், கால்நடை மேய்ச்சல் மற்றும் வாழ்விட அழிவு காரணமாக 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குள் இயற்கையிலிருந்து முற்றிலும் மறைந்து விட்டன. உலகில் மீதமிருந்தவை உயிரியல் பூங்காக்களில் இருந்த சில டஜன் குதிரைகளே.

அவைகளை மீட்டெடுத்து, பாலைவனத்தில் மீண்டும் சுதந்திரமாக விட, பல உயிரியல் விஞ்ஞானிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ‘பல தலைமுறைகளாக உயிரியல் பூங்காவில் வளர்ந்த குதிரைகளுக்கு காட்டில் வாழத் தெரியாது. கோபியின் மைனஸ் 40° குளிரையும், வறட்சியையும், ஓநாய்களையும் அவைகளால் சமாளிக்க இயலாது. உலகில் மீதமிருக்கும் இந்த இனமே அழிந்துவிடும் என்றனர். ஆனால் பெட்ராகாட் சென்ஸ்கி உள்ளிட்ட ஆய்வாளர்கள் பின்வாங்கவில்லை. ‘எல்லா வழிகளையும் முயற்சித்துவிட்டோம். இயற்கையை நம்ப வேண்டிய காலம் இது என்று வாதிட்டனர். இறுதியில் உலகின் பல உயிரியல் பூங்காக்களிலிருந்து குதிரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மங்கோலியாவிற்கு கொண்டுவரப்பட்டது.

பல மிருகநல ஆர்வலர்களும், ‘‘எழுதி வைத்துக்கொள்ளுங்கள் இந்த குளிர்காலத்துக்குப் பின் ஒரு குதிரை கூட மிஞ்சாது. இது முற்றிலும் கோமாளித்தனமான திட்டம்'' என ஆருடம்

சொன்னார்கள். அவர்கள் கூறியது போலவே, குளிர்கால ஆரம்பம் மிக மோசமாகவே இருந்தது. 40°C குளிர், பல அடி உயரம் பனி, உறைந்த நீர்நிலைகள், பசி, ஓநாய்களின் தாக்குதல் ஆகியவைகளால் சில குதிரைகள் உயிர் நீத்தன. சில பெண் குதிரைகளுக்கு கருச்சிதைவும் ஏற்பட்டது. இந்த பரிசோதனையை நிறுத்த, பலரும் கோரிக்கை வைத்தனர். ஆனால் அதன்பின் இயற்கை தனது அதிசயத்தை நிகழ்த்தியது.

பல தலைமுறைகளாக உயிரியல் பூங்காவில் வாழ்ந்து வந்திருந்தாலும், அவைகளின் காட்டு முன்னோர்களின் உள்ளுணர்வு மீண்டும் விழித் தெழுந்தது. விரைவிலேயே அவை தங்களுக்கான சமூக அமைப்பை மீண்டும் உருவாக்கின. வலிமையான வயது வந்த ஆண் குதிரை தலைவராக, அதைச் சுற்றி இரண்டு முதல் எட்டு பெண் குதிரைகளும், அவைகளின் குட்டிகளும் இணைந்து கூட்டமாக வாழத் தொடங்கின. அவற்றின் மரபணுக்களில் பதிந்திருந்த இயற்கை உள்ளுணர்வால் கூட்டுக் குடும்பமாக வாழ, அதுவே அவைகளின் உயிரைக் குளிர்காலத்தில் காப்பாற்றியது. குட்டிகள் உள்ளேயும் பெரிய குதிரைகள் கூட்டத்தின் வெளிப்புறத்திலும் நின்று பனிக்காற்றை எதிர்கொண்டதுடன், நெருக்கமாக நின்று உடல் வெப்பத்தைப் பகிர்ந்துகொண்டன.

பனி ஆறடி உயரம் படர்ந்திருப்பினும், தங்கள் வளமையான குளம்புகளால் அதை உடைத்து, கீழே இருக்கும் புற்களைத் தோண்டி உண்டன. உறைந்த ஏரிகளின் பனியை உடைத்து தண்ணீரைக் குடித்து தாகம் தீர்த்துக் கொண்டன. ஓநாய்களின் தாக்குதலை ஆண் குதிரைகள் எதிர்கொண்டு, பெண் குதிரைகளையும், குட்டிகளையும் பாதுகாத்தன. காட்டில் பிறக்காத விலங்குகளும், இயற்கை வழங்கிய உள்ளுணர்வை இழக்காதது கண்டு விஞ்ஞானிகள் வியந்தனர். சுமார் 400 கிலோ எடையுள்ள இக்குதிரைகள் ஒரு நாளில் 15 முதல் 20 கி.மீ. வரை மேய்கின்றன. அவை குதித்து ஓடுகையில் அவைகளின் குளம்புகள் மீண்டும், மீண்டும் இறுகிய மண்ணை மிதிக்கவும், கான்கிரீட் போல இருந்த மேற்பரப்பில் எண்ணற்ற உடைசல்களும், குழிகளும் உருவாக, மழைநீர் அதில் ஊடுருவ, பல ஆண்டுகளாக உறங்கிக் கிடந்த விதைகள் முளைவிட, புற்களும், புதர்களும் மீண்டும் வளர்ந்தன.

ஒவ்வொரு குதிரையும் நாளொன்றுக்கு 15 முதல் 20 கிலோ சாணத்தை வெளியேற்ற, சாண வண்டுகள் அதனை உருண்டையாக்கி பலநூறு மீட்டர் தூரம் இழுத்துச் சென்று மண்ணில் புதைக்க, அதனுடன் விதைகளும் மண்ணுக்குள் சென்றன. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான டன் இயற்கை உரம் கோபி முழுவதும் பரவின. மண்ணில் நுண்ணுயிரிகள் பெருகின; பூச்சிகள் தோன்றின; பறவைகள் வந்தன; அதனைத் தொடர்ந்து சிறிய பாலூட்டிகளும், பின்னர் பெரிய வேட்டையாடிகளும் திரும்பின. ஒரு குதிரையின் வருகையால் ஒரு முழு உணவுச் சங்கிலியே மீண்டும் உயிர்பெற்றது.

இன்று மங்கோலியாவின் கோபி பாலைவனத்தில் ஃப்ரெஸ்வால்ஸ்கி குதிரைகள் சுதந்திரமாக வாழ்கின்றன. உலகளவில் அவற்றின் எண்ணிக்கை 2500ஐத் தாண்டியுள்ளது. ஒரு காலத்தில் முற்றிலும் அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட குதிரை இனம்,இன்று உலகின் மிக வெற்றிகரமான வனவிலங்கு மீளறிமுகத் திட்டங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இது பாலைவனத்தின் கதையோ, குதிரையின் கதையோ அல்ல. இயற்கையை வெல்ல மனிதன் முயன்ற கதையும், இறுதியில் இயற்கையிடமிருந்தே தீர்வைக் கற்றுக்கொண்ட கதையும் இதுவே.

இயற்கை சொல்லும் வாழ்க்கைப் பாடம் என்னவெனில், ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயற்கை பதித்து வைத்திருக்கும் ஆற்றலைப் பற்றியது. சில நேரங்களில் நாம் சந்திக்கும் தோல்விகள், விமர்சனங்கள், தடைகள் நம்மை சோம்பி போக வைக்கிறது. 'என்னால் முடியாது', 'நான் திறமையானவனல்ல' என்று நம்மை நம்ப வைக்கிறது. ஆனால் அந்த குதிரைகளைப் போல நமக்குள்ளும், நம்மால் கண்டறியப்படாத திறமைகள், அறிவு, ஆற்றல் மற்றும் போராடும் சக்தி இருக்கலாம். முக்கியமாக இளைஞர்களே! உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுக்கொள்ளாதீர்கள்! உங்கள் திறமையை உங்களுக்குள்ளே தேடுங்கள்; சூழ்நிலை நம்மை பின்வாங்கச் செய்யலாம்; ஆனால் நமக்குள் இருக்கும் திறன்களை முழுமையாக அழித்துவிட இயலாது. சரியான வாய்ப்பும், முயற்சியும், நம்பிக்கையும் இருந்தால் உங்கள் DNAவில் உள்ள திறன் உங்களை வாழ்வில் சிகரத்தைத் தொடச் செய்யும். என்னால் முடியுமா? என சிந்திப்பதை விடுத்து, எனக்குள் இருக்கும் திறமையை நான் கண்டுபிடித்துவிட்டேனா? என சிந்தியுங்கள். நமக்குள் இருக்கும் சக்தியை தேடுவோம்! முயற்சிப்போம்! வெற்றி பெறுவோம்!

T.M. நடராஜன், சென்னை

திருவிளையாட்டம் நண்பர்கள் அமைப்பு 9ஆம் ஆண்டு விழா

திருவிளையாட்டம் நண்பர்கள் அமைப்பின் குடும்பத்துடன் கூடி மகிழும் விழா சென்னை விஜய் பார்க் ஹோட்டல் வளாகத்தில் 16.08.2026 அன்று சிறப்பாக நடைபெற்றது. திருவிளையாட்டம் சொந்தங்கள் பெரும் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர். குத்துவிளக்கேற்றி, தமிழ்த் தாய் வாழ்த்துடன் விழா மாலை 5.30 மணிக்கு இனிதே தொடங்கியது. நண்பர்கள் அமைப்பின் வழிகாட்டி திரு. கோ. தியாகராஜன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். செயலாளர் திரு. பாலமுருகன் அவர்கள் ஊரின் சிறப்பு பற்றி ஆடியோ மூலம் விளக்கினார். திரு.செல்வகுமார் அவர்கள் திருவிளையாட்டம் உறவினர் அமைப்பின் 2025–26 வரவு செலவு கணக்கை சமர்ப்பித்தார்.

முன்னதாக வேதாத்திரி மகரிஷி அவர்களின் எளிய யோகா பயிற்சி பற்றியும், டாக்டர் நல்லதம்பி அவர்கள் தத்துவ முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். உடற்பயிற்சி எப்படி செய்வது என்பதை நேரடியாக விளக்கினார். அனைவருக்கும் பயன் உள்ளதாக அமைந்தது.

மாநில தலைவர் KKR சுரேஷ் அவர்கள் மற்றும் ஆனந்தம் செல்வகுமார் அவர்கள் நல்லாசிரியர் விருது பெற்ற எழுச்சி மிகு நகைச்சுவை பேச்சாளர் மயிலாடுதுறை திரு.செல்வகுமார் அவர்கள் அனைவரும் சிறப்புரை, வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள். மேனாள் திருவிளையாட்டம் சங்க தலைவர் திரு.ராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள் பேசுகையில் அவர்களின் மலரும் நினைவுகள் மிக அருமையாக இருந்தது. சிறுமி ஒருவர் பரதநாட்டியம், வேலுநாச்சியார் வேடத்தில் ஒரு சிறுமி வசனம் பேசி அசத்தினார். மற்றொரு சிறுமி பாட்டு பாடி சிறப்பித்தார். சிறுவன் ஆத்திசூடி பேசி சிறப்பித்தார். மேலும் பல சிறுவர்கள் சிறுமிகள் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். போட்டிகளில் வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது திருவிளையாட்டம் சொந்தங்கள் பலரும் ஊரின் சிறப்பு பற்றி எடுத்துரைத்து சிறப்பித்தார்கள். மிக சுவையான இரவு விருந்துடன், திரு பிரபாகர் அவர்கள் நன்றி உரையுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

R. செல்வகுமார், கொடுங்கையூர்
9444071206

LIC HFL
LIC HOUSING FINANCE LTD

வீடு கட்டுவோர் மற்றும் வீடு வாங்குவோர் கவனத்திற்கு

சென்னை அனைத்து பகுதி, திருவள்ளுவர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள கார்குல மக்கள், தாங்கள் இருக்கும் பகுதி அருகில் உள்ள LIC HFL வட்டார அலுவலகம் மூலம் அனைத்து விதமான வீட்டுக்கடன், கல்வி மற்றும் திருமணத்திற்கு வீட்டு அடமான கடன், வர்த்தக கடன் எளிய முறையில் துரிதமாக எந்தவிதமான சேவை கட்டணம் இல்லாமல் பெற அணுகவும்.

30 ஆண்டுகள் அனுபவம் பெற்ற

V. அமிர்தகடேசன்

(Home Loan Counsellor)

செல்: 9443220893

திருவிளையாட்டம் நண்பர்கள் அமைப்பு குடும்பத்துடன் கூடி மகிழும் விழா 16.08.2026

சதாபிஷேக விழா!

நாள்: 05.08.2026 **இடம்: சிதம்பரம்**



எங்கள் பாசத்திற்குரிய பெற்றோர் அதங்குடி கூடலுட திரு. **கோ. சிவராமபிள்ளை** திருமதி. **சி. சாந்தகுமாரி** ஆகியோரின் 80ஆம் ஆண்டு நிறைவு சதாபிஷேக சுபமுகூர்த்தத்திற்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

மகன் - மருமகள்	மகள் - மருமகன்	பேரன்கள் - பேத்தி
சி. தனகோபால்	**சி. கிருத்திகா**	**த. காவ்யா**
பா. பிரியா	**த. விஜய்**	**த. அர்ஜுன்**
		வி. விகாஸ்

பஞ்சபுராணம் பாராயணம்

1. தேவாரம்

தோடுடைய செவியன் விடை ஏறி ஓர் தூ வெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே.

2. திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்
விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே.

3. திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கயிலை அறக்கட்டளை குழுவில் இணைய (குழு 10)

4. திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள் வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன் அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

பஞ்சபுராணம் பதிவு படிவம்

5. பெரியபுராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

மேலும் விபரங்களுக்கு,
www.kayilaiarakkattalai.org

Dr Kayilai Duraisamy
WhatsApp/Mobile 9445070511

Murugan Ramalingam
WhatsApp/Mobile 7358443401

இந்த பஞ்சபுராணத்தை காலை 6:00 மணி, மதியம் 12:00 மணி, மாலை 6:00 மணி ஆகிய மூன்று காலங்களிலும் பாடினால் இறைவன் அருளால் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். இது தவிர எப்போது வேண்டுமானாலும் பாடலாம். வயது வரம்பு இல்லை, குழந்தைகளும் பாடலாம். ராகத்துடன் பாடவேண்டும் என்பது கட்டாயம் இல்லை.

பஞ்சபுராணம் பாராயணமாக சொல்பவர்களுக்கு கயிலை அறக்கட்டளை மூலம் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கின்றோம்.

மண்ணை விட்டு மறைந்தாலும்
மனதை விட்டு போகவில்லை!

விசாலாட்சி மகாலிங்கம், திருச்சி

எல்லோர்க்கும் வழி சொன்ன களஞ்சியமே!
இதயத்தில் உறுதிமிக்க தைரியமே!!
இறைகலந்தாய்! ஒளி ஆனாய்!! வணங்குகிறோம்!!!
எந்நாளும் நும் ஆசிகேட்டு இறைஞ்சுகிறோம்!

இப்படிக்கு

M.முத்துக்குமரன்	சாந்தி கண்ணன்	ஹேமலதாசெழியன்
நளினிமுத்துக்குமரன்	V.கொளஞ்சி கண்ணன்	N.செழியன்

மற்றும்
பேத்திகள் & பேரன்கள்

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் :
17–05–1964

மறைவு :
05–10–2020

தெய்வத்திருமதி. K. விமலா கண்ணன்

சிதம்பரம் நகர முன்னாள் கவுன்சிலர், தி.மு.க.

பாசத்தின் பிரமாண்டமே! அன்பின் ஆளுமையே!
பண்பே பயனே! அன்பே அறனே! ஓய்ந்து விட்ட ஒளி விளக்கே
எங்களின் சேவைகள் மறுத்து, தேவைகள் தீர்த்த தேவதையே!
எங்களுக்கு எல்லாம் எது பிடிக்கும் என அறிந்து உடனளிப்பாய்
உணவாகினும், உடையாகினும், எதுவாகினும்....
மரணத்தின் வலியில் நீங்கள் துடித்ததை விட
எங்களை இனி யார் காக்க என கலங்கியதே அதிகம்.
எல்லாம் முடிந்து ஆண்டுகள் உருண்டது இன்னும்
வாழுகிறீர்கள் எங்கள் இதயங்களில் என்றும் மறையாமல் .....
மீளாதுயருடன் என்றும் உங்கள் பிரிவால் வாடும்.

கணவர் : R. **கண்ணன்,** Foreman (Rtd) TANGEDCO

20/8A, திருவள்ளுவர் தெரு, சிதம்பரம்.

மகள்: K. **கவிதா வெங்கடேஷ்** B.E.
மருமகன் : N. **வெங்கடேஷ்,** B.E.,
பேரன்: V.K. **மித்ரன்**
தாம்பரம், சென்னை.

மகன் : S. **சுதாகர்** B.E., MBA.,
மருமகள் : B. **சந்தியா சுதாகர்,** BBA., B.A. (Hindi)
பேத்தி: S. **ஸ்ரீநிகா**
கேளம்பாக்கம், சென்னை

மற்றும் **உறவினர்களும், நண்பர்களும்.**

21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

K.N.A.

B. நடராஜன் பிள்ளை

N. ஞானாம்பாள்

கீரமங்கலம் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்

புலவர். கீ.ந. அருள்பிரகாசம், எம்.ஏ.பி.எட்.,

எங்களை விட்டு 13.09.2005 பிரிந்த அன்புத் தந்தையே உங்களின் நினைவாக இவ்வாண்டும் நெஞ்சுருக நினைத்து வழிபடுகின்றோம். என்றென்றும் உங்களின் ஆசீர்வாதம் எங்களுக்கு கிட்டிட வணங்குகிறோம். பிரிவால் வாடும்.... நினைவில் வாழும்....

இணைந்து வணங்கும்

திருமதி கிருட்டிணவேணி அருள்பிரகாசம்

"ஞானராசர் குடில்"

No. 8, திருவள்ளுவர் முதல் குறுக்குத் தெரு,

முகப்பில் ஸ்ரீ வல்லப கணபதி திருக்கோயில்,

பூதாமூர், விருத்தாசலம்

செல் : 97882 58389

அருள் இராமலிங்கம், B.E., M.I.S.T.E.,

திருமதி. உஷா இராமலிங்கம், M.Sc., B.Ed.,

8/40-B2, Kasthuribai Nagar 2nd Main Road,

Adyar, Chennai - 600 020.

Cell : 98418 13589, 80123 65908

திருமதி. சுஷ்மிதா விஷாலினி, B.Arch.,

திரு. செ. முகுல்வசந்த், B.E., MBA.,

செம்பாக்கம், சென்னை – 600 073

"PENTAGONS" (ENGINEER & ARCHITECT)

6-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03.05.1964

மறைவு
24.09.2020

தெய்வத்திரு. **M. மனோகரன்** M.Com.,
(ரைஸ்மில் உரிமையாளர்),
வ.உ.சி தெரு, கழுக்காணி முட்டம்.

அன்பு என்றால் நீங்கள்
ஆசை என்றால் நீங்கள்
இரக்கம் என்றால் நீங்கள்
ஈசன் என்றால் நீங்கள்
உறவு என்றால் நீங்கள்
ஊக்கம் என்றால் நீங்கள்
எளிமை என்றால் நீங்கள்
ஏற்றம் என்றால் நீங்கள்
ஐவகை பூதம் என்றால் நீங்கள்
ஒளி என்றால் நீங்கள்
ஓவியம் என்றால் நீங்கள்
ஔடதம் என்றால் நீங்கள்

இப்படி எல்லாமாக இருந்த நீங்கள் இன்று இல்லை என்றாலும்
உயிர் உள்ளவரையில் உங்கள் நினைவில் கண்ணீருடன் வாழும்
உங்கள் அன்பு மனைவி

S. புஷ்பலதா மனோகரன்
"மனோதமிழ் மாளிகை"
தங்கவேல் வாண்டையார் நகர், கழுக்காணிமுட்டம்.
Cell : 6383253423

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் :
29–03–1966

மறைவு :
28–08–2024

மயிலாடுதுறை மாவட்டம், மணிக்கிராமம் தெய்வத்திரு. இராம. விஸ்வநாதன் பிள்ளை நலமுடன் திருமதி. சாரதா அவர்களின் மகனும், திருமதி. S. ரேவதி அவர்களின் கணவரும், எங்களது தந்தையாருமாகிய சீனிவாசபுரம் காந்திஜித் தெருவைச் சேர்ந்த

திரு. Er. Rtn V. சுந்தரமூர்த்தி

(CIVIL ENGINEER, President (2022 - 23)
Rotary Club of Mayiladuthurai Kings)

என்றும் தங்கள் நினைவில் வாழும்.

மகள் – மருமகன்

G. சுவேதா - கோவிந்த்,
சிங்கப்பூர்.

மகன் – மருமகள்

S. சுரேந்தர் - ஆர்த்தி,
சென்னை.

பேரன் – பேத்தி

சு. ஆதிரை - சு. மித்ரன் - கோ. வேதா

மற்றும் குடும்பத்தினர்.

MARUTHI®
LET THE SUN PAY YOUR EB BILL
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR ROOFTOP SYSTEM
GET ₹0 ELECTRICITY BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405/2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month 15th / 16th September 2026

Published by: K. SHANMUGAM, on behalf of the Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by: M. NATARAJAN** at **Mayur Printers**, No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024, **Editor: VANAJA ELANGOVAN**